THE LIFE OF

# WILLIAM. E. GLADSTONE.

## வில்லியம் எவர்ட்

# கிலாட்ஸ்டன் சரிதம்.

---

BY

K. VENKATARAMA AIYAR, B. A.,

*Late of the Town High School, Kumbakonam.*

PUBLISHED BY

T. KRISHNASWAMY AIYAR,

*Hindu Educational Trading Co.,*

*Kumbakonam.*

---

**1915.**

*Author's Copy Right]* *[Price Annas* 8. 10

வில்லியம் எவர்ட்

# கிலாட்ஸ்டன் சரிதம்.

இது

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயரா யிருந்த

கே. வேங்கடராமையர், பி. ஏ., அவர்களால்

இயற்றப்பட்டு,

---

கும்பகோணம் ஹிந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனி

தி. கிருஷ்ணசாமி ஐயரவர்களால்

பிரசுரம் செய்யப்பட்டது.

1915.

காபிரைட் கிரந்தகர்த்தாவைச் சேர்ந்தது.

இதன் விலை அணா 8.

The Title page & Preface Printed at the
" SRI KRISHNA VILASA PRESS, " KUMBAKONAM.

61362

# PREFACE.

——:O:——

My object in writing the life of Gladstone in Tamil is to impress on my countrymen the three lessons which that life teaches. They are :—

(1) The mere possession of wealth without education does not help one to become useful to one's compatriots in these days.


(2) Wealth and education divorced from religion are equally useless.

(3) The being called to a position of authority is not for self-aggrandisement.

Though Gladstone, as Lord Salisbury said, was "a great Christian man," his sympathies were not confined to his co-religionists. There was a catholicity in all his doings that we do not meet in ordinary individuals. The life of Gladstone whether at home or in the Mother of Parliaments is worth very careful study. "His life was a singularly noble and stainless one, and he must ever remain one of the great figures in the history of his country."

It is a pity that in spite of the very great care bestowed on the correction of proofs by my friend Mr S. Venkatarama Aiyar of the Town High School and myself, serious errors are still to be found On page 33 in the first line, the word திறமையை has been omitted. In many places, the punctuation marks as also consonantal marks have been omitted. The maps promised in the body of the book are not yet ready and thinking that it would be useless to wait for them, the book is sent out of the press. The illustrations, it is hoped, will commend themselves to the readers.

KUMBAKONAM, 9--10--15. *K. Venkatarama Aiyar.*



வில்லியம் ஈவர்ட் கிலாட்ஸ்டன்.

# வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன்.

" அறனறிந்தான் றமைந்த சொல்லானெஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித்துணை."—

அரசனாற் செய்யப்படும் அறங்களை அறிந்து, தனக்கேற்ற கல்வியால் நிறைந்தமைந்த சொல்லையுடையவனாய் எக்காலத்தும் வினைசெய்யுந் திறங்களை அறிந்தவன் அரசனுக்கு ஆலோசனைக்கு ஏற்ற துணையாவான்" என்று திருவள்ளுவர் சொல்லிய அரசநீதிக்கு ஒத்த அமைச்சர் வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் என்பவரே. மாட்சிமை தங்கிய நமது சக்ரவர்த்தினி விக்டோரியா அவர்களுக்கு நான்கு முறையில் மந்திரியாகவும், அறுபது வருஷம் பார்லிமெண்டு மகாப்பிரதிநிதி சபையில் மெம்பராயும், மந்திரி உத்தியோகத்தைப் பெறுவதற்குமுன் அனேக உத்தியோகங்களிலே தன் ஒப்புயர்வற்ற கல்வித்திறமை, நடுவுநிலைமை ஊக்கம், சொல்வன்மை, முதலிய உத்தம குணங்களால் எவராலும் வியக்கப்பெற்றுமிருந்த கிலாட்ஸ்டன் என்னும் ஸ்ரீமான் சரித்திரத்தைவிட அரசநீதி, உலகநீதி இவற்றை நமக்குச் செவ்வையாய் விளக்கக்கூடியது வேறொன்றுமில்லை யென்றே துணிவாய்ச் சொல்லலாம். ஆங்கில அரசாட்சியின் உயர்ச்சி ஹிந்துக்களுடைய உயர்ச்சியாம்; அதன் தாழ்ச்சி நம்மவருடைய தாழ்ச்சியாம். இவ்வாறு காரியங்கள் அமைந்திருப்பதினால் ஆங்கில அரசாட்சிக்கு அழியாப்புகழ் அளித்த அபூர்வ புருஷனான கிலாட்ஸ்டன் என்னும் மகானுபாவன் சரித்திரம் நம்மவருக்குப் பயன்

படாமற் போகாதென்ற உறுதிப்பாட்டை மேற்கொண்டே இவர் சரித்திரத்தை ஒருவாறு எழுதப்பிரவேசித்தோம். ஆங்கிலதேச சரித்திரமும் கிலாட்ஸ்டன் சரித்திரத்தோடு கலந்தேவரும். ஹிந்துக்கள் அனேகருக்கு ஆங்கில சமஸ்தான சம்பிரதாயங்கள் பூரணமாய்த் தெரியக்கூடாமையால் ஆங்காங்கு தேசசரித்திரத்தைச் சிறிதுவிரித்துச் சொல்லும்படியும் நேரிடும். இப்புத்தகத்திற் சேர்த்திருக்கும் தேசபடங்களை நன்றாய்ப்பார்த்து வைத்துக்கொண்டாலன்றி இங்குக்கூறும் விஷயங்களைத் தெளிவாய் உணரமுடியாது; ஆதலின் படிப்போர் அனைவரும் படங்களை நன்றாய் மனத்திற் பதியவைத்த லவசியமானது.

## கிலாட்ஸ்டன் ஜனனம்.

ஆங்கில தேசத்தின் வடமேற்குப் பாகத்தில் லங்காஷைர் என்று ஒரு மாகாணமிருக்கின்றது. அதன் முக்கிய துறைமுகப் பட்டணம் லிவர்பூல். உலகத்தில் விளையும் பருத்தியின் பெரியபாகம் லிவர்பூல் துறையில் இறக்குமதி செய்யப்பட்டு லங்காஷைரிலுள்ள நெசவுத் தொழில் இயந்திரசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. லிவர்பூல் துறையிலுள்ள நீராவிக் கப்பல்கள் கணக்கிடக் கூடியவையல்ல. நாகரீகமுள்ள எந்தச் சாதியாருடைய கப்பல்களையும் ஆங்கே பார்த்தலாகும். அங்குள்ள வியாபாரிகள் கோடிகோடியான திரவிய முடையவர்கள். இந்தச் சரித்திர நாயகரான வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டனுடைய பிதா, லிவர்பூல் பட்டணத்தில் ஒரு பிரபல வியாபாரி. 1809ஸு டிஸெம்பர்மீ 29உ லிவர்பூலிலே தன் பிதாவினுடைய மாளிகையில் வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் ஜனனமானார். பிதாவுக்கு 45-வது வயதில் இந்தப் புண்ணிய புருஷர் பிறந்தார். நாற்பத்து

ஐந்தாவது வயதில் நம்மவர் நரைதிரைகளால் உருமாறி உடல்வலி, மனத்திட்ப முதலியன குறைந்து கவலையுற்றவ ராய் ஊணுறக்கங்களைத் தவிர்த்து வேறு தொழிலொன்றுஞ் செய்ய இயலாதவராயிருத்தலுண்டு. ஆங்கிலபூமி செய்த புண்ணியத்தால் அங்குள்ள ஜனங்கள் 45-வது வயதில் யவ்வன முடையவர்களாயும், மனவெழுச்சி, பொருள் தேடு முயற்சி முதலான இம்மையிலே சுகங்கொடுக்கக் கூடிய நற்குணங்க ளமைந்தவர்களாயு மிருக்கிறார்கள். சரித்திர நாயகருடைய பிதாவும் அவ்வாறே இருந்தாரென்று தெரிய வருகிறது. தந்தையைப்போலவே தாயும் இவருக்கு ஏற் பட்டது பூர்வ ஜன்ம பலன் என்று நினைத்தல் வேண்டும். பெற்றோர் விவேகிகளாக அமைவது எத்துணைப் பெரும் பாக்கியம்! இந்தப்பாக்கியம் வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்ட னுடையதா யிருந்தது.

## கிலாட்ஸ்டனுடைய பாலப்பருவம்.

ஆங்கிலக் குடும்பத்திலே பிறந்த ஐசுவரியவான்கள் பெரும்பான்மையரும் கல்விப்பயிற்சிமிகுந்தவராகவே இருப் பார்கள். ஐசுவரியம் ஏறஏற நாகரீகமும் உயர்ந்தேஇருக்கும். வீட்டிலுள்ள அற்பவேலைக்காரர்களும் தம்யஜமானைப்போ லவே கல்வி கேள்விகளுடையவர்களாக அமைந்திருப்பார் கள். யஜமானனுடைய புத்திரர்கள், புத்திரிகளைத் தீய வழி யிற் செல்லாமற் பாதுகாக்குந் திறமையுடையவர்களாகவே வேலைக்காரர்களுமிருப்பார்கள். யஜமானனுடைய மான அவ மானங்கள் தம்மதென்றே எண்ணிச் சேவகர்களும் நடந்து வருவார்கள். கனவான்கள் வீட்டில் எழுதப்படிக்கத் தெரி யாதவர்களைச் சேவகத்தில் வைத்துக் கொள்வதில்லையாம். கிலாட்ஸ்டனுடைய வீடும் இவ்வாறு அமைந்திருந்தது. பிதா

பெரிய வியாபாரி; தினந்தோறும் லக்ஷம் லக்ஷமாயுள்ள சரக்குகளை ஏற்றுமதி செய்தும் இறக்குமதி செய்தும் கணக்குகளைக் கண்கொட்டாமற் பரிசீலனை செய்தும் வந்தார். ஒவ்வொரு வேலைக்கும் காலவரையறை யுண்டு. பெற்ற புதல்வர் புதல்விகளுடைய க்ஷேமத்தை எள்ளளவேனும் கவனிக்கச் சாவகாச மில்லாதவர்களாக நம்மவர் பலர் இருப்பதுபோல ஆங்கில கனவான்கள் இருப்பதில்லை. தொழிற்சாலை வேலைகள் தீர்ந்து வீடு வந்தவுடன் குடும்ப விசாரணையையும் செவ்வையாய்ச் செய்வது ஆங்கில கனவான்களுக்கு நித்தியகருமானுஷ்டானம்போல ஏற்பட்ட காரியம். அறத்தையும் இன்பத்தையும் இம்மையிலே பயக்கத்தக்க பொருள் தேடும் முயற்சியிலே கணவன் காலத்தைச் செலுத்தும் போது, அவன் மனைவியாகிய இல்லக்கிழத்தி ஆடை ஆபரணங்களிலேயே மனத்தைச் செலுத்திக் குடித்தனக் காரியங்களை மறந்தவளா யிருத்தலில்லை. "உயிர்த்துணை" என்னும் பெயர் ஆங்கிலச் சீமாட்டிகளுக்கே ஏகதேசம் பொருத்தமான நாமம். "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்ற குறள் இங்கு கவனிக்கத்தக்கது. உயர்குலப் பெண்கள் ஆண்மக்களைப்போலவே கல்வித் தேர்ச்சியுடையரா யிருத்தலாலே தங்கணவருடைய காரியங்களின் மருமங்களை யெல்லாந் தெரிந்துகொண்டு எவ்வெக்காலத்தில் எந்த எந்தமுயற்சியிலே கணவர் பிரவேசித் திருந்தாலும் அவ்வவற்றிலே கிடைக்கும் லாப நஷ்டங்களுக்குத் தாமும் உத்தரவாதிகளென்பதைச் செவ்வையாயறிந்து கணவருடன் எல்லாவகையிலும் ஒத்தே நடந்து வருவார்கள். வீட்டுக் கவலை புருஷருக்குப் பெரும்பான்மையு மிராது. புதல்வர் புதல்விகளு

டைய நல்லொழுக்கம், கல்வி, தேக செள்க்கியம் முதலிய வற்றைக் கண்கொட்டாமற் பார்த்து வருவது உயிர்த்துணையின் கடமை யென்றே நினைத்துப் புருஷர் பொருள் தேடுவதைக்கவனித்து வருவார். மதிகெட்ட மனைவியரை மணம் புரிந்தால் மானிடருக்குச் சுகமெங்கே? வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டனுடைய மாதா உத்தமமான பெண்மணி. தன் கணவருக்கு இருக்கும் வேலைகளையறிந்து குடித்தனக் காரியத்தைத் தானே கவனித்து வந்தாள். பொருள் விசாலமுள்ள இடத்திலே புத்திவிசாலமும் பொருந்தியிருத்தல் இயல்பு. சரித்திர நாயகரும், அவர் சகோதர சகோதரிகளும் வறுமை யென்பது இன்னதென்று அறியாதவரா யிருந்ததனாலே பேரும் புகழும் பெருகக் கூடிய நெறியிலேயே வளர்க்கப்பட்டு வந்தனர்.

"படிப்பில்லாதவர் மனிதரிற் பதருக் கொப்பாவர்" என்பதை ஆங்கில நாட்டார் உறுதியாய்க் கைப்பற்றின அளவு இதர நாட்டார் உணர்ந்தாரென்று எண்ண இடமில்லை. எத்துணைச் சொற்பமான வருமான முள்ளவர்களும் தம் மக்களுக்குக் கல்விபயிற்றுவிப்பதில் விரயமாகும் பொருளை வீணென்று எண்ணுதல் இல்லை. கிலாட்ஸ்டனுடைய மாதாபிதாக்களுக்குப் பொருட் குறைவபாடு எள்ளளவுமில்லாமையாலே கல்விபயிற்றுவித்தலுக்குத் தாராளமாய்ப் பணத்தை இருமுது குரவரும் செலவு செய்தார்கள். இக்காலத்தில் நமது நாட்டில் [secular education] லௌகிகப் படிப்புமாத்திரமே கவனிக்கப்பட்டு வருகிறது. கிலாட்ஸ்டன் கல்விபயில ஆரம்பித்தகாலத்தில் ஆங்கிலநாட்டுப் பாடசாலைகளில் இம்மைக்கு வேண்டியவற்றைக் கற்பிப்பதோடு மறுமைக்கு இன்றியமையாத பைபில் பாடமும்

தினந்தோறுங் கற்பிக்கப்பட்டுவந்தது. சிறுவர் சிறுமியர் அனைவருக்கும் தம்முடைய மதக்கொள்கைகளும் மதாசாரியார்களுடைய சரித்திரங்களும் செவ்வையாகப் புகட்டப்பட்டு வந்தன. இவ்விதமாய்ப் பாடசாலைகள் அமைந்திருந்தபடியால் சிறுபிராயத்திலேயே தெய்வபக்தியுண்டாகி வயது முதிர முதிரப் பக்தி சிரத்தைபெருகி ஆங்கில ஜாதியார் மேன்மைபெற்று வந்திருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டுத் தாய்மார் தமது பெண்களுடன் பேசுங் காலத்திற் சரீரத்திலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றினுக்கும் என்ன என்ன ஆபரணங்கள் தேவை என்றும், எவ்வித மான ஆடைகளில் சிறுமியர்க்குப் பிரியமென்றும், எவ்வித மான கணவர்களைத்தாம் விரும்புவாரென்றும் விசாரணை செய்வது வாடிக்கையே ஒழிய மறுமை ஸம்பந்தமான எந்தப்பேச்சையும் பேசமாட்டார். தம்முடைய மௌட்டியத்தையே தம்மக்களுக்கும் வற்புறுத்திப் புகட்டிவருவதனால் வருவாய்க்குத்தக்க செலவு செய்யவேண்டுமென்ற ஞானமே பெண்கள் பலருக்கும் நமது நாட்டிற் போதிக்கப்படுவதில்லை. இது பெரும் பாவமல்லவா? ஆங்கிலத்தாய்மார் தமதுமதத்தின் கொள்கைகளைப் பூரணமாய்க் கற்றவராயிருத்தலால் தம்மக்களுக்கு அடுத்தடுத்து மதாசாரியருடைய சரித்திரத்தையும், உத்தம குணங்களையும் போதித்துச் சிறுபிராயத்திலேயே நன்னெறிகளைக் கற்பிக்கின்றார்கள். எவ்வெக்காலங்கள் கடவுள் வழிபாட்டிற்குக் குறிப்பிடப்பட்டனவோ அவ்வக்காலங்களிலே தோத்திரங்களைச்சொல்லியான பின்னரே மறுகாரியஞ்செய்ய இடங்கொடுக்கப்படும்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்" என்றது இங்கு கவனிக்கத்தக்கது.

கிறிஸ்தவர்களுக்குள் ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்குப் போதல் கட்டாயமான காரியமாயிருத்தலும் ஒருவாறு தெய்வபக்தி யுண்டாதலுக்கு ஏதுவா யிருக்கின்றது. தக்கோர் குடும்பத்திலேபிறந்த சிறுவர் சிறுமியர் மழலைச்சொல் மாறுமுன்னமேயே தோத்திர பாடங்கள் கற்றவராயும் இயேசுவின் சரித்திரமும் பெருமையும் அறிந்தவராயு மிருப்பார். "கல்விக்கழகு கசடறமொழிதல்" என்றாலும் தெய்வபக்தியில்லாத கல்வி இம்மையிலாவது மறுமையிலாவது இன்பம் பயக்காது. கிலாட்ஸ்டன் சிறுபிராய முதற்கொண்டே பைபிலைச் செவ்வையாகக் கற்று அதனிலுள்ள நுட்பமான பொருள்களை ஐயந்திரிபற உணர்ந்தவரானார்; ஆனதுபற்றியே மடாதிபதிகளும் மதவிஷயங்களில் அவருடன் எதிர்த்து வாதாடுந் திறமை யில்லாதவராக இருந்தார்கள். பைபிலில் ஸந்தேக முண்டாயின் கிலாட்ஸ்டனைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினவர் பலர்.

## கிலாட்ஸ்டனுடைய மாணவப்பருவம்.

வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டனுடைய படிப்பின் அபிவிருத்திக்குத்தக்க ஏற்பாடுகள் 1821-ம் வருஷம் வரையில் செய்யப்பட்டன. இக்காலத்தில் எலிமெண்டரி [பால போதத்திற்குரிய] பாடசாலைகள் என்று சொல்லப்படும், பாடசாலைகளில் 12-வயது வரையில் கிலாட்ஸ்டன் லிவர்பூலிலே கல்விபயின்று வந்தார். மிகுந்த ஊக்கத்துடன் படித்தாரென்பதிற் சந்தேகலேசமில்லை. மாதா பிதாக்களும் இவ்வருமைப் பிள்ளையின் கல்விப்பயிற்சியைக் கவனித்தே வந்தனர். பாலபோதம் முடிந்தவுடன் உயர்தரப்படிப்புக்கு வேறு இடத்திற்குக் கிலாட்ஸ்டனை அனுப்பவேண்டியதாயிற்று. ஏழைகள் ஸர்வகலாசாலைப் [Uni-

versity] படிப்புக்கு ஆசைப்படுவது முடவன் கொம்புத்தே னுக்கு ஆசைப்படுதல் போலாம். ஸர்வ கலாசாலைப்படிப் புக்குத் தனவிரயம்மிகுதி. ஏழைகளுக்குப் பெரும்பாலும் அஃது எட்டாதபாக்கியம். "தம்மிற்றம் மக்கள் அறிவுடை மை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லா மினிது"—தம்மக்க ளறிவுடைமையானது தம்மைவிட உலகத்துயிர்களுக்கெல் லாம் இனிதாயிருக்கு மென்பது பெரியோர் கொள்கை. "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த, மக்கட் பே றல்லபிற"—ஒருவன் பெறும்பேறுகளுள் அறியவேண்டு வன அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லது பிறபேறு களையாம் மதிப்பதில்லை—என்று தமிழ் வேதங்கூறியுள் ளது. இந்த இரகசியம் ஆங்கில நாட்டாருக்குப் புலப்பட் டிருக்குமளவு இந்திய நாட்டார் அறிந்திருக்கிறாரென்று சொல்லமுடியாது. கிலாட்ஸ்டன் பிதா மிகுந்த ஐசுவரிய வானும் ஞானவானுமு மிருந்தமையால் தன் மகனுக்கு உயர்தரப்படிப்பைத் தரவேண்டுமென்று நிச்சயஞ் செய் தார். பாலபோதப் பாடசாலைக்கும் ஸர்வ கலாசாலைக்கும் மத்தியில் ஸெகண்டரி அல்லது மத்திமப்படிப்பு என்று ஒன் றுண்டு. ஸெகண்டரி பாடசாலையிற் கல்விபயிலாமல் யூனிவர் ஸிட்டி அல்லது ஸர்வகலாசாலைப் படிப்புக்குப் போதல் சாத்தியமில்லை. இந்த மத்திமப்படிப்புக்கு என்று ஸ்தாபிக் கப்பட்ட பிரசித்த பாடசாலைகள் ஆங்கில நாட்டில் அனேக முண்டு. அவற்றில் முக்கியமானவை—ரக்பி, ஈட்டன், ஹா ரோ, வின்செஸ்டர் முதலியன. இவற்றிற்குப் "பப்லிக் ஸ்கூல்ஸ்" என்று பெயர். சரித்திர நாயகர் 12-வது வய தில்[1821] ஈட்டன் என்னும் மத்திமபாடசாலைக்கு அனுப் பப்பட்டார்; மாதா பிதாக்களுடைய கண்காணிப்பு மாறி வித்தியா குருவினுடைய பார்வையில் வைக்கப்பட்டார்.

படத்தில் ஈட்டன் என்னுமிடத்தைப் பார்க்கவும். ஜன்ம பூமியாகிய லிவர்பூலிலிருந்து வெகுதூரம். உற்ருர் உறவினரை விட்டுத் தனியே முன்பின் பரிச்சய மில்லாதவரோடு வசித்தல் வேண்டும். 1821-ம் வருஷத்தில் லிவர்பூலுக்கும் ஈட்டனுக்கும் புகைவண்டி கிடையாது. தபால் வண்டியிற்ருன் வந்திருக்க வேண்டும். நிரம்ப சிரமமாய்த் தானிருந்திருக்கும். அழியாத பொருளாகிய கல்வியை யடைவதற்குப்படும் சிரமம் அதிக மென்னலாமா? ஈட்டன் என்னுமூர் மிகச்சிறியது. 1901-ம் வருஷ ஜன ஸங்கியைக் கணக்கில் 3301 குடிகளையுடைய தென்று சொல்லப்பட்டிருக்கிறது. தேம்ஸ் என்னும் நதியின் வடகரையிலுள்ளது. தென்கரையில் விண்ட்ஸர் என்னும் பட்டினமுள்ளது. விண்ட்ஸரில் ஆங்கில பூபதிகளின் பிரசித்தமாளிகை ஒன்றுளது. அதற்கு விண்ட்ஸர் காஸில் என்றுபெயர். கி-பி-1066-ம் ஆண்டில் ஆங்கில நாட்டிற்கு அரசனுய் வந்த வில்லியம் - தி - கான்கரர் என்பவரால் முதலில் கோட்டையாக அமைக்கப் பெற்றுப் பின்பு பல அரசர்களால் திருத்திப் புதுப்பிக்கப்பட்டு இக்காலத்திலும் ஆங்கில ராஜர்களுக்கு முக்கியவாச ஸ்தானமாயுள்ளது விண்ட்ஸர் காஸில். கட்டிடம் அமைந்திருக்கும் பூமியின் விஸ்தீரணம் 12 ஏகராவாம். விண்ட்ஸருக்கு அருகாமையிலே சிறு அரணியம் ஒன்றுளது. தெம்ஸ் நதியின் தென்கரையில் விண்ட்ஸரும் வடகரையில் ஈட்டனுமாக ஏற்பட்டதில் ஒரு விசேஷமுண்டு. ஈட்டனிலே கல்விபயிலவரும் மாணுக்கர்களுக்கு ராஜதரிசனம் அடிக்கடி கிடைக்கலாம். தரிசனத்தாலே பக்தியும் விருத்தியாகலாம். ஈட்டனிலே படித்தவர்கள் தம்மரசருக்கு என்றுங்கேடுநினைத்தவரன்று. ஈட்டனை ராஜபக்தியைவிளைவிக்கும் புண்ணியபூமி என்னலாம். வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்

டன் என்பவருடைய ராஜபக்தியின் மேன்மை ஆங்கில சரித்திரம் படித்த எல்லோருக்கும் நன்ருய்த் தெரியும். குடிகளின் மேன்மையை நோக்கி அவர்கள் சுதந்திரங்களை விசாலப்படுத்தவே ஆயுள் முழுதையும் செலவிட்ட கிலாட்ஸ்டனை ராஜபக்தி குன்றினவரென்று அவருடைய பரம விரோதிகளும் சொல்லத்துணிந்தாரில்லை.

பெரிய நகரங்களிலே பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படுவதிலும் சிற்றூர்களில் ஏற்படுவது நலம். ஈட்டனையே அதற்குதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆற்றங்கரையில் அமைந்திருப்பதே ஒரு அழகு. சுத்தமானகாற்று எக்காலத்திலும் வீசிக்கொண்டிருக்கும். மணமுழக்கும் சவப்பறையும் செவியிற்படா. கூத்தாடிகள், குரங்கோட்டிகள் கூடுமிடமல்ல. வானப்பிரஸ்தாச்சிரமத்தி லுள்ளவர்களுக்கு ஏற்ற இடம். "குருகுலவாஸம்" என்று புராணங்களிற் சொல்லியதற்கு ஒத்த இடம். கல்விபயில்வதைவிட்டு வேறு வியாபாரங்களிலே புத்தியைச் செலுத்துவதற்கு இடமில்லை. மாணக்கர்கள் சாப்பிடுவதற்கும் பாடசாலையிலேயே இடங்கள் அமைக்கப் பெற்றது. தேகப்பயிற்சிக்கு வேண்டிய பூமிகளும் நிரம்ப உண்டு. உபாத்திமார் குலத்தாலும், ஒழுக்கத்தாலும், கல்வியாலும் பிரசித்தமடைந்தவர். தீய வழியில் எள்ளளவேனும் மாணக்கர்கள் செல்ல இடமே கிடையாது. சிறிய குற்றங்களுக்கும் சிக்ஷைகள் பலமாக உண்டு. இப்படிப்பட்ட இடத்தில் கல்வியிலே தேர்ச்சியடையாதவர்கள் எங்கும் உருப்பட மாட்டார்கள்.

இவ்விதப் பாடசாலைகளுக்குத் தலைமை உபாத்தியாயரா யிருப்பவர் ஆசாரியாபிஷேகம் பெற்ற குருக்கள் மார்களில் ஒருவராக இருப்பார். பாடசாலைக் கட்டிடத்தைச்

சேர்ந்தாற்போலக் கோயிலுமுண்டு. தினந்தோறும் மாணுக்கர்கள் கோயிலுக்குப் போகவேண்டியது அவசியம். அங்கு மாணுக்கர்கள் சுயமதம் இத்தகைய தென்பதைச் செவ்வையாகக்கற்றுக்கொள்வார்கள். தெய்வபக்தியின் விதை இங்கும் விதைக்கப்பட்டு பக்திப்பயிர் தழைத்தோங்க ஏதுக்கள் உண்டு. இம்மையிலும் மறுமையிலும் மாணுக்கர்கள் மிகுந்த நன்மையை அடையும் வகைகள் பாடசாலை அதிகாரிகளாலே தேடப்படும் இருஷியாச்சிரமம்போன்ற இடங்கள் மனமுயற்சிக்கு ஏற்ற சாதனங்களே யல்லாமல் மற்ற இடங்கள் அல்ல.

ஈட்டன் பாடசாலை கி-பி-1440-ம் ஆண்டில் ஆங்கில நாட்டரசர் ஆருவது ஹென்ரி என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டு அவரால் நன்கொடைகள் பெற்றது. எல்லாத் தருமங்களிலும் வித்தியாதருமமே மேலானதென்பதைப் பூர்வகாலத்தி லுள்ளவர்களும் அறிந்துள்ளார். இந்தப் பாடசாலைக்கு விடப்பட்டிருக்கிற மானியங்கள் முதலியவற்றிலிருந்து வருஷம் ஒன்றிற்கு 20,000 பவுன் கிடைக்கின்றது. ரூபாவாகக் கணக்கிட்டால் மூன்று லக்ஷம் ரூபாவாகின்றது. மாணுக்கர்களிலே பெரும்பாலாரும் சம்பளங் கொடுத்துப் படிக்கின்றவர். அதமபக்ஷம் ஒவ்வொரு மாணுக்கனுக்கும் ரூ. 2000 வருஷவாரி செலவாகும். அபரிமிதமான பணமுடையோர்க்கு மாத்திரம் ஈட்டன் பாடசாலையிலே கல்விபயில்வல் சாத்தியம். அந்தஸ்துக்கு ஏற்றபடி கல்விபயில இடங்கள் உண்டு. புத்திசாலிகளாயுள்ள ஏழைகளுக்கு இனமாகக் கல்வி கற்பிப்பது முண்டு. மாணுக்கர்கள் ஒருங்குகூடி விஷயங்களைத் தருக்கித்துப்பேசப் பெருங்கூடமும் அற்புதமான கிரந்தங்கள் சேர்த்து வைக்கப்பட்ட புஸ்தகசாலை

ஒன்றும் ஈட்டனில் உண்டு. சென்னை ராஜதானியில் கல்வித் தானம் பெரிதென்றெண்ணித் தன்பொருளிலே விசேஷ பாகத்தை உதவியவர் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார். கிறிஸ்தவப் பாதிரிமார் தமது கைப்பணத்தைச் செலவு செய்து பாடசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். நம்சுதேச கனவான்களுக்கு இந்தத்தருமத்தில் இன்னும் ஊக்கம் பிறக்கவில்லை போலும். ஒருவராகவே பெரியதாய்ப்பாட சாலை ஸ்தாபிப்பது கஷ்டமாயிருந்தாலும், பலர் கூடிச்செய் வது சுலபமாயிற்றே. பொதுவான காரியங்களில் ஒரே மனத்தராய் நம்மவர்வேலைகளைச் செய்யக்கற்றுக்கொள்ளு தல் நாட்டுக்கு க்ஷேமகரம்.

மேலே விவரிக்கப்பட்ட ஈட்டன் பாடசாலையில் வில் லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் பன்னிரண்டாவது வயதில் வந்துசேர்ந்தார். 1821 முதற்கொண்டு 1827-ம் ஆண்டு வரையில் ஆறுவருஷகாலம் அங்குக் கல்விபயின்றார்.

ஹிந்து ஆரியர்களுக்கு ஸம்ஸ்கிருதம் எவ்வாறு பூஜார் கமான பாஷையாயிருக்கின்றதோ அவ்வாறே மேற்கு நாட் டாருக்கு க்ரீக் லாடின் என்னும் இரண்டுபாஷைகளும் கௌ ரவிக்கப்பட்டுப் பப்லிக்ஸ்கூல்களில் வெகுவிமரிசையாகக் கற்பிக்கப்படுகின்றன. சுயபாஷையாகிய ஆங்கிலம் முதன் மையாய் வைக்கப்பெற்று ஊக்கத்தோடு பயிற்சிசெய்து வரப்படும். பிரான்சு, ஜர்மன், இடாலியன் பாஷைகளும் அவ ரவர் ருசிப்படி கற்றுக்கொடுக்கப்படும். கணிதம், தத்துவ சாஸ்திரம், பலதேச சரித்திரம், வேதாந்தம் முதலியனவும் கற்பிப்பதற்கு உயர்ந்தபடிப்புள்ள உபாத்திமார்களுண்டு. அரைவாயரான உபாத்திமாரே பப்லிக்ஸ்கூல்களில் இல்லை யெனலாம். அவர்களுக்கு ஊதியங்களும் திருப்திகரமான

அளவுள்ளவை. அன்னியதேச பாஷைகளையும் சரித்திரங்களையும் படிக்கும் மாணுக்கர்கள் சுயபாஷை, சுதேச சரித்திரம் இவ்விரண்டையும் உதாசீனஞ்செய்தல் இல்லை. தனக்கு மிஞ்சித்தருமம் என்னும் பழமொழியின் உள்ளுரையை உணர்ந்து சுயபாஷை, சுதேச சரித்திரம் இரண்டையும் மிகுந்த ஊக்கத்துடன் கற்றுங்கேட்டுஞ் சுதேசாபிமானத்தை அபிவிருத்திசெய்துவருவது பப்லிக்ஸ்கூல் மாணுக்கர்களுடைய கொள்கை. சுயமத அபிமானமும் கூடவே முதிர்ச்சியடைந்துவரும்.

குலத்திலும் செல்வத்திலும் குறைவற்ற வில்லியம் கிலாட்ஸ்டன் ஈட்டனுக்கு வந்தது முதல் கல்வியில் மேன் மேலும் அபிவிருத்தியடைந்தாரென்று அவர் சரித்திரம் எழுதினவரனைவரும் கூறுகின்றூர். பாடசாலை விதிகளை என்றும் மீறி நடந்ததில்லையாம். உபாத்திமார்களிடத்தில் உண்மையான பக்தி விசுவாசம் பாராட்டிக் காரியத்தின் மேற் கண்ணுயிருந்தாராம். நமது நாட்டுத் தனிகருடைய மக்கள் இளம்பிராயத்திலேயே தீ நெறியிலொழுகிப் பொருள், புகழ், ஆயுள் முதலிய எல்லாவற்றையும் ஒருங்கே இழந்து தமக்கும் பிறருக்கும் பயன்படாமல் அழிதல் போல ஈட்டனிலே கல்விகற்ற கிலாட்ஸ்டன் நடக்கவே இல்லை. இயற்கையில் அவருக்கு அமைந்த நற்குணங்கள் வித்தியாசாலைப் பழக்கத்தினுல் விருத்தியடைந்தனவேயன்றிப் "பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினதாலே பையல் கெட்டுப்போய் விட்டான்" என்று பெற்றேர் மனம் தபிக்கக் கிலாட்ஸ்டன் ஒன்றையுஞ் செய்தாரில்லை.

கிலாட்ஸ்டன் ஈட்டனிலே கல்வி பயிலுங் காலத்தில் க்ரீக், லாடின், கிறீஸ்தவ வேதாந்தம்—இம்மூன்றையும்

நன்ருய்க் கற்றுவந்தார். கணிதம், தத்துவசாஸ்திரம் முதலியவற்றை இரண்டாந்தரமான விஷயங்களாக வைத்து ஏகதேசம் அவற்றையுங் கற்ருர். அவருக்கு ஸகபாடிகளாக இருந்தவர்களில் இருவர், லார்ட் கானிங், லார்ட் எல்ஜின் இவ்விரு பிரபுக்களும் இந்தியாதேசத்து ராஜபிரதிநிதியாக வந்து வேலைபார்த்தவர்கள். லார்ட் கானிங் 1856-1861 வரையில் ராஜப்பிரதிநிதி வேலை பார்த்தவர். இவர் காலத்தில் சிப்பாய்க் கலகமுண்டாயிற்று. அன்பும் அருளும் நிறைந்த கானிங் பிரபு இந்துதேசச் சிரேஷ்ட தேசாதிபதியாக அக்காலத்தில் இருந்திராவிட்டால் ஹிந்துக்கள், முகம்மதியர்கள் இவர்கள் கதி என்னவாயிருக்குமென்று இக்காலத்தில் நம்மால் ஊகிக்கவு முடியாது. சிப்பாய்களும் இதரர்களும் மூடத்தனத்தினுல் கலகக்காரர்களானுர்களென்பதைக் கானிங் பிரபு செவ்வையாயறிந்து கலகக்காரர்களை மிகுந்த தயவாய் நடத்தினுர். கலகத்தினுல் கணக்கிலகப்படாத இடுக்கணுற்ற ஆங்கில உத்தியோகஸ்தர்கள் கலகக்காரர்களாகிய ஹிந்துக்களையும் முகம்மதியரையும் சுட்டுக் கொலை செய்யவேண்டுமென்று கானிங் பிரபுவுக்குச் சொன்ன துராலோசனைக்குச் செவிகொடாமல் தயவுடன் மன்னித்து விட்டபடியால் ஆங்கில கனவான்கள் பலர் கானிங் பிரபுவுக்கு "க்லெமென்ஸி கானிங்" என்று பரிகாசப்பெயர் ஒன்றிட்டார். இத்தகைய மந்திரிகள் "கண்ணோட்டமென்னுங் கழிபெருங் காரிகை, யுண்மையானுண்டிவ்வுலகு" [கண்ணோட்டம்—கடாட்சம், பக்ஷம்]—கண்ணோட்டமென்ற சிறப்புடைய அழகு அரசரிடத் துண்டாதலால் இவ்வுலகம் நிலை பெற்றிருக்கின்றது—என்ற அரச நீதியைக் கிஞ்சித்தேனும் அறிந்திலர்போலும். கானிங் பிரபு கலகக் காலத்தில் ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பாக்கியத்

தால் இந்தியரும் ஆங்கிலரும் ஒத்துவாழ இடமுண்டா யிற்று.

எல்ஜின் பிரபு ஸ்காட்லாண்டிற்கு அரசராயிருந்த ராபர்ட் புரூஸ் என்பவருடைய வம்சஸ்தர். ராபர்ட் புரூஸ் [1274–1329]-ம் வருஷங்களில் இருந்தவர். ஆங்கில அரசனை ஏழுமுறை விடாமுயற்சியுடன் எதிர்த்து வெற்றிபெற்று ஸ்காட்லாண்டிற்கு அரசனாகத் தன்னை மகுடம் சூட்டுவித்துக் கொண்டார். அந்த வம்சத்திற் பிறந்த எல்ஜின் பிரபுவைப்பற்றி விரித்துச் சொல்வதேன்? 1857-ம் வருஷத்தில் இந்தியாவிலே சிப்பாய்க்கலகம் மும்முரமாய் நடக்கையில் எல்ஜின்பிரபு சீனதேசத்துடன் சண்டைசெய்ய ஒருசேனையைக் கப்பலி லேற்றிக்கொண்டு போகும்வழியில் கானிங் பிரபு படுங் கஷ்டத்தைச் செவியுற்றவுடன் சீனதேசத்திற்குப் போகாமல் தன்படைகளை இந்து தேசத்திற்குத் திருப்பிக் கலகத்தை அடக்கிப் பேருதவி புரிந்தார். ஸமயோசிதமான காரியங்களைச் செய்யுந்திறமை எல்ஜின் பிரபுவிடத்தில் அமையப் பெற்றது நாமெல்லோருஞ் செய்த புண்ணியமாம். இன்னுஞ் சிலரும் கிலாட்ஸ்டனுடைய ஸகபாடிகளாக இருந்தனர். ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் பார்த்தாற் போதுமல்லவா? மற்ற ஸகபாடிகளும் இங்கு மேற்கூறிய இரண்டு பிரபுக்களை யொத்தே இருந்திருக்கவேண்டும்.

“ஆய்ந்தாய்ந்து கொள்ளாதார் கேண்மை கடைமுறை, தான் சாந்துயரந்தரும்” என்பதையும், ‘ஊதியமென்பது ஒருவற்குப் பேதையர், கேண்மை யொரீஇவிடல்” என்பதையும் கிலாட்ஸ்டன் சிறுபருவத்திலேயே அறிந்து நடந்தார். நட்பினுக்குப் பெருமை எந்நாளும் மாறுபாடின்றி

நடத்த லென்பதைக் கைப்பற்றியே சரித்திரநாயகர் ஒழுகி வந்தனர்.

ஈட்டனில் மாணாக்கர்கள் தம்முள் உபன்னியாஸம் செய்யும் ஸபை ஒன்றுண்டு. அச்சபையில் எடுத்துப்பேசக் கூடிய விஷயங்கள் எவையென்று வரையறுக்கப் பட்டிருந்தன. நடைமுதல் துரைத்தனத்தாருடைய நடபடிக்கைகளைப்பற்றி மாணாக்கர் உபன்னியசிக்கவாவது சூர்ச்சை செய்யவாவது உபாத்திமார் இடங்கொடுத்தலில்லை. பழைய சரித்திரங்களைப் பற்றியும் காவியங்களைப் பற்றியும் இஷ்டமானமட்டில் மாணாக்கர் சர்ச்சை செய்யலாம். இந்தச் சபைக்கு ஈட்டன் டிபேடிங்ஸொஸைடி என்றுபெயர். இந்தச் சபையில் அடுத்தடுத்துப் பேசியும் வாதாடியும், வந்தபடியால் சொல்நயம், பொருள்நயம், பொருந்திய உபன்னியாஸங்கள் பார்லிமெண்டில் செய்யுந் திறமையைக் கிலாட்ஸ்டன் அடைந்தார். எந்த அற்பமானகாரியமாயினும் கிலாட்ஸ்டன் அதை ஊக்கத்தோடு செய்தல் வாடிக்கை. "யார் ஆத்தாளோ செத்தாள், எவளோ அழுதாள்" என்று எந்த விஷயத்தையும் நினைப்பது கிலாட்ஸ்டனுடைய கோட்பாடல்ல. தான்பேசுமுன்னமே விஷயங்களை மனத்தில் ஒழுங்குபடுத்தித் தனக்கிருக்கும் நியாயங்களை எதிர்க்கக்ஷிக்காரருக்கு வற்புறுத்திச் சொல்லும் சொல்வன்மை கிலாட்ஸ்டனுக்கு ஈட்டன் பாடசாலையி லுண்டாயிற்று. விடுமுறை நாட்களிலும் தன்பெற்றோர் இருந்த லிவர்பூலுக்குச்சென்ற காலத்திலும் இவர் பிதா தம்மக்களைச் சும்மாவிடுத லில்லையாம். பிரேரேபிக்கப்பட்ட எந்த விஷயத்தையும் "ஆம் ஆம், சரி, சரி," என்று எல்லோரும் ஒத்துக் கொண்டு புத்திக்கு வேலை கொடுக்காமல் இலகுவாய்க்காலம் போக்

களுக்குக் கிலாட்ஸ்டன் பிதா இடங்கொடுக்க மாட்டார். தமது பிள்ளைகளையே வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் நியமித்து ஒவ்வொருவரையும் தமது தமது கக்ஷிக்குள்ள பலா பலங்களைச் செவ்வையாக எடுத்துப் பேசச் செய்வார். இளம்பிராயமுதற்கொண்டு எதிர்வாதம் பேசப் பழகின கிலாட்ஸ்டன் பார்லிமெண்டு மகாசபையின் மெம்பராகவந்தபோது எல்லோரையும் அச்சுறுத்தி, எவருக்கும் வியப்புண்டாகும் வண்ணம் பேசுந்திறமையுடையவராக ஆனதில் ஆச்சரியமில்லை. ஈட்டன் பாடசாலையிலே பற்பல இடங்களிற் கிலாட்ஸ்டனுடைய பெயர்பொறிக்கப்பட்டிருப்பதை இன்னும் பார்க்கலாம். விளையும்பயிர் முளையிலே அல்லவா? 1827-ம் வருஷத்தில் ஈட்டனிலே படிப்பு முடியவே கிலாட்ஸ்டன் லிவர்பூலுக்குப்போய்த் தன் கிருகத்தில் உபாத்தியாயர்களைக்கொண்டு அனேகவிஷயங்களைக் கற்றுவந்தார். ஒரு நிமிஷமேனும் படிக்காமலிருந்ததில்லையாம். ஈட்டனிலிருந்தகாலத்தில் ஓய்வுநோங்களிலே கிலாட்ஸ்டன் சிலதோழர்களோடு விண்ட்ஸர் பக்கமாய்ச் சென்று உலாவி வருவதுண்டு. நடைக்கு அஞ்சுதலேயில்லை. தேம்ஸ்நதியிலே தனக்கென்று ஒரு சிறுதோணியை வைத்திருந்தார். அதைத் தானே தண்டுவலித்துக்கொண்டு போவதுண்டு. இவ்வாறான தேகப்பயிற்சியும் அப்பியசித்து வந்தபடியாற் கிலாட்ஸ்டன் ஆயுள்முழுதிலும் ஆரோக்கியமான சரீரத்தை யுடையவராயிருந்தார்.

## மாணவப்பருவம், ஆக்ஸ்போர்ட்.

1828-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இவர்பிதா ஸர்வகலாசாலைப் படிப்பின்பொருட்டு ஆக்ஸ்போர்ட் என்னும் வித்தியா விலாஸஸ்தலத்திற்குக் கிலாட்ஸ்டனை அனுப்பினார். மத்திமப்படிப்பினுக்கு விரயமாகும் பொருளை முன்

னமே குறிப்பிட்டோம். ஸர்வகலாசாலைப் படிப்பு அதனி னும் பொருட் செலவுள்ளது. பொருளில்லார்க்கு ஆக்ஸ் போர்டிலே சுகங்கிடைப்பது துர்லபம். ஈட்டன் என்னு மிடத்தை விரிவாயெடுத்துச் சொன்னோம். இங்கு ஆக்ஸ் போர்ட்டைப்பற்றிச்சில விஷயங்களைச்சொல்லுவோம். படத் தில் ஆக்ஸ்போர்ட் இருக்குமிடத்தைச் செவ்வையாக மனத் திலே பதியவைத்தல் வேண்டும். ஈட்டனுக்கு வடமேற்குப் பாகத்தில் ஆக்ஸ்போர்ட் இருக்கின்றது. ஈட்டனைப் போல ஆக்ஸ்போர்ட் குக்கிராமமன்று; அஃது ஒரு பெரியபட்ட ணம்; தேம்ஸ் நதியின் வடகரையிலுள்ளது. கலைமகள் மனமுவந்து வாழ்வதற்குத் தேடித்தெரிந்தெடுத்த ஸ்தலம் ஆக்ஸ்போர்ட் என்னலாம். இந்தநகரில் 21 - காலேஜ் அல் லது சர்வகலாசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. வித்தையின் பெருமையை நன்குயறிந்த விக்ஞர்களால் மேற்கூறிய காலேஜ்கள் ஸ்தாபிக்கப்பட்டுப் பொருளுதவியும் பெற்றி ருக்கின்றன. தற்காலம் இந்தக் காலேஜ்களிற் கல்விபயிலும் வித்தியார்த்திகளின் ஸங்கியை மூவாயிரத்துக்கு மேற்பட் டதாம்.

குஞ்சி அழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாமென்னும் நடுவுநிலைமையாற்
கல்வி அழகே யழகு.

எனத்தமிழ்ப் புலவர் கூறியதின் தத்துவத்தை ஆங்கி லப் பிரபுக்கள் தெளிவா யுணர்ந்து, தமது நாட்டுச் சிறுவர் சிறுமியர் கல்வி கேள்விகளிலே சிறப்படைதல் எல்லாப் பெருமையிலும் மேலானதென் றுணர்ந்து, ஆக்ஸ்போர்டில் 21 - கலாசாலைகளை ஸ்தாபித் திருக்கின்றனர். துரைத்தனத்

தாருடைய ஸகாயத்தையும் மாணுக்கர்கள் கொடுத்துவரும் சம்பளத்தையும் எதிர்பார்த்து இந்தக் கலாசாலைகள் ஏற்பட்டனவல்ல. நமது நாட்டிலே சேரசோழ பாண்டியர் பிரஜைகளின் மறுமைப்பயனை நினைத்துத் தேவாலயங்களை மிகப் பெரியனவாகக் கட்டி அவற்றிற்கு அபரிமிதமான வருமானங்களையும் ஏற்படுத்தி யிருத்தல்போல, "மடங் கொன்றறிவகற்றுங் கல்வி" இம்மையிலும் மறுமையிலும் பயன்படுவது போல "சிற்றுயிர்க் குற்றதுணை" வேறொன்று மில்லையென்றதுணிபை மேற்கொண்டு ஆங்கில கனதனவான்கள் ஆதிகால முதற்கொண்டு கல்விச்சாலைகளை ஸ்தாபித்தலே உத்தமமான தருமமென்று எண்ணித் தம்முடைய பொருள்களைக் கல்விக்கே தத்தம் செய்தாரென்று சொல்லலாகும். நமது நாட்டுத் தேவாலயங்கள் சீரழிந்து, மடாதிபதிகள் அழி வழக்காடுவதில் ஐவேஜிகளை விரயஞ்செய்து வருதல் போல அல்லாமல், மேற்கூறிய ஆக்ஸ்போர்ட் கல்விச்சாலைகள் அழியாமலே தினேதினே மேன்மை பெற்று உலகத்திற்கு உபகாரஞ்செய்து வருகின்றன. தருமபரிபாலனத்தின் கூறு இத்தன்மையதென்று ஆங்கிலரிடத்திலிருந்து நாமறிந்து கொள்ளல் வேண்டும்.

ஆகஸ்போர்ட் காலேஜ்களில் எவரையும் சேர்த்துக் கொள்ளுகிறது கிடையாது. இந்த நிர்ப்பந்தம் சிறிதுகாலத்துக்குமுன் தான் நிவர்த்திக்கப்பட்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பிராடெஸ்டண்டு கிறிஸ்தவர்களைத்தவிர இதரர்களைக் காலேஜ்களில் வெகுகாலம் சேர்க்காமலிருந்தார்கள். ஸ்திரீகளைக் காலேஜ்களிலே கல்விபயில அனுமதிகொடுப்பதில்லை. இற்றைக்கும் ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி அதிகாரிகள் ஸ்திரீகள் பரீக்ஷைகளிலே தேறினுலும் பி-ஏ, எம்-ஏ, என்னும் பட்டங்களை அவர்களுக்குக்

கொடுப்பதில்லை. தற்காலம் ஜாதி மத வேறுபாடுகளைக் கொண்டு ஆக்ஸ்போர்டில் வித்தியார்த்திகளைச் சேர்க்காமலிருத்தலில்லை. ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி அதிகாரிகளின் புத்தி விசாலத்தையும் பெருந்தன்மையையும் நவீன விதிகள் விளக்குகின்றன. சரித்திர நாயகரான வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் என்பவர் க்றைஸ்ட் சர்ச் என்னும் காலேஜில் 1828-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலே சேர்ந்தார். நாலு வருஷம் அங்கேயே இருந்து கல்விபயின்றார்.

## க்றைஸ்ட் சர்ச் காலேஜ்.

இந்தக் காலேஜில் உயர்குலத்திற் பிறந்த பிள்ளைகளை மட்டிற் சேர்த்துக்கொள்வதேயன்றி மற்றவரைச்சேர்த்துக் கொள்ளுதல் இல்லையாம். இந்தக்காலேஜிலே கல்விபயின்ற லார்ட் லிவர்பூல், ஜார்ஜ் கானிங், ஸர் ராபர்ட் பீல், லார்ட் டெர்பி, லார்ட் ஸால்ஸ்பெரி, லார்ட் ரோஸ்பெரி—முதலானவர்கள் மாட்சிமை தங்கிய நமது சக்ரவர்த்தினியாயிருந்த விக்டோரியா சீமாட்டியினிடத்திலே பிரதானிகளா யிருந்தவர்கள். பிரதானிகளுக்குரிய கல்விப் பயிற்சியை யுண்டாக்கும் சாலையென்று க்றைஸ்ட் சர்ச்காலேஜை ஒருவாறு சொல்லலாகும். கி. பி. 1509-1547-ம் வருஷம் வரையில் ஆங்கில நாட்டில் எட்டாவது ஹென்ரி என்று ஒரு அரசரிருந்தார். இவரிடத்தில் முதன் மந்திரியாயிருந்தவர் கார்டினல் உல்ஸி என்பவர். க்றைஸ்ட் சர்ச் காலேஜ், கார்டினல் உல்ஸியால் ஸ்தாபிக்கப் பட்டது. முதலில் இந்தக் காலேஜுக்குக் "கார்டினல் காலேஜ்" என்று பெயரிருந்தது. எட்டாவது ஹென்ரிக்கு உல்ஸியிடத்தில் வெறுப்புண்டாகவே, காலேஜின் பெயரைமாற்றிக் "க்றைஸ்ட்சர்ச் காலேஜ்" என்று வேறுநாமகரணஞ் செய்யப்பட்டது. பிரதானியால் ஸ்தாபிக்கப்பட்ட

காரணத்தாலேதான் இக்தக் காலேஜிற் படித்தவர்கள் பிரதானி உத்தியோகத்துக்கே வந்துகொண்டிருந்தார்களென்று எண்ணலாகும். சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தலைவராயிருந்த பௌவேல் என்னும் புண்ணிய புருஷருடைய மாணுக்கர்களாயிருந்த, ஸர்-டி-மாதவராவ், திவான் ரங்காசார்லு, ஆனரபில்-வி. ராமையங்கார், ஸர்-அ. சேஷய்யா சாஸ்திரிகள், ஸர்-டி-முத்துசாமி அய்யர், ஸி-வி ரங்கநாத சாஸ்திரிகள் முதலாயினேர் உயர்ந்த பதவிகளை யடைந்தவர்களன்றோ? மாணுக்கர்கள் உத்தமபதவியை யடைவது அவர்கள் கல்விபயிலும் காலேஜையும் வித்தியா குருவையும் பொருத்ததா யிருக்கிறது. க்றைஸ்ட் சர்ச் காலேஜ் கட்டிடத்தின் அழகை நேரிற்பார்த்து அறிய வேண்டும். படத்திலேயே மனத்தைக்கவரும் இயல்பினையுடையதா யிருக்கின்றது. மாணுக்கர்கள் தேகப்பயிற்சி செய்வதற்கும், உலாவித்திரிவதற்கும் விசாலமான பூமிகளுண்டு. கல்வி அபிவிருத்திக்கு உபகரணங்களாகின்ற புத்தகசாலை, ரஸாயன கருமசாலை முதலானவை அமையப் பெற்றது. உபாத்திமார்களின் திறமையையும் சிரத்தையையும் பற்றிச் சிற்றறிவினர் எடுத்துச் சொல்வது பெரும்பிழையாம். புராதன பாஷைகளாகிய க்ரீக், லாடின், ஹீப்ருவும், ஆங்கில முதலிய ஐரோப்பிய பாஷைகளும், கணிதம் முதலிய சாஸ்திரங்களும் கற்பதற்கு ஏற்ற சாதனங்கள் க்றைஸ்ட்சர்ச் காலேஜில் உண்டு. படிப்பு முற்றிலும் லௌகிக மானதல்ல ; கிறிஸ்தவமதமும் மாணுக்கர்கட்குச் செவ்வையாய்ப் போதிக்கக் குருமார்களும் உண்டு. காலேஜ்தலைவர் ஆசார்யாபிஷேகம் பெற்ற கிறிஸ்தவ குருக்கள்மாரில் ஒருவர். "ஸன்மார்க்கபாடம் கற்பித்தல்" என்று பிரத்தியேகமான ஏற்பாடு வேண்டுவதில்லை. ஆக்ஸ்போர்ட் காலேஜ்களிலேயே ஸன்மார்க்கத்தைத் தவிரவேறு

ஒன்றும் அனுஷ்டிக்க முடியாது. இவ்விதமான வித்தியா சாலைகள் அமைந்துள்ள இடத்தையல்லவோ பூலோக கைலாசம் அல்லது வைகுந்தம் எனலாகும். வித்தியாகுருவின் ஸன்னிதி மகிமையாலேயே வித்தியார்த்திகளின் அஞ்ஞான இருட்டு நீங்கி ஞான ஒளிபிறந்து எல்லோரும் க்ஷேமத்தை அடைகின்றார்கள். ஆரியாவர்த்தத்திலே குருகுல வாஸமென்று பிரசித்த மடைந்திருந்த இடங்களும் ஆக்ஸ்போர்ட் காலேஜ்களைப்போலத்தான் இருந்திருக்கவேண்டும்.

ஈட்டனில் மாணுக்கர்களுக்குள் தர்க்கசபை அல்லது டிபேடிங் ஸொஸைஸயெடி ஏற்பட்டிருந்தது போலவே ஆக்ஸ்போர்டிலும் ஏற்பட்டிருந்தது. கிலாட்ஸ்டன் முதலில் இந்தச் சபையில் மெம்பராயும் பிறகு அக்கிராசனாதிபதியாயும் ஆனார். ஆக்ஸ்போர்டுக்கு ஸ்தல விசேஷமொன்றுண்டென்பர். அங்கிருப்பவர்கள் அனேகரும் புராதன ஆசாரங்களைப் பரிபாலனஞ் செய்து வருவதிலேயே கருத்து வைத்தவராம்; அங்கு ஆசாரச் சீர்த்திருத்தஞ் செய்ய முயல்வது மிக்க கஷ்டமான காரியம். புராதனருடைய பாஷைகளையும், கிரந்தங்களையும், தத்துவ சாஸ்திரங்களையும் மிகுதியாகப் படித்துங் கற்பித்தும் வருகிற இடத்தில் பூர்வாசாரியரிடத்தில் மதிப்புப் பிறத்தலும் அவருடைய ஆசாரங்களை மாற்றுதலில் அச்சமுறுதலும் இயல்பு. கிலாட்ஸ்டனுடைய மனத்தின்அமைப்பும் இடத்திற்கொத்த வாறுதா னிருந்தது. தருக்கசபையில் உபன்னியஸித்த விஷயங்களி லெல்லாம் கிலாட்ஸ்டன் பூர்வாசாரியருடைய கொள்கைகளை வற்புறுத்தி ஸ்தாபித்தும் மாறுதல் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டவர்களைக் கண்டித்தும் வந்தார். நவீனர் பலர் பூர்வாசாரிய ரனைவரும் ஞானசூனி

யர்; தாமே ஞானபானுவை உலகத்திலே பிரவேசிக்கச்செய்கிறவர் என்று பெருமை பாராட்டிக்கொண் டிருப்பது போற்கிலாட்ஸ்டன் ஒருபோதும் சொல்லத் துணிந்ததில்லை. சுயமதம், சுயபாஷை, சுயதேசம், இவற்றில் கிலாட்ஸ்டனுக்கு இருந்த அபிமானத்தால் பூர்வாசாரங்களை என்றும் அவர் நிந்தனையாகப் பேசுவதுமில்லை; பேசுகிறவர்களைத் தக்க நியாயங்களைச்சொல்லி வாயெடுக்க விடாமற் செய்யாமற் போவதுமில்லை. ஆயுள் முழுதிலும் தெய்வபக்தி, ராஜபக்தி ஆகிய இரண்டும் கிலாட்ஸ்டனிடத்திலே குறைவுபடாமலிருந்தது பூர்வாசார அபிமானத்தினாலேதான்.

மற்ற மாணாக்கர்களைப் போல ஓய்வு நேரங்களை வீண் பேச்சிலும் விளையாட்டிலும் செலுத்தாமலே தேக ஆரோக்கியத்திற்கு அவசியமான முயற்சியிலே சொற்பகாலத்தையும் மிகுந்ததைப் பலவிதமான மனமுயற்சியிலும் செலுத்திவந்தார். இவர் அரைமனத்தோடு எந்தக் காரியத்திலும் பிரவேசிப்பதில்லை.

தூங்குக தூங்கிச் செயற்பால, தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

தாமதமாய்ச் செய்யக் கூடியவற்றைத் தாமதமாயும் தாமதிக்கக் கூடாதனவற்றை விரைவிலும் செய்யவேண்டுமென்று விதியுளது. இஃது அமைச்சர் தருமம். கிலாட்ஸ்டனுக்கு எந்தக் கருமத்தையும் தூங்கிச்செய்த லென்பது இல்லை. எதிரில் நிற்கின்ற சத்துருவை உடனே எதிர்த்துப் போர் செய்யாவிடின் அந்தச் சத்துரு பலமடைவனாதலினாலே கிலாட்ஸ்டன் வீரரைப்போலவே துராசாரமாகிய சத்துருவை வேரறுத்து ஸதாசாரத்தை நிலைநிறுத்த முயன்றவர்.

ஆக்ஸ்போர்டிலே கிலாட்ஸ்டன் இருந்த நாலு வருஷ காலத்திலும் அறிவு விசாலப் படுவதற்கே முயன்ருரென்றும், தேகதிடம் விருத்தியாவதிற் கவனத்தைச் செலுத்தவில்லை யென்றும் ஆங்கிலபாஷையில் இவர் சரித்திரத்தை எழுதினவர்கள் கூறுகின்ருர்கள்.

1831-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டன் யூனிவர்ஸிடி பரீக்ஷையில் முதல் வகுப்பிலே தேறினர். மாணவப்பருவம் ஈட்டனிலே பிரஸித்தத்தை யடைந்தது போலவே ஆக்ஸ் போர்டிலும் கிலாட்ஸ்டனுக்கு மிக்கபுகழை யுண்டாக்கிற்று. இதற்கு மாருகச் சம்பவிக்குமென்று, கிலாட்ஸ்டனை நன்ருயறிந்தவர் எவரும் எண்ணவில்லை. க்ரைஸ்ட் சர்ச் காலேஜ படிப்பு முடிந்தபொழுது கிலாட்ஸ்டனுக்கு வயது இருபத்திரண்டு. கல்வியிலும், ஒழுக்கத்திலும் மேன்மை பெற்ற கிலாட்ஸ்டனைக் கண்ணுற்ற மாதாபிதாக்கள் எத்துணைக் களிப்படைந்தார்க ளென்பதைச் சொல்லுதல் அனுவசியம்.

இந்திய மாணுக்கரைப்பற்றி இந்த ஸந்தர்ப்பத்திலே சிறிது சொல்லுவோம். இருபத்திரண்டு வயதிலேயே இந்திய மாணுக்கர் சிலருக்குக் குழந்தைகளுண்டா யிருக்கும். ஆக்ஸ்போர்ட் காலேஜ்களில் விவாகமான பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை. மாணவப் பருவத்தில் ஒருவன் பிரமசாரியா யிருத்தல் கல்விகற்றலுக்குப் பெருஞ்சாதகமாம். ஆங்கிலேயரும் நமது நாட்டுப் பூர்வீக ஆசாரத்தை அனுசரித்து வருகிருர்கள். வித்தியார்த்திகளுக்கு ஸம்ஸாரக் கவலைமுற்றிலும் விரோதம். இந்திய பிதாக்கள் தம்மக்களுக்கு இளம் பிராயத்திலேயே விவாகாதிகளைப் பலகாரணங்களை முன்னிட்டு முடித்துவிடுவதினுல் மனமுயற்சி, சரீரமுயற்சி, இரண்டிற்கும் தடையுண்டாகி, இருபத்தைந்து வயதிலேயே

ஜரையடைந்து தமக்கும் பிறருக்கும் பயன்படாமல் அனேகர் துன்பமடைவதைக் கேட்டும் பார்த்துமிருக்கிறோ மல்லவா? மனுஸ்மிருதியிலே வித்தை பூரணமானபின் கிருஹஸ்தாசிரமத்தை ஒருவன் விரும்பவேண்டு மென்று சொல்லியிருப்பதை முற்றிலும் மறந்து பொன்னுக் காசைப்பட்டுப் பெண்களைப் பிள்ளைகளுடைய கழுத்திற்கட்டி இம்மையிலும் சுகம்பெறா தவழியைப் பெற்றோர்கள் தேடுகிறார்கள். இது நின்றால் ஒருவாறு நமது நாடுநன்மை பெறலாகும்.

பார்லிமெண்டு மகாசபையிலே கிலாட்ஸ்டன் மெம்பராய் வந்தபிறகு இவருடையவாக்குசாலத்துவத்தைக் கேட்க வென்று கூடின கூட்டம் கணக்கிலகப்படாது. இவ்வகைத்திறமை இவருக்கு எவ்வாறுண்டாயிற்று? இரவிலே தூங்கும்பொழுது கலைமகள் இவர் நாவில் பீஜாக்ஷரத்தை எழுதிப் போனளோ? இல்லை; சுயமுயற்சியாலே இந்த சாமர்த்தியம் கிலாட்ஸ்டனுக் குண்டாயிற்று. ஆக்ஸ்போர்ட் டிபேடிங் ஸொஸைடியிற் பேசவேண்டிய ஸமயங்கள் நேர்ந்தபோ தெல்லாம் இரண்டு கக்ஷிக்காரர்களுடைய வாதங்களைச் சித்தத்தில் நன்றாய்ப் பதித்துச் சாதுரியமாய் விஷயங்களை விளக்கும்சக்தியைத் தானே தனக்களித்துக் கொண்டார். என்றும் கிலாட்ஸ்டனுக்குச் சொற்சோர்வு கிடையாது. "யானைவரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே" என்ற பழமொழிக்கேற்ப பார்லிமெண்டு மகாசபையிலே பிற்காலத்திலே தானடைய விருந்த பெருங்கீர்த்திக்கு அங்குரார்ப்பணம் ஆக்ஸ்போர்ட் டிபேடிங் ஸொஸைடியிலே செய்துகொண்டார். கிரீக், லாட்டின், இடாலியன் மூன்றுபாஷையிலு முள்ள இதிகாசங்கள், தத்துவ சாஸ்திரங்கள் முதலானவற்றை ஸாங்கோபாங்கமாகக் கற்று வைதிக சிரோமணிகள் அச்சுறும் படியான ஞானத்தை

யடைந்தார். அரசியலைப்பற்றித் தருக்கித்தபோதெல்லாம் புராதன ஆசாரங்களை மாற்றுவதில் ஆவலுள்ளவராக எள்ளளவும் சூசிப்பிக்கவில்லை. இத்தன்மையவர் ஸர்வாதிகாரம் பெற்ற காலத்திலே பூர்வாசாரங்கள் அனேகங்களை முற்றிலும்மாற்றி அறத்திடு பிச்சைகூவி யிரப்போரும் அரசியலை அறிந்து நடத்தத்தக்க ஞானத்தை யடையும் படிச்செய்தார்.

## இரண்டாவது பாகம்.

குருகுலவாஸஞ் செய்தபின் தேசாடனஞ் செய்வது ஆரியருடையவழக்கம். முக்கியமாக ஹிந்துக்கள் காசியாத்திரை போய்க் கங்காஸ்நானம் செய்து ஆங்காங்குள்ள ராஜஸபைகளிலே தமது வித்தையைப் பரிமளிக்கச் செய்து பரிசுபெற்றுக் கிருகஸ்தாச் சிரமதருமங்களை நடத்த வேண்டியதற்கு அவசியமாயுள்ள தனத்தைத் தேடிக்கொண்டு ஜன்மபூமிக்கு வருவதுண்டு. அவ்வாறே ஆக்ஸ்போர்ட் முதலிய ஸர்வகலாசாலைகளிற் கற்கவேண்டியவற்றைக் கற்றுணபிறகு ஆங்கிலநாட்டார் இடாலிதேசத்துக்குச் சென்று அந்த நாட்டுப்புராதனப் பெருமைக்கு அத்தாக்ஷியாக இற்றைக்கும் நிலைபெற்றிருக்கும் சித்திரசாலை, சிற்பசாலை, பொருட்காக்ஷிச்சாலை, தேவாலயங்கள், மடங்கள், வித்துவத்கோஷ்டிகள் முதலியவற்றை நேரிற்பார்த்து வந்தவர்களை மாத்திரந்தான் பூரணப்பிரக்ஞாவான்கள் என்று ஏற்றுக்கொள்வது வழக்கம். இடாலிய பாஷையையும் அதிலுள்ள இதிகாசங்களையும், இதரகாவியங்களையும் ஐயந்திரிபற வுணர்ந்த கிலாட்ஸ்டன் அந்த நாட்டிற்கு நேரிற்போய் அதன் பெருமைகளை அறிந்து வரவேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தன் பிதாவுக்குத் தெரிவிக்க, அவ்வுத்தம பிதாவும் அனு

மதிகொடுத்தார். கிலாட்ஸ்டன் பைபிலேயும் அதன் பாஷியங்களேயும் தெளிவாயறிந்திருந்தார். மதாசாரியனாக அபிஷேகம் பெற்றுத் தமது நாட்டாருக்கு மறுமைப்பயன் உண்டாக்கும் வழியிலே உழைப்பதிற் கிலாட்ஸ்டனுக்கு அனுராகம் பிறந்திருந்தது வாஸ்தவம். பிதாவோ மிகுந்த ஸூக்ஷ்ம புத்தியுடையவர். தன் அருமை மகன் வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் லௌகிகவிஷயங்களிற் பிரவேசித்தால் பேரும் புகழும் அடைவதிற் சந்தேகங் கிடையாதென்று உறுதிசெய்து மதாசாரியன் தொழில் தன்மகனுக்குத்தகாதென்றார். பிதாவின்வாக்கினுக்கு எதிர்வாக்குப் பேசுவது அக்காலத்தில் உயர்குலமக்களுக்கு வாடிக்கையில்லே. குலத்தினாலும் செல்வத்தினாலும் கல்வியாலும் பெருமையடைந்த வில்லியம் தன் பிதாவின் இஷ்டத்துக்கு விரோதமாக நடப்பாரென்று சொற்பனத்திலும் எண்ணலாகாது. பிதாவின் அனுமதியில்லையென்று அறிந்த நிமிஷத்திலேயே மதாசாரிய உத்தியோகத்தை வகிப்பதில்லையென்று கிலாட்ஸ்டன் தீர்மானித்துவிட்டார். இத்தகைய மக்களையல்லவோ பெறுதல் பெரும்பேறு! 1832-ம் வருஷத்தில் இடாலிக்குக்கிலாட்ஸ்டன் சென்றார். அந்த நாடு அக்காலத்தில் மிக்கச் சீரழிந்து கிடந்தது. தென்பாகம் ஒரு ஜாதியாருக்கும், வடபாகம் ஒரு ஜாதியாருக்கும், மத்திய பாகம் சிற்றரசருக்குஞ் சொந்தமாயிருந்தது. இரவில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போதல் சாத்தியமில்லை. வழிப்பறிகாரர் மிகுதி. பெரும்பான்மையும் அராஜகராகவே இருந்தது. அரசர்களாயிருந்தவர் அன்னிய தேசத்தவரா யிருந்தமையாலே குடிகளிடத்திற் சிறிதேனும் அனுதாபம் வைக்காதவர்களாயிருந்தார். இந்த மாதிரியாகக் கஷ்டங்கள் நிரம்பியிருந்தாலும் பூர்வாசாரங்களிலும், புரா

தனக் கல்வியிலும் மிகுந்த அன்புவைத்த கிலாட்ஸ்டன இடாலிக்குப்போய் அந்த நாட்டுப் பெருமைகளையெல்லாம் கண்ணாரக்கண்டு அங்கு அரசுரிமை வகித்தவர் தம்முடைய கடமைகளைச் சரிவரச் செலுத்தாமையைப்பற்றிப் பெருந் துயர முற்று இடாலிக்கு க்ஷேமத்தைச்செய்ய உபாய மென்ன வென்று யோசித்துக்கொண்டிருக்கையிலே, பிதாவி னிடத்திலிருந்து தக்ஷணமே ஆங்கில தேசத்திற்குத் திரும்பி வரவேண்டு மென்ற நிருபங்கிடைக்க, உடனே தமதுநாட் டுக்கு வந்துவிட்டார்.

---

## கிலாட்ஸ்டன்

### பார்லிமேண்டு மகாசபையிலே பிரவேசமானது.

அருந்தவஞ் செய்தவர்க் கல்லாமல், அங்கிலேய நாட் டுப் பார்லிமெண்டு மகாசபையில் ஒரு அவயவியாதல் இலே சானகாரியமில்லை. குலமும், செல்வமும், கல்வியும் மிகுந்த வருக்கே பார்லிமெண்டு மெம்பராதல் கூடும். மெம்பர்க ளுக்கு அக்காலத்திலே பொதுநன்மைக்கு உழைப்பவர் என் னும் புகழைத் தவிர வேறு கைம்மாறு கிடையாது. சங்க மாகக் கூடுமிடங்களில் எல்லோரும் எல்லாவிஷயங்களிலும் ஓரே அபிப்பிராய முடையவரா யிருத்தல் சற்றுக் கஷ்ட மான காரியந்தான். புத்தி நுட்பமுடையவர் சங்கத்தில், அபிப்பிராய பேதங்கள் அவசியம் நேரிடும். பார்லிமெண்டு ஸபையிலும் ஆதிகாலந் தொட்டு இரண்டு கக்ஷிகள் ஏற் பட்டிருந்தன. ஒரு கக்ஷிக்கு - டோரி அல்லது கன்ஸர் வெடிவ் என்று பெயர். இதைச் சேர்ந்தவர் அரசனுக்கு

அநுகூலிகளாகவும், பூர்வாசாரங்களை அழியாமலே பாது காப்பவராகவு மிருப்பார்கள். இவர்கள் விசேஷமாய்ப் பூஸ்திதியுடைய கனவான்களாகவே இருப்பார்கள். "பழையன கழிதலுக்கும் புதியன புகுதலுக்கும்" எக்காலத்திலும் இடங்கொடாத பிடிவாத முடையவர்கள். பிரஜைகள் பிறப்பினால் எந்த நிலைமையை யுடையவர்களோ அதே நிலைமையில் ஆயுள்காலம் எல்லாவற்றையும் போக்குதல் அத்தன்மையருக்குச் சுகத்தையும், சொற்பமாறுதலும் அவருக்குத் தீமையையும் பயக்குமென்ற துணிபு, டோரி அல்லது கன்ஸெர்வெடிவ் கக்ஷியிற் சேர்ந்தவர்களுடையது.

மற்றொரு கக்ஷிக்கு ஹ்விக் அல்லது லிபெரல் என்று பெயர். இராஜபக்தியிலே டோரிகளுக்கு எந்தவிதத்திலும் இவர் தாழ்ந்தவரல்லர்; ஆயினும் மாறுதலின்றித் தேறுதலில்லை யென்பதை யுணர்ந்து புராதன ஆசாரங்களிலே தற்காலத்திற்குத் தகாதவற்றை விலக்கிப்புதியவற்றை அனுஷ்டிப்பதிலே தோஷம் சிறிதேனும் இல்லையென்னும் உறுதிப்பாடுடையவர் லிபெரல்கள். "குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்னன் அடிதழீஇ நிற்குமுலகு" என்ற ஆன்றோர் மொழிக் கொத்தவாறு தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையும் செலுத்தும் பெருநிலவேந்தன் அடியைப் பொருந்தி உலகத்தார் விடாராதலினாலே பிரஜைகளிற் சிலரை மாத்திரம் கௌரவப்படுத்தி ஏனையோரை அலக்ஷியஞ் செய்வது அரசநீதியன்றென்பது லிபெரல்களுடைய கொள்கை. இவ்வாறு பார்லிமெண்டு மகாசபையில் இரண்டு வகுப்பினராகப் பிரதிநிதிகள் ஆதிகாலந் தொட்டுப் பிரிந்து தத்தம் கொள்கைகளையே ஸ்தாபிப்பதற்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம் பிரயத்தனம் செய்துவருவது வாடிக்கை.

கிலாட்ஸ்டன் சரித்திரத்தில் இவ்விரண்டு பிரிவினையும் ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியம்.

கலாசாலைக் கல்விக்கு மகுடம் போன்ற தேசாடனம் பூரணமாகுமுன் கிலாட்ஸ்டன் பிதா அவரை இடாலியிலிருந்து திரும்பி வரும்படி கட்டளை பிறப்பித்ததேன்?

1832-ம் வருஷத்திலே பார்லிமெண்டு இலெக்ஷன் (பிரதி நிதிகளைத் தெரிந்தெடுத்தல்) வந்தது. பிரபுக்கள் ஸபையில் ட்யூக் அவ் நியூகாஸில்என்று ஒரு கனவானிருந்தார். அவருக்கு விசாலமான பூஸ்திதியிருந்தது. அவர் ஆணையைமீறி நடக்காத வோட்டர்கள் அனேகர். தன் அதிகாரத்துக் குட்பட்ட ஸ்தலங்களுக்குப் பிரதிநிதியாக ஏற்படுகிறவர் தன் கொள்கைகளை அனுசரித்தவராக இருத்தல் வேண்டுமென்று நியூகாஸில் பிரபு விரும்பினது ஸகஜம்: இந்தப் பிரபுவின் குமாரனும் வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டனும் சகபாடிகள்: இளையபிரபு கிலாட்ஸ்டன் பார்லிமெண்டு ஸபையிலே தன் பிதாவுக் கொத்தவாறு நடந்து கொள்வாரென்று சொல்லவே, நியூகாஸில்பிரபுவும் அதனை ஏற்றுக்கொண்டு இளைய கிலாட்ஸ்டன் பிதாவுக்கு நிருபம் எழுதி உடனே இடாலியிலிருந்து அவரைத் தருவிக்கச் சொன்னார்: பார்லிமெண்டு மகாசபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுதலுக்குத்தான் கிலாட்ஸ்டன் இடாலியிலிருந்து அவசரமாய்த் திரும்பிவந்தார்.

ட்யூக் அவ் நியூகாஸில் பிரபுவினுடைய அளவற்ற செல்வாக்கினால் வில்லியம்எவர்ட்கிலாட்ஸ்டன் நீவார்க் என்னும் பட்டணத்திற்குப் பார்லிமெண்டு மகாசபைப் பிரதி

நிதியாக 1832-ம் வருஷத்திலே தெரிந்தெடுக்கப் பட்டார். இவரை முதல்முதலிலே தெரிந்தெடுத்தகாலம்சுபமுகூர்த்த மாகவே இருந்திருக்க வேண்டும். பூர்வாசார பரிபால னக் கக்ஷியைச் சேர்ந்தவராயினும் பிரதிநிதியாக விருந்த 64 வருஷங்களில் இவரால் உண்டான மாறுபாடுகள் உல கத்திற்குச் செய்த நன்மைகளைப் போல எவர்காலத்திலு மில்லை யெனலாம். இவராலே செய்யப்பட்ட மாறுதல்களை அவ்வவ் வமயங்களில் எடுத்துச்சொல்லுவோம். வீட்டிலே தாய் தந்தையரும், வித்தியா சாலைகளில் வித்தியா குருக்க ளும் கிலாட்ஸ்டனை நன்னெறியி லிருந்து வழுவாமற் பார்த் துக்கொண்டு வந்தாற் போலவே பார்லிமெண்டு மகாசபையி லும அவருக்கு நல்ல குருவும் தோழரும் ஏற்பட்டார்கள்.

1833-ம் வருஷ ஆரம்பத்தில் இவர் பார்லிமெண்டு சபையில் நீவார்க் என்னும் பட்டணத்திற்குப் பிரதிநிதி யாக வந்தகாலத்தில் லிபெரல் கக்ஷி பலமா யிருந்தது. அக் காலத்தில் பிரதானி க்ரே பிரபு. கன்ஸெர்வெடிவ் கக்ஷிக் குத்தலைவராயிருந்தவர் ஸர்ராபர்ட் பீல். இந்தச்சீமான் ஒரு உத்தமபுருஷர். பிரஜைகளுடைய க்ஷேமத்தைப் பெரிதா யும் தன் கக்ஷியினுடைய கொள்கைகளை ஒவ்வொருவேளை யிலே சிறிதாயும் எண்ணும் பெருந்தன்மை யுடையவர். கிலாட்ஸ்டனும் கன்ஸெர்வெடிவ் கக்ஷியிற் சேர்ந்தவரான படியால் ஸர்ராபர்ட் பீல் என்பவரையே தனக்குக் குருவாக வைத்துக் கொண்டார். அரசு நடாத்தும் முறையிலும், சொல்வன்மையிலும் நல்லொழுக்கத்திலும் ஸர்ராபர்ட்பீல் என்னுங் கனவான் மிகுந்தபிரசித்தர். கிலாட்ஸ்டன் பிற்கா லத்திலே கீர்த்திவந்தராக ஆனதற்கு முக்கியகாரணம் ஸர் ராபர்ட் பீலுடைய படிப்பனைக ளென்றே சொல்லலாகும்.

மற்றொரு நண்பர், ஒக்கானல் என்னும் அயர்லாண்டு தேசத்தாரால் பார்லிமெண்டுக்கு மெம்பராய் நியமிக்கப்பட்டவர்: இவர் பரோபகாரத்தையே தனக்கேற்பட்ட கடமையென்று நிருணயஞ்செய்து சுயநயத்தை எள்ளளவேனும் பாராட்டாம லிருந்த மகாபுருஷன். வாச்சாலத்தில், அக்காலத்தில் பார்லிமெண்டு மகாசபையி லிருந்தவர்களுக்கு, எந்த அம்சத்திலும் குறைந்தவரல்லர். அயர்லாண்டு தேசத்தினிடத்து அபரிமிதமான அபிமானம் வைத்துச் சுயஜாதியாரை உயர்ந்த ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஆவல் கொண்டவர். ஒக்கானலுடைய தோழமை பிரவேச காலத்திலேயே கிடைத்தபடியாலேதான் கிலாட்ஸ்டன் அயர்லாண்டுக்குச் சாசுவதமான நன்மைகளைச் செய்ய முயல்வாராயினர்.

ஆங்கிலேயர் குடியேறின நாட்டில் அடிமைகளைக் கொண்டு கருப்பந் தோட்டங்களில் வேலைநடந்து வந்தது. கிலாட்ஸ்டன் பிதாவுக்குச் சொந்தமாக அடிமைகள் பலரிருந்தார்கள். மிருகங்களை நடத்துவதுபோலத்தான் அடிமைகளின் யஜமான்கள் அவர்களை வருத்திவந்தார்களென்று புகாருண்டாகப், பார்லிமெண்டார் அடிமைகளின் குறைகளைப்பற்றி விசாரிக்கப்புகுந்தார்கள். கிலாட்ஸ்டன் பிதாவையும் சிலர் குற்றத்துக்குட் படுத்திப்பேசினர். பிதாவினிடத்திலே தேவதா விசுவாசம் வைத்திருந்த கிலாட்ஸ்டன் பார்லிமெண்டு சபையில் உடனே எழுந்து தன்பிதாவினுடைய பூததயை முதலானவற்றைச் சபையோருக்குச் சொல்லி அடிமைகளை நல்லஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் முதலில் அவர்களுக்குக் கல்வி கற்பித்துச்சுயமாய் அன்னவஸ்திரத்துக்கு வேண்டியவற்றைச் சம்பாதிக்கும்

யுண்டாக்கிப் பின் அடிமைத்தனத்தி லிருந்து விடுவிக்க வேண்டு மென்றும் கட்டிவைத்த காட்டுமிருகத்தை அவிழ்த்து விடுதல்போல அடிமைகளை அவிழ்த்து விடுதலினாலே அவ்வடிமைகள் துன்பப் படுவார்களே யன்றிச் சுகமடைய மாட்டார்க ளென்றும் சொன்னார். யவ்வன புருஷரான கிலாட்ஸ்டன் பேசினவற்றைக் கேட்ட பார்லிமெண்டு மெம்பர்கள் பலரும் அவரை அன்றே மெச்சிப் பேசினார்கள். தனக்குச் செவ்வையாய்த் தெரியாத விஷயங்கள் பிரஸ்தாபிக்கப் படும்போதாவது, பேசவேண்டு மென்ற ஆசையினாலாவது கிலாட்ஸ்டன் பார்லிமெண்டு சபையிலே பேசுவதில்லை. இவருடைய போக்கை அறிந்தவர்கள் இவர் பேசத் தொடங்கினது முதல் முடிவுவரையில் இவருடைய வாக்கைக் கவனமாய்க் கேட்பார்கள். ஆரம்பத்திலேயே தன் வாக்கில் மெம்பர்கள் மதிப்பு வைக்கும்படி நடந்தார். சிறு பிள்ளையா யிருந்தும் காலமும் இடமுமறிந்து காரியம் செய்பவரானார். பெரிய வியாபாரியினுடைய வம்சத்திற் பிறந்தவரானமையாலே கிலாட்ஸ்டனுக்கு வரவு செலவு கணக்குகளைப்பரிசீலனைசெய்து எவருக்கும் தெளிவாக விளக்கும் திறமை இயல்பாகவே உண்டாயிருந்த தென்னலாம்.

## மந்திராலோசனைச் சபையில் உத்தியோகத்தைப் பெற்றது.

1834ம் வருஷத்தில் கிலாட்ஸ்டனுடைய பார்லிமெண்டு குருவான ஸர் ராபர்ட்-பீல் முதன் மந்திரியாக நியமனம் பெற்றார். இருபத்தைந்து வயதுள்ள சிறு பிள்ளை யென்றாலும் கிலாட்ஸ்டனுடைய வேலைத்திறமையை முதன் முதலறிந்தவர் பீல். ஆரம்பத்திலேயே கிலாட்ஸ்டனை இராஜ்யகஜா

ஞவிசாரணைக்கு நியமித்தார்; உடனே ஆங்கிலேயர் குடியேற்ற நாடுகளின் (colonies) விசாரணை செய்கிற காரியதரிசி வேலைக்கு கிலாட்ஸ்டன் நியமிக்கப்பட்டார். பார்லிமெண்டுப் பிரதிநிதி சபையிலே தினந்தோறுங் குடியேறப்பட்ட நாடுகளைப் பற்றி மெம்பர்கள் கேள்விகள் கேட்டுக்கொண்டே யிருப்பார்கள். அந்தக் கேள்விகளுக் கெல்லாம் உசிதமான ஜவாப்கள் ஸெக்ரிடேரியே சொல்லிச் சபையாரைத் திருப்திசெய்ய வேண்டும். சிறுபிள்ளை யாயினும் கிலாட்ஸ்டன் இந்த வேலையை மிக்க அனுபோகமும் வயது முதிர்ந்தவர்களையும் போலவே செய்தமையால் மெம்பர்கள் அனைவருக்கும் கிலாட்ஸ்டனிடத்தில் அச்சமும் மதிப்பும் பிறந்தன. வம்பர்கள் வீண் வினாக்களுங் கேட்பதுண்டு; அவற்றிற்குந் தக்கபதில் கிலாட்ஸ்டன் சொல்லி வந்தார்; எதிர்க்கக்ஷிக்காரர் வம்புக்கேள்விகேட்க அஞ்சினர். வேலை அற்பமா யிருந்தாலும் பெரிதா யிருந்தாலும் முழுமனத்தோடு செய்பவர்களை வெல்லுதல் இலேசல்ல. பீல் மிகச் சிறிதுகாலந்தான் மந்திரியாயிருந்தார். பீல் கன்ஸெர்வெடிவ் கக்ஷியைச் சேர்ந்தவர்; கிலாட்ஸ்டனும் அதேவகுப்பைச் சேர்ந்தவர்; பீல் வேலையை விட்டவுடன் கிலாட்ஸ்டனும் வேலையை விட்டார்.

---

## மந்திராலோசனை நியமனங்கள்.

பார்லிமெண்டு மகாசபை இரண்டு பிரிவினையுடையது; ஒன்று பிரபுக்கள் சபை. இது பட்டதாரிகள் கூடியது. இதில் ட்யூக், மார்க்விஸ், ஏர்ல், லார்ட் முதலான பட்டங்களைப்பெற்றவர்கள் மட்டில் இருப்பார்கள். இதிற்பலர் ஜமீன்தார்கள்போல விசாலமான பூஸ்திதி யுடையவர்கள்; மற்ற

வர் லோகோபகாரிகளா யிருந்தமையாலும், துரைத்தனத்தாருக்குப் பலவித ஸகாயங்கள் செய்திருந்தமையாலும் அரசனால் பட்டஸம்மானத்தை பெற்றவர்கள். பிரபுக்கள் எவருக்கும் பிரதிநிதிகளல்லர். தமது வம்சத்துக்கு மாத்திரம் பிரதிநிதிக ளென்னலாம். பிதாவின் பட்டம் ஜேஷ்ட குமாரனுக்குக் கிடைக்கும்; பிதா இறந்தபிறகு ஜேஷ்ட குமாரன் பிரபுக்கள் சபையில் ஆஸனம் பெறுவான். பிரபுக்களும் கன்ஸெர்வெடிவ், லிபெரல், என இரண்டு வகுப்பினராய்த் தானிருப்பார்கள்.

ஹவுஸ் அவ் காமன்ஸ் என்ற பிரதிநிதி சபையின் மெம்பர்கள் ஜில்லாக்களாலும், நகரங்களாலும் ஸர்வகலாசாலைகளாலும் தெரிந் தெடுக்கப்பட்டுப் பார்லிமெண்டுக்கு அனுப்பப்பட்டவர்கள். பிரதிநிதிகளுக்கே கௌரவமும் அதிகாரமும் மேலானது. பிரபுக்கள் ஸபைக்கு வரிகள் போடவாவது தள்ளவாவது அதிகாரங்கிடையாது. பார்லிமெண்டு பிரதிநிதி சபையாருக்கே வரிகள் போடும் அதிகாரம். இராஜ்யத்தின் வரவு செலவு கணக்குகளுக்குப் பிரதிநிதி சபையாரே ஜவாப்தாரிகள். தம்மவருக்கு உபகாரஞ் செய்வதற்கே கங்கணம் பூண்ட ஸத்புருஷர்கள் பிரதிநிதி ஸபையில் மெம்பர்களா யிருத்தலை விரும்பி, பிரபுக்கள் ஸபைக்குப்போக இஷ்டப்படாமலே ஆயுள் முழுவதையுங் கழித்திருக்கிறார்கள். கிலாட்ஸ்டனுக்கு எத்தனையோ முறை பட்டமளித்துப் பிரபுக்கள் ஸபையிலே சேரும்படி அனேகர் பிரயத்தனஞ் செய்தார்கள். "ஜனப்பிரதிநிதி" என்பதே தனக்குப் பெரிய ஸம்மான மென்று எண்ணி கிலாட்ஸ்டன் வேறுபட்டங்கள் தனக்கு வேண்டாமென்று மறுத்துவந்தார். இந்த ஒருவிஷயமே அவரை லோகோபகாரியென்று எண்ணுவதற்கு ருஜுவாகும்.

பிரதிநிதி சபையில் முன்னமேயே நாம்சொன்னவாறு இரண்டு கக்ஷிகள் உண்டு. இலெக்ஷனில் ஒரு முறையிலே கன்ஸெர்வெடிவ் கக்ஷியிலே சேர்ந்தவர்கள் மேஜாரிடியா யிருப்பார்கள்; லிபெரல்கள் மைனாரிடியா யிருப்பார்கள். உதாரணம்-தற்காலம் பார்லிமெண்டு பிரதிநிதிசபையில் 670 மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள்; 400 மெம்பர்கள் லிபெரல்களாயும் 270 மெம்பர்கள் கன்ஸெர் வெடிவ்களாயும் தெரிந்தெடுக்கப் பட்டால், லிபெரல்களுக் குத் தலைவரே பிரதானியாக நியமனம் பெறுவார்; மற்ற மந்திரிகளும் லிபெரல் கக்ஷியைச்சேர்ந்தவ ராகவே யிருப்பார்கள். கன்ஸெர்வெடிவ்களுக்குச் செல்வாக்குள்ள உத்தியோகம் ஒன்றுங் கிடைக்காது. அவ்வாறே கன் ஸெர்வெடிவ் கக்ஷிக்காரர் மெஜாரிடியா யிருந்தால் லிபெரல்களுக்குச் செல்வாக்கிராது. இதுதான் அங்கிலேய துரைத்தன முறை. ஒவ்வோர் சமயத்திலே பெரிய ஸங்க டங்கள் நேர்வனவு முண்டு. அந்தச் சமயங்களிலே கன் ஸெர்வெடிவ்களும் லிபெரல்களும் மந்திராலோசனை சபை யிலே சேர்ந்து துரைத்தனக் காரியங்களை நடத்துவார்கள். இந்தக் கலப்பு மந்திராலோசனை சபைக்குக் "கொயலிஷன் மினிஸ்டிரி" என்று பெயர். அடிக்கடி மந்திராலோசனைச் சங்கம் மாறுபட்டுவருவது பிரதிநிதிசபையிலுண்டாகு மாறு தலை அனுசரித்தது. இதைச் செவ்வையாக மனத்திலே பதியவைத்தல் வேண்டும். கன்ஸெர்வெடிவ் மெம்பர்கள் லிபெரல்களாகவும் லிபெரல்கள் கன்ஸெர்வெடிவ்களாகவும் மாறுதலுமுண்டு. இளம் பிள்ளை விளையாட்டாக ஒரு கக்ஷியி லிருந்து மற்றொரு கக்ஷிக்கு ஒருவரும் போதலில்லை. கக்ஷி மாறுதலுக்கு நியாயங்கள் பூரணமாயிருக்கும். 1834-ம் வருஷம் டிஸெம்பர் முதற்கொண்டு 1835-ம் வருஷம் ஏப்

ரில் மாதம் வரையில் பீல் பிரதானியாயிருந்தார். பிரதிநிதி சபையில் அவருக்கு எதிர்த்த கக்ஷிக்காரர் மெஜாரிடியாய் விட்டபடியால் பீல் பிரதானி உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டார். லிபெரல் மினிஸ்டிரி வந்தது. 1835-ம் வருஷமுதற்கொண்டு 1841-ம் வருஷம் வரையில் லிபெரல்களே மந்திராலோசனை ஸபை மெம்பர்களாக இருந்தார்கள். பீல் கனவானுக்கும் அவர் கக்ஷியிற்சேர்ந்த கிலாட்ஸ்டனுக்கும் பிரதிநிதி சபை மெம்பர் உத்தியோகத்தைத் தவிர துரைத்தனத்தில் வேறு அதிகாரமில்லை. ஜெனரல் இலெக்ஷனென்பது ஏழுவருஷத்திற் கொருமுறைதான். பிரதிநிதி சபையில் ஒரு முறை இலெக்ஷனானவர் ஏழுவருஷம் வரைக்கும் மெம்பராக இருக்கலாம்.

ஆறு வருஷ காலமும் துரைத்தன காரியம் ஒன்று மில்லாமல் மெம்பராக மாத்திரம் இருந்த கிலாட்ஸ்டன் சும்மாவிருக்கவில்லை. இவர் மனம் ஓய்ந் திருந்தலென்பது என்றுமில்லை. பார்லிமெண்டு கம்மிட்டிகளில் மெம்பராக நியமனம் பெற்று அந்தச் சபைகளில் ஆலோசனைக்கு வந்த விஷயங்களெல்லாவற்றிலும் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிவந்தார்.

சுயமத அபிமானம் கிலாட்ஸ்டனுக்கு மிகுந்திருந்ததென்றும் கிறிஸ்தவ வேதபாஷியங்களை நன்றாய்க் கற்றிருந்தாரென்றும் முன்னரே கூறப்பட்டுள்ளது. இறைமாட்சிக்கு ஈசுரபக்தி இன்றியமையாததென்பது கிலாட்ஸ்டனுடைய கொள்கை. "கடவுள் வழிபாடு செம்மையாய் நடத்தப்படுதலைக் கவனிப்பது துரைத்தனத்தாருடைய கடமை. பிரஜைகள் நிரீச்சுரவாதிகளா யிருந்தால் அரசு கெடும்." இந்த அபிப்பிராயத்தை ஆதாரமாகக்கொண்டே

கிலாட்ஸ்டன் தன்னுடைய காரியங்களைச் செய்து வந்தார். துரைத்தன உத்தியோகக் கவலையொன்று மில்லாதிருந்த காலத்திற் கிலாட்ஸ்டன், துரைத்தனத்திற்கும் மதவிசாரணைக்கும் இருக்கும் சம்பந்தங்களை விளக்கற் பொருட்டு ஒரு கிரந்தம் எழுதினார். ஆஸ்திகபுத்தியுள்ள கிறிஸ்தவரனைவரும் அந்த கிரந்தத்தைக் கொண்டாடினார்கள்.

---

## கிலாட்ஸ்டனது திருமணம்.

1839-ம் வருஷத்தில் கிலாட்ஸ்டன் தேகசௌக்கியத்திற்காக இடாலிதேசத்துக்குப் போயிருந்தார். அங்கு லேடி க்லின் என்னும் சீமாட்டியும் அவருடைய இரண்டு கன்னிகைகளும் தேகசௌக்கியத்திற்கு வந்திருந்தார்கள். லேடி க்லின் என்னுஞ் சீமாட்டி பாரனெட் என்னும் பட்டம் பெற்றவருடைய மனைவி. குலத்தினாலும் செல்வத்தினாலும் உயர்ந்த வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீ. இந்தக்குடும்பத்தாரைக் கிலாட்ஸ்டன் முன்னமே நன்றாயறிந்திருந்தார். லேடி க்லின் என்பவருடைய ஜேஷ்டகுமாரிக்குக் காதரைன் என்று பெயர். லேடிக்லின்னுக்குச் சொந்தமான மாளிகை ஹவார்டேன். இதுவெகு புராதனமானது. 1839-ம் வருஷத்தில் ஹவார்டெனில் கிலாட்ஸ்டனுக்கும் காதரைன் என்னும் கன்னிகைக்கும் விவாகமகோற்சவம் நடந்தது. அன்றுமுதல் காதரைன் தன்கணவன் பக்கலிலிருந்து விலகி நின்றதில்லை. 1898-ஹு மேமீ 18உ கிலாட்ஸ்டன் நிரியாணமடைந்த காலத்திலேதான் இந்தத் தம்பதிகளுக்குட் பிரிவுவந்தது. "அனுகூல தாம்பத்தியம்" என்பதற்கு உதாரணம் வேண்டுமானல் கிலாட்ஸ்டனையும் அவருடைய மனைவியையுமே சொல்லவேண்டும். தமிழ் வேதத்தில் "தற்



“ஹாவார்டென்” என்னும் கிளாட்ஸ்டன் மாளிகை.

காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" எனக் கூறப்பட்டுள்ளது—இதன் பொருள், பதிவிரதா தருமத்தினின்றும் விலகாமலே தன்னைக்காத்துத் தன்கணவனையும் உண்டிமுதலியவற்றால் ரக்ஷித்துத் தனக்கும் தன் கணவனுக்கும் புகழ் நீங்காமற் பாதுகாப்பவளே பெண்ணாவாள் என்பது. "ஏவாமக்கள் மூவாமருந்தே"ன் பார் ஏவாமனைவி—கணவனுடைய குறிப்பறிந்து செய்பவள்—மூவாமருந்து என்று சொல்லல்வேண்டும். உபதேசம் எத்தனை முறைசெய்தபோதிலும் கவனியாமலே தன் வழியே செல்லும் மனைவியரை மணம் புரிந்த கணவர்கள் கஷ்டமே கஷ்டம். குலத்திலும், குணத்திலும் அழகிலும் காதரைன் க்லின் கிலாட்ஸ்டனுக்கு ஏற்றவாழ்க்கைத் துணைவியாயிருந்தனள். இதுவும் கிலாட்ஸ்டனுடைய பெரியபாக்கியம். சாமானிய ஜனங்களுக்கு இது கிடைக்காதபேறு. உடலும் உயிரும்போல இவ்விருவரும் ஒத்து வாழ்ந்ததைக்கண்டு அனைவரும் வியந்தனர். ஹவார்டென் என்னும் மாளிகை இறுதியிலே கிலாட்ஸ்டனுக்கும் அவர் மனைவிக்குஞ் சொந்தமாயிற்று. கிலாட்ஸ்டன் உத்தியோகங்களிலிருந்து விலகினபின் நிரியாணகாலம் வரையில் ஹவார்டெனிலே வஸித்து வந்தார்.

---

## கன்ஸேர்வேடிவ் கக்ஷி அதிகாரம் பெற்றது.

1841-ம் வருஷத்தில் புதிய ஜெனரல் இலெக்ஷன் நடந்தது. இந்த இலெக்ஷனிலே பார்லிமெண்டு மகாசபை மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் மெஜாரிடி கன்ஸெர்வெடிவ்கள். இந்தக் கக்ஷிக்குத்தலைவர் ஸர் ராபர்ட் பீல. மேற்சொன்ன 1841-ம் வருஷம் ஸெப்டெம்பர்மீ

61360

வேயில் ஸர் ராபர்ட் பீல் பிரதானி உத்தியோகத்தை வகித்தனர். மந்திராலோசனைக்குவேண்டிய இதர உத்தியோகஸ்தர்களை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் இவருடையதாயிருந்தது. சரித்திர நாயகர் பார்லிமெண்டிலே பிரவேசித்ததை யடைந்தவராயிருந்த படியால் பீல்கனவான் கிலாட்ஸ்டனை வியாபார விசாரணைக்கர்த்தராக நியமித்தார். மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்கவேண்டுமா? வாணிபகுலத்திற்பிறந்த கிலாட்ஸ்டனுக்கு அந்தவாணிபத்தைவிருத்திசெய்யும் மார்க்கங்கள் தெரியாமற் போகுமா? 1841-ம் வருஷத்தில் அங்கிலேயே தேசத்திலே சட்டப்பிரகாரம் அன்னிய தேசத்து இறக்குமதிச் சரக்குகளுக்கு அதிக வரி ஏற்பட்டிருந்தது. உள்ளூர் விளை பொருள்களுக்கு எந்தக்காலத்திலும் விலைவாசி குறையாமலிருத்தலுக்காக இந்த இறக்குமதி வரி போடப்பட்டிருந்தது. அன்னியதேசத்துச்சரக்குகளிலே பல, உணவுப்பொருள்களாயிருந்தன. வரிஎத்துணை ஜாஸ்தியாகப் போட்டாலும் பணக்காரர் இலேசாய்க் கொடுத்துத் தங்கள் சுகங்களுக்கு ஒரு குறைவும் வராமற் பார்த்துக் கொள்வார். ஏழைகள்பாடுதான் எப்போதுங் கஷ்டம். கிலாட்ஸ்டனுக்கு ஏழைகளிடத்திலே தயைமிகுதி. அவ்வேழைகள் படும்பாடுகளை நேரிலே பார்த்திருந்தமையால் யாதாமொரு சாதகத்தைத் தனக்கு அதிகாரம் இருக்கிற காலத்திலே செய்யவேண்டுமென்று தீர்மானஞ்செய்து 1200 சரக்குகளுக்கு இறக்குமதி வரிகளைத் தள்ளப் பிரயத்தனஞ் செய்தார். உள்ளூர் வியாபாரிகளுக்கு அனுகூலமாக இருந்த பார்லிமெண்டு மெம்பர்கள் இவ்வாறு வரிகளைத் தள்ளிவிடுவது ஸரியல்லவென்று ஆக்ஷேபித்தார்கள். கிலாட்ஸ்டனுடைய சாதுரிய வசனத்தாலே பார்லிமெண்டு மெம்பர்களில் மெஜாரிடியார் வரிகளைத் தள்ளுவதற்கே அனுமதி கொ

டுத்துவிட்டார்கள். ஏழைகளுடைய மனமும் வயிறுங் குளிர்ந்தன. பரோபகார சிந்தையுள்ள பிரதானிகளல்லவோ நாட்டிற்கு நன்மை செய்பவர்கள்!

---

## அயர்லாண்டு ஸமாசாரம்.

அயர்லாண்டு அங்கிலேய தேசத்திற்கு மேற்கிலுள்ள தீவு. இதின் விஸ்தீரணம் 32,583 சதுரமைல். 1901-ம் வருஷத்திய ஜனகணிதப்படி ஜனத்தொகை சுமார் 45லக்ஷம். கி-பி-1172-ம் வருஷத்தில் அங்கிலேய அரசருக்கு அயர்லாண்டிலே சிலபாகம் சொந்தமாயிற்று. பதினைந்தாவது நூற்றாண்டில் அங்கிலேயருக்குச் செல்வாக்கு அதிகப்பட்டது. எலிஜபெத் மகாராணியவர்கள் அங்கிலேய தேசத்தை ஆண்டகாலத்தில் [1558-1603.] அயர்லாண்டிலே கலகங்கள் ஏற்பட்டன. எலிஜபெத்துக்குப்பின் பட்டத்துக்கு வந்த முதல் ஜேம்ஸ் என்னும் அரசன்காலத்திலே கலகங்கள் அடக்கப்பட்டன. கலகஞ் செய்தவர்களுடைய பூஸ்திதிமுற்றிலும் முதல் ஜேம்ஸினாலே பறிமுதல் செய்யப்பட்டது. அந்தப்பூமிகளெல்லாம் கிறிஸ்தவர்களிலே பிராடெஸ்டண்டு மதஸ்தர்களாயும் அரசனுக்கு வேண்டியவர்களாயு மிருந்த கனவான்களுக்குக் கொடுக்கப்பட்டன. மிராசு பாத்தியத்தை இழந்து கூலிக்கு வேலைசெய்யும் குடியானவர்களாக அயர்லாண்டு தேசத்திலிருந்த அனேகர் ஆய்விட்டார்கள். ஆங்கிலேயப் பிரபுக்கள் தமக்குக் கிடைத்த நிலங்களைப் பயிரிட்டுவந்த அயர்லாண்டு தேசத்தாரிடத்தில் மிகுந்த கொடுமை செய்துவந்தார்கள். அயர்லாண்டு தேசத்தவரில் நூற்றிற்குத் தொண்ணூறு பேர்கள் ரோமன்காதலிக் கிறிஸ்தவர்கள். ரோமன்

காதலிக்குகளும் பிராடெஸ்டண்டுகளும் எலியும் பூனையும் போன்ற ஜன்மவிரோதிகள். யஜமான் ஒருமதமும், குடியானவன் வேறு மதமாகவுமிருந்தால் ஒத்துநடத்தல் இயலாது. குடியானவன் கலகக்காரரோடு ஸம்பந்தப்பட்டவனென்றால் அவனிடத்தில் யஜமானுக்கு அனுதாபம் பிறத்தலுமரிது. அயர்லாண்டாருக்கும் அங்கிலேயருக்கும் ஆதிமுதற்கொண்டேவிரோதம் ஜனித்துவிட்டது. ஸமயம் வாய்த்தபோதெல்லாம் அயர்லண்டார் கலகஞ்செய்வதுண்டு. இருதிறத்தாருக்குள்ளும் கொலை நடக்கும். கிபி-1641, 1690, 1798-வருஷங்களிலே பெரியகலகங்கள் ஏற்பட்டு அயர்லாண்டாருடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுப் பிராடெஸ்டண்டு மதத்தைச் சேர்ந்தவர்கள் பறிமுதலான பூமிகளையடைந்தார்கள். அயர்லாண்டு ஜனங்களுக்கு ஆத்திரம் பெருகிற்றேயன்றித் தம்மையாளும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களிடத்திலாவது பிராடெஸ்டண்டு மிராசுதார்களிடத்திலாவது எள்ளளவேனும் அன்புபிறக்கவில்லை. அயர்லாண்டுக்கு 1801-ம் வரையிலே தனிப்பார்லிமெண்டிருந்தது. அந்த வருஷத்திலே தனிப்பார்லிமெண்டு எடுபட்டு ஆங்கிலேய பார்லிமெண்டுக்கு 105 மெம்பர்கள் அயர்லாண்டு தேசம் அனுப்பவேண்டுமென்று சட்ட நிருமாணமாயிற்று. அன்று முதல் இதுவரையில் அயர்லாண்டுக்குத் தனிப்பார்லிமெண்டு கொடுத்தலாகாதென்பது அனேகருடைய கக்ஷியாயிருக்கிறது. ஸர் ராபர்ட் பீல் 1841-ம் வருஷத்திலே பிரதானியாக வந்தாரென்றோம். ரோமன் காதலிக்கு ஜனங்களுக்குச் சௌகரியங்கள் செய்யப் பீல் பிரியப்பட்டார். காதலிக் படிப்புக்கும் பிராடஸ்டண்டு படிப்புக்கும் வித்தியாஸமுண்டு. அயர்லாண்டிலே தமக்கு ஏற்ற கல்வி கிடைக்காமையால் அந்த நாட்டுக்காதலிக் கிறிஸ்தவர்

கள் பிரான்சு, இடாலி முதலிய இடங்களுக்குச்சென்று கல்வி பயின்று வந்தனர். இவ்வாறு அயர்லாண்டார் கஷ்டப்படு வது ராஜதருமமன்றென்று எண்ணி அவர்களுக்குப் பாட சாலைகள் பிரத்தியேகமாக ஏற்படுத்தவும், காதலிக்குகளால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பாடசாலைகளுக்கு ஸகாயதிரவியம் அதிகமாகக் கொடுக்கவும் பீல் பிரேரேபணை செய்தார். பீலுடைய சிஷ்யனாயிருந்த கிலாட்ஸ்டன் அவரோடொத்து நடப்பாரென்றே எல்லோரும் எண்ணும்படி யிருக்கும். கிலாட்ஸ்டன் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாக எந்தக் காரியத்தையும் செய்தலில்லை. பொருள் லாபத்தைக் கவனிப்பவர்கள் மத விஷயத்தைச் சொற்பனத்திலு மெண்ண மாட்டார்கள். கிலாட்ஸ்டன் பொருளையும் அதிகாரத்தையுந் திருணமாக நினைத்துத் தன் கொள்கை களையே மேலாகக் கொண்டாடினவர். கிலாட்ஸ்டன் உறுதி யான பிராடெஸ்டண்டு; ரோமன் காதலிக்கு மதத்தை நம் பினவரன்று; ஆதலின் ரோமன்காதலிக் மதஸ்த்தர்களுக்குப் பீல் உதவிசெய்ய உத்தேசித்தவுடன் கிலாட்ஸ்டன் தனக்கு மந்திராலோசனைச் சபையிலிருந்த உத்தியோகத்தை ராஜி நாமா கொடுத்து விட்டார். இந்த நடவடிக்கையைச் சிறு பிள்ளைத்தனம் என்றார் சிலர்; உலக நடவடிக்கைக்கு விரோதமென்றார் பலர். எவர் அவமதிப்பையும் லக்ஷி யம் செய்யாமல் சுயமத அபிமானத்தையே பெரிதாகக் கொண்டு பெரிய உத்தியோகத்தைக் கிலாட்ஸ்டன் விட்டு விட்டார். "நாய்விற்ற காசென்றாற் குரைத்துக்காட்டுமா" என்று நினைப்பவர் பணத்தையே சாசுவதமாக எண்ணி மதவிஷயங்களைக் கட்டித் தூரமாக வைத்து விடுவார்கள். இத்தகைய பிரபுக்களுக்குக் கிலாட்ஸ்டன் முற்றிலும் விலக்கு.

பீல் பிரதானியாக இருந்த (1841—1846) காலத்தில் வியாபார ஸம்பந்தமான பெரியவழக்கு ஒன்று ஏழை ஜனங் களுக்கு அனுகூலமாகத் தீர்மானிக்கப் பெற்றது. உள்ளூ ரில் விளையும் தானியங்களுக்குத் தக்க விலைகள் கிடைப்ப தற்கென்று அயலூர்த்தானியங்களுக்கு இறக்குமதி வரி ஜாஸ்தியாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அயலூர் வியாபாரிகள் தங்கள் சரக்குகளை உள்ளூராரை விடச் சகா யமாக விற்பனைசெய்து தமக்கு லாபத்தையும் உள்ளூரா ருக்கு நஷ்டத்தையும் உண்டாக்க இடங்கொடுத்த லாகா தென்ற குருட்டு நியாயத்தை அனுசரித்துச் சட்டம் பிறந்த தென்னலாம். ஸகாயமாய்க் கிடைக்கும் இடங்களிலே சரக் குகளை வாங்கிக் கிராக்கியாயிருக்கிற இடங்களில் விலை யாக்குவது வாணிப தருமமாயிருக்க, கிருத்திரமச் சட்டத் தால் உள்ளூரார் மிகுந்த லாபத்தையடைவதற்கு வேண்டிய அளவு அத்தேசத்தில் இடங்கொடுக்கப் பட்டிருந்தது. பார் லிமெண்டு மெம்பர்களில் அனேகர் அந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று முயன்றார்கள். அயர் லாண்டில் அதேகாலத்திலே பஞ்சமுண்டாயிற்று. கைத் தொழிற் சாலைகள் ஏற்படாமலும், பலரும் விவசாயத் தினல் ஜீவனஞ் செய்பவர்களாயு மிருந்த அயர்லாண்டு ஜனங்கள் மேற்சொன்ன கருப்புக்காலத்திலே பட்டபாடு கள் வாயினற்சொல்ல வழங்கா. பீல் ஏழைகள் படும் பாட்டைக்கண்டு மனமிரங்கி அயலூர்ச் சரக்குகளுக்குப் போட்டிருந்த இறக்குமதிவரிகளைத் தள்ளினர். விசால மான பூஸ்திதியை வைத்துக்கொண்டு அதிக லாபத்தை யடைந்து வந்தவர்களெல்லோரும் பீலிடத்தில் வெறுப்ப டைந்தார்கள். கிலாட்ஸ்டன் இந்தசமயத்திலே பார்லிமெண் டில்மெம்பராயில்லாவிடினும்மந்திராலோசனைச் சபையிலே

பெரிய உத்தியோகத்தை வகித்துப் பீலுக்குப் பலவகைகளிலுமுதவிபுரிந்துவந்தார். தானிய இறக்குமதி வரியைத் தள்ளுவதற்கு மலையத்துணைப் பிரயத்தனஞ் செய்தவர்கள் காப்டென், பிரைட், என்னும் இரண்டு லோகோபகாரிகள். ஏழைகள் இவர்களிருவரையும் இன்னும் வாழ்த்துகிறார்கள்.

---

## ஆக்ஸ்போர்ட்யூனிவர்ஸிடி பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டது.

1833-ம் வருஷமுதல் 1845-ம் வருஷம் வரையிலே கிலாட்ஸ்டன் நீவார்க் என்னும் பட்டணத்திற்குப் பார்லிமெண்டுப் பிரதிநிதியாக விருந்தார். தானிய இறக்குமதிவரி ரத்து செய்ததில் நீவார்க் இலெக்டர்களுக்குக் கிலாட்ஸ்டனிடத்திலிருந்த அபிமானம் குறையவே, அந்தப் பட்டணப் பிரதிநிதி உத்தியோகத்தைக் கிலாட்ஸ்டன் விட்டுவிட்டார். அப்படியிருந்தும் பீல் கிலாட்ஸ்டனுக்கு மந்திராலோசனைச் சபையிலே பெரிய உத்தியோகத்தைக்கொடுத்தார். 1847-ம் வருஷத்தில் ஜெனரல் இலெக்ஷன் ஒன்று ஏற்பட்டது.

ஆக்ஸ்போர்ட் ஸர்வகலாசாலையின் மாணுக்கர்களுள் கிலாட்ஸ்டன் அதிகப் பிரசித்தத்தை யடைந்தவராயும் பிராடெஸ்டண்டு மதத்தில் மிகுந்த அபிமான முள்ளவராயும் அந்தரங்கமாக ஈசுரபக்தி யுடையவராயு மிருந்தமையால் ஸர்வகலாசாலை அதிகாரிகள் தமக்குப்பிரதிநிதியாகக் கிலாட்ஸ்டனைத் தெரிந்தெடுத்துப் பார்லிமெண்டு மகாசபைக்கு அனுப்பினார்கள். பாலப்பருவத்திலே கல்விபயின்ற பாடசாலையிடத்தில் அன்பு பாராட்டல்

மனிதர்க்கியற்கை. கல்வி, ஒழுக்கம் இரண்டும் தனக்கு மிகுதியாக உண்டான ஆக்ஸ்போர்டுக்குப் பிரதிநிதியாக நியமனம் பெற்றதிலே கிலாட்ஸ்டனுக்கு உண்டான ஆனந்தம் அளவிறந்தது. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' "வித்வானேவ விஜாநாதி வித்வஜ்ஜன பரிச்ரமம்"—வித்வான்கள் மாத்திரம் வித்துவான்களுடைய மேன்மையான முயற்சிகளை மதிக்கத் தக்கவரென்று முதியோர் வாக்குளது. அதற்கொத்தவாறே ஆக்ஸ்போர்ட் வித்வான்கள் கிலாட்ஸ்டனைத் தெரிந்தெடுக்கலானார்கள்.

1847-ம் வருஷ இலெக்ஷனில் லிபெரல் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் மெஜாரிடியாயிருந்தமையால் ஸர் ராபர்ட் பீல் பிரதானியாக வரவில்லை. லிபெரல்கக்ஷித் தலைவரான ரஸ்ஸெல் பிரபு பிரதானியானார். கிலாட்ஸ்டன் அந்தக் காலத்திலும் கன்ஸெர்வெடிவ் கொள்கைகளை யனுசரித்தவராயிருந்தார்; ஆதலின் இவருக்கு மந்திராலோசனைச் சபையில் உத்தியோகம் ஒன்றுங் கொடுக்கப் படவில்லை. அயல் ராஜ்ய விசாரணைக் கருத்தராயிருந்தவர் பாமெர்ஸ்டன் என்னும் பிரபு. அயல்தேசத்து அரசருடன் கடிதப் போக்கு வரவுசெய்துவரும்மந்திரி பொறுமை, வியவஹார ஞானம், உபாயம், முதலிய குணங்களின் நிதியாயிருத்தல் அவசியம். பாமெர்ஸ்டனோ "தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று ஸ்தாபிக்க முயல்பவர். "ஸாதயந்திஹி கார்யாணி தூதாப்பண்டித மானின:" என்று தூததருமமிருக்க இதனை முற்றிலுந் துறந்து தன் அபிப்பிராயமே சரி; ஏனையோர் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளத் தகாதனவென்று நினைப்பவர் மந்திரிவேலை பார்த்தால் அரசனுக்கு ஆபத்து வருவது திண்ணம்.

## டான் பாஸிபிகோ விஷயம்.

1848-ம் வருஷத்திலே பார்லிமெண்டு மகாசபையில் ஆங்கிலேய அரசருடைய பிரஜைகளின் சுதந்தரங்களைப் பற்றின முக்கியமான விஷயம் விசாரணைக்கு வந்தது. பாஸிபிகோ என்பவன் அங்கிலேயப் பிரஜை; க்ரீஸ்தேசத்தின் ராஜதானியாகிய ஆதென்ஸ் நகரத்தில் அவன் வியாபாரஞ்செய்து வந்தான். ஜாதியில் யூதன். ஆதென்ஸ் நகரவாஸிகள் பாஸிபிகோ வீட்டைக் கொள்ளை யிட்டார்கள். பாஸிபிகோ ஆங்கிலேய அரசருக்குத் தானடைந்த நஷ்டங்களைப்பற்றி மனுச்செய்துகொண்டு க்ரீஸ் அரசர் தன் நஷ்டத்துக்கு உத்தரவாதஞ் செய்யவேண்டுமென்ருன். பாமெர்ஸ்டன் க்ரீஸ் அதிகாரிகளுக்குப் பாஸிபிகோமனுவை அனுப்பிப் பரிகாரஞ் செய்யும்படி வேண்டினர். க்ரீஸ் அரசன் உதாசீனமா யிருந்தபடியால் அங்கிலேயருடைய சண்டைக் கப்பல்கள் க்ரீஸ்க் கப்பல்களைக் கைப்பற்றி அவருடன் யுத்தத்துக்கு ஏற்பாடு செய்தன. லிபெரல் மந்திராலோசனைச் சபையார் செய்த காரியம் நியாயவிரோத மென்று பிரபுக்கள் சபையிலே தீர்மானிக்கப்பட்டது. பிரதிநிதிகள் சபையிலே பாமெர்ஸ்டன் நாலுமணி நேரம் தான்செய்தது நியாயமென்று வாதாடினர். "அங்கிலேய அரசருடைய பிரஜை எந்தநாட்டிலே துன்பத்துக் குள்ளாக்கப் பட்டாலும் அந்தப்பிரஜையைரக்ஷித்துத், துன்பஞ்செய்தவரைச் சிக்ஷிப்பது அங்கிலேய துரைத்தனத்தாருடைய முதற்கடமை" என்ருர். பூர்வகாலத்து ரோமர் தமது நாட்டாருடைய சுதந்தரங்களை ரக்ஷித்ததுபோல அங்கிலேயப் பிரஜைகளையும் ரக்ஷிப்பது தான் சரியென்று பாமெர்ஸ்டனை அனுவதித்துப்பேசின மெம்பர்கள் பலர். கிலாட்ஸ்டன் அந்த விஷயத்தை மறுத்துப்பேசினர். "ரோமர் பல நாடுகளிற் போர்

புரிந்து இதரஜாதியாரைத் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டவர். சுயஜாதிக்குச் சுதந்தரங்களை அபிமானத்தால் அதிகமாகக் கொடுத்திருந்தார்கள். ரோமர்களை அங்கிலேயருக்கு ஒப்பாகச் சொல்வது நியாயமாகாது," என்று கிலாட்ஸ்டன் தருக்கித்தார். பாமெர்ஸ்டன் பிரபுவின் மதம் எல்லாருடைய மதமாயிருக்குமாயின் அங்கிலேயே தேசத்தாருக்கும் இதர தேசத்தாருக்கும் ஓயாத சண்டை நடந்து கொண்டேயிருக்கும். பாமெர்ஸ்டன் சுயஜாதி அபிமானத்தைப் பெரிதாகக் கொண்டவர்; கிலாட்ஸ்டன் நடுவு நிலைமையில் நடக்க விரும்பினவர். தக்க பிரகாந்தரங்களில்லாமல் அன்னிய தேசத்தாரோடு சண்டைக்குப் போகக் கிலாட்ஸ்டன் பிரியப்பட்டவரல்லரென்பதைக்காட்ட மேற்கூறிய விஷயம் ஒன்றே போதும்.

---

## நேபில்ஸ் ராஜ்யத்தைப்பற்றி.

1850-ம் வருஷத்தில் கிலாட்ஸ்டன் ஸம்ஸாரஸஹிதமாக இடாலியிலுள்ள நேபில்ஸ் என்னும் ஊருக்குப்போனார். ஐரோப்பியர் "நேபில்ஸைப் பார்த்துவிட்டபிறகு சாதல் நலம்" என்பார். நேபில்ஸ் கடற்கரையோரத்திலுள்ள பெரியபட்டணம். கடலின் அமைப்பு அற்புதமானது. அதற்குச் சமீபத்தில் விஸுவியஸ் என்னும் எரிமலையுள்ளது. வியாபாரக் கப்பல்கள் கணக்கில்லாமல் துறையில் வந்து நிற்கும். மனோகரமான காற்றுவீசும். சிலவியாதிகளுக்கு நேபில்ஸிலடிக்குங் காற்று, கைகண்ட ஔஷதமாம். அதை உத்தேசித்துத்தான் கிலாட்ஸ்டன் நேபில்ஸுக்கு வந்தார்.

இதற்கு முன்னரே இடாலிதேசம் சீரழிந்திருந்த நிலைமையைப் பற்றிச் சொன்னோம். தென்பாகமாகிய நேபில்

ஸுக்கு அரசனுயிருந்தவர் அரசநீதிதவறிப் பிரஜைகளைப் பலவாறு வருத்திவந்தார். பரதுக்கஞ் சகியாத பரமாத்மா வர்கிய கிலாட்ஸ்டன் நேபில்ஸ் பிரஜைகள்படும் கஷ்டங்களைக் கண்ணாரப்பார்த்தும் காதாரக்கேட்டு மிருந்தார். நேபில்ஸிலே அரசனுக்கு விரோதியென்று எவன்மேலே சமுசயம் பிறக்கின்றதோ அவன் உடனே சிறையி லடைக்கப்பட்டுப் பலவாறான இமிசைக்குள்ளாவான். நியாயாதிபதிகள் அரசன் மனத்தின்படி தீர்ப்புச் செய்தார்களேயன்றி நியாயத்தைக் கவனித்துச் செய்தாரில்லை. தக்க கனவான்களையுஞ் சிறைப்படுத்தித் துன்பத்துக்குள்ளாக்குவது நேபில்ஸ் ராஜ்யத்துக்கு ஸாதாரணமான காரியம்.

இதைக் கேள்வியுற்ற வுடனே கிலாட்ஸ்டன் அதிகாரிகளுடைய அனுமதிபெற்றுச் சிறைச்சாலைகளுட் பிரவேசித்து அங்கு பலவகையான வதைகள்பட்டுக் கொண்டிருந்த பிரஜைகளது குற்றங்களின் வரலாற்றையும், அநீதியாகத் தண்டிக்கப்பட்டதையும் செவ்வையாக விசாரித்து உடனே லார்ட் அபெர்டின் என்பவருக்கு "நேபில்ஸ் அக்கிரமங்களை" ப்பற்றி விவரமாகக் கடிதங்கள் எழுதினர். இந்தக் கடிதங்கள் வர்த்தமான பத்திரிகைகளிலே பிரசுரஞ் செய்யப்பட்டுநாகரிகராஜ்யமான நேபில்ஸில் நடக்கும் அக்கிரமங்கள் வெளியாயின. ஐரோப்பாக் கண்டத்தி லுள்ளவர்களுக் கெல்லாம் நேபில்ஸ் அரசரிடத்தில் மிகுந்த வெறுப்புண்டாயிற்று. அவ்வரசரும் தான்செய்த காரியங்கள் நியாயமானவையென்று எதிர்வாதம் பேசி அங்கிலேய துரைத்தனத்தாருக்கும் இதரருக்குங் கடிதங்கள் எழுதினர். அரசுரிமை பூண்டவரும் தமது நடபடிக்கைகளைப் பற்றி அன்னியர் தம்மிடத்திற் குறை சொல்லலாகாதென் றெண்ணினர் போலும்.

கிலாட்ஸ்டன் எழுதின கடிதங்களாலே சிறைச்சாலைக்கொடுமைகள் ஒருவாறு தணிக்கப்பட்டன. சாதாரணக்குற்றவாளிகளைப்போல ராஜ விரோதிகளை நடத்தல் சரியன்றென்று நேபில்ஸ் அரசருக்கும் ஏற்பட்டது. கிலாட்ஸ்டனுடைய முக்கிய கருத்து நேபில்ஸ் அரசருக்குக் கேடுசெய்ய வேண்டுமென்பதல்ல. பிரஜைகள் ராஜ்யத்திலேகலகம் செய்வதேன்? குறைகள் பரிகரிக்கப்படாமலிருந்ததினு லல்லவோ? கலகத்தைக் கண்டவுடனே குறையிருத்தலைப் பரிசீலனை செய்தல் வேண்டும். அதை விட்டுக் குறை கூறுவோரையும் அவருடன் சேர்ந்தவரையும் சித்திரவதைக் குள்ளாக்குவது நீதியாமோ? குறைகளில்லாம லிருக்கையிலே பிரஜைகள் அரசரால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகளுக்கு விரோதமாய் நடப்பதில்லை. இது ஸர்வஜனஸம்மதம். தம்மிஷ்டத்தையே சட்டமாக நினைத்துப் பிரஜைகள் நடத்தல் வேண்டுமென்று கருதும் அரசர்கள் முடிவில் கருத்து நிறைவேருமலே துக்கப்படுவார்கள். அயல்ராஜ்ய விஷயத்திலே கிலாட்ஸ்டனுக்குப் பிரவேசிக்க அதிகாரம் எங்கிருந்து வந்தது? கஷ்டப்படுகிறவர்கள் எந்த நாட்டாராயிருந்தாலென்ன? கஷ்டநிவிருத்தி செய்தல் விவேகிகளின் கடமையல்லவா? துஷ்ட நிக்கிரஹம், சிஷ்டபரிபாலனம்—இரண்டும் அரசுரிமை பூண்டவர்களின் முதற்கடமைகளன்ருே? பிரதானி உத்தியோகத்தைப்பெற இருப்பவர் எவருக்கும் அரசநீதி செவ்வையாய் மனத்திலே பதிந்திருக்கு மல்லவா? கிலாட்ஸ்டனும் தனது நாட்டுத் துரைத்தனம் எவ்வாறு நடத்தப்படவேண்டுமென்று எண்ணினுரோ அவ்வாறே அன்னிய நாட்டாரும் செய்தல் வேண்டுமென்று விரும்பினுர். இது குற்றமாகாது. அநீதியான அரசு அதிககாலம் நிலைபெருது. நேபில்ஸ் அரசும் சிறிது

காலத்தில் அழிக்கப்பட்டுப் பிரஜைகளின் விருப்பத்தின் படி துரைத்தனம் ஸ்தாபிக்கப்பட்டது. நேபில்ஸ் அக்கிரமங்கள் தொலைந்து குடிகள் சுகமடைந்ததற்குக் கிலாட்ஸ்டனது முக்கிய பெருமுயற்சியே காரணமென்னலாம்.

1852-ம் வருஷத்தில் ஜெனரல் இலெக்ஷன் ஏற்பட்டது. பார்லிமெண்டு பிரதிநிதிசபையில் முன் இலெக்ஷனில் லிபெரல்கள் மெஜாரிட்டியா யிருந்தார்கள். 1852-ல் கன்ஸெர்வெடிவ்கள் மெஜாரிட்டி யானுர்கள். ரஸ்ஸெல் பிரபு பிரதானி வேலையை விடலாயிற்று. கன்ஸர்வெடிவ் தலைவரான டெர்பி பிரபு பிரதானியானுர். மற்ற மந்திராலோசனை சபை அவயவிக ளெல்லாரும் கன்ஸெர்வெடிவ்களாகவே ஏற்பட்டார்கள். அவர்களிலே பிரதானி உத்தியோகத்திற்கு அடுத்தபடி கௌரவமான உத்தியோகம் சான்ஸெலர் அவ்தி எக்ஸ்செகர் அல்லது ராஜ்ய பொக்கிஷ விசாரணைத் தலைவர். 1852-ல் இந்த உத்தியோகத்தை வகித்தவர் டிஸ்ரேலி என்பவர். டிஸ்ரேலி குலம், கல்வி, செல்வம் இவற்ருலே கௌரவம் படைத்தவரன்று; ஒரு வகைச் சொற்சாதுரிய முடையவர். பார்லிமெண்டு பிரதிநிதி சபையில் வாயாடிகளுக்குச் செல்வாக்குண்டு. டிஸ்ரேலி வாக் சாதுரியத்தாலேயே உயர்ந்த பதவியை யடைந்தவர். அங்கிலேய பாஷையைத் தவிர வேறு பாஷைகளையாவது அவற்றிலுள்ள அற்புத கிரந்தங்களையாவது கற்றவரன்று. எந்த விஷயத்தையும் கிலாட்ஸ்டனைப் போலக் கவலையுடன் ஆலோசிப்பவரில்லை. எதிர் வாதம் பேசுகிறவர்களைத் தக்க நியாயங்களைக் கொண்டு வெல்ல முயலாமலே சொற்சோர்வு உண்டாகும் ஸமயம் பார்த்துப் பரிகஸித்துப் பேசி வாயை அடக்குவது டிஸ்ரேலியின் வாடிக்கை. நாடகத்தில் விதூ

ஷகன் பேச்சு எத்துணை நகைப்பையும் மனோற்சாகத்தை யும் உண்டாக்குமோ அவ்வாறே டிஸ்ரேலி பேசுவார். சொல் நயம் நிரம்பவும் பொருள் நயம் குறைந்தும் பேசுந்திறமை டிஸ்ரேலி யுடையதா யிருந்தது. ஆயினும் பார்லிமெண்டு பிரதிநிதி சபையில் டிஸ்ரேலி வாக்கைக் கேட்டு மகிழ்ந்த வர் பலர். விஷய ஞானம் மட்டா யிருந்தவர்கள் டிஸ்ரேலி பேச்சைக் கேட்டுக் கைகொட்டிக் களிப்பார். மற்றவர் டிஸ் ரேலி வர்க்கில் மதிப்பு வைத்தாரில்லை.

இராஜ்ய பொக்கிஷ விசாரணைக் கருத்தர்தான் வருஷந் தோறும் வரவு செலவுக்கு ஜவாப்தாரியா யிருப்பவர். ஏற் பட்ட வரிகளை உயர்த்தவும், தாழ்த்தவும், தள்ளவும், நூதன வரிகளைப் போடவும் ஆலோசனைசொல்பவர் இந்த உத்தி யோகஸ்தர். பிரதானி உத்தியோகத்திலும் இஃது அதிக கஷ்டமானது. எந்த நாட்டிலும் மனிதர் இயற்கை ஒன்று தான். வரிகளை உயர்த்துவதாவது புதுவரிகளைப் போடுவ தாவது ஜனங்களுக்குப் பிரியமான காரியமன்று. அரசு நடத்தலுக்குப் பொருள் முதற்கருவி. அந்தப் பொருளை எந்த எந்த வருவாயாற் பெறவேண்டுமோ அவற்றை யோ சித்துச் சொல்லுவது இந்த மந்திரியினுடைய காரியம். இந்த உத்தியோகஸ்தர் கணக்கில் நிபுணராயிருத்தல் இன் றியமையாதது. பார்லிமெண்டு மெம்பர்களிலே சிலர் மட் டும் கணக்குகளின் மருமங்களை நன்குயறிந்தவரா யிருப்ப வர். பெரும்பான்மையரும் உத்தியோகஸ்தர் எடுத்துப் பேசுந் திறத்தினுற் கவரப்பட்டு அனுவதித்துப் பேசு வார். வரவு செலவு கணக்கிற்கு ஆங்கிலேய பாஷை யிலே பட்ஜெட் என்று பெயர். பிரதிநிதி சபையாருக்கே வரிகள் போடவும் தள்ளவும் அதிகாரம்; பிரபுக்கள் சபை

மெம்பர்கள் இந்த அதிகாரத்தை வகித்தல் கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. 1852-ம் வருஷத்திலே டிஸ்ரேலி தன்னுடைய பட்ஜெட்டைப் பிரதிநிதி சபையிற் சொன்னார். முடிவில் இவருடைய அபிப்பிராயத்தோடு ஒத்துவராத சில கனவான்களைத் தூஷித்துப்பேசினார். கிலாட்ஸ்டன் டிஸ்ரேலி பேசி முடிகிறவரையிற் சும்மா இருந்தார். டிஸ்ரேலி கணக்குகளிலுள்ள பொள்ளற்களைக் கண்டுபிடித்தல் கிலாட்ஸ்டனுக்குமாத்திரம் சாத்தியம். டிஸ்ரேலிபேசி முடிந்தவுடன் கிலாட்ஸ்டன் நாலுமணிநேரம்பேசினார். பட்ஜெட்டிலுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் எடுத்துக் காட்டி அந்த அந்த அம்சத்திலே குறைவுகளையுந் தெளிவாயெடுத்துப் பேசினார். செலவுக்கு மேல்வரவுண்டு என்பதை மறுத்துக் கணக்குகளே முற்றும் தவறானவை யென்று சந்தேகத்திற் கிடமில்லாமலே சொற்ப புத்தியுள்ளவரும் உணரும்படி கிலாட்ஸ்டன் விளக்கவே, மெம்பர்களில் மெஜாரிட்டியார் கிலாட்ஸ்டன் சொன்னவற்றை அங்கீகரித்து டிஸ்ரேலி சொன்னவற்றை நிராகரித்தார். பட்ஜெட் பிரதிநிதி சபையில் எந்தக் கக்ஷிக்காரர்களுக்கு சாதகமாகவில்லையோ அவர்கள் உடனே மந்திராலோசனைச் சபையினின்று விலகல் வேண்டும். டெர்பி பிரபுபிரதானி உத்தியோகத்தையும் டிஸ்ரேலி சான்ஸெலர் உத்தியோகத்தையும் ராஜிநாமா கொடுத்து விட்டார்கள்.

கிலாட்ஸ்டன் இந்த ஸமயத்திலே கன்ஸெர்வெடிவா, லிபெரலா என்ற சமுசயம் பிறத்தலாகும். இளம்பருவத்தில் மனமும் புத்தியும் அரும்புபோன் றிருக்கும். வயது முதிர அவையிரண்டும் விகாஸத்தை யடையும். சிலருக்கு இந்த விகாஸ முண்டாதலேயில்லை ; இன்னுஞ் சிலருக்குச்

செயற்கையாக மலர்ச்சி யுண்டாகும். இயற்கையாகமலர்ச்சி யடைவது புண்ணியாத்மாக்களா யிருக்கிற சிலர்களுக்கு மாத்திரந்தான். பரோபகார சிந்தையையுடைய கிலாட்ஸ் டனுடைய மனமும் புத்தியும் நாளடைவில் மலர்ந்து கொண்டேவந்தன. புராதன ஆசார பரிபாலகரென்று வழங்கும் கன்ஸெர்வெடிவ் கக்ஷியிலே தான் ஒருவனாக மதிக்கப்படுத லில் கிலாட்ஸ்டனுக்கு இஷ்டமில்லை. லிபெரலாகவும் சொல்லிக்கொள்ளக் கூடவில்லை. ஆயினும் கன்ஸெர்வேடிவ் கக்ஷியிற் சேர்ந்த டிஸ்ரேலியினுடைய பட்ஜெட்டைச் சின்னாபின்னம் பண்ணின நிமிஷமுதற்கொண்டு கிலாட்ஸ்டனை லிபெரல் என்று தான் சொல்லுதல் வேண்டும். பூர்வாசாரங்களில் நன்மை பயக்கும் விஷயங்களை மாற்றுவதற்குக் கிலாட்ஸ்டன் என்றும் சம்மதித்தாரில்லை. மதவிஷயத்தில் மாறுதல் என்பதை அவர் சிந்தித்ததுமில்லை.

டெர்பி பிரபு பிரதானி உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்தவுடன் அபர்டீன் பிரபு பிரதானியாகவந்தார். இவருக்குத்தான் நேபில்ஸில் நடந்த அக்கிரமங்களைப் பற்றிக் கிலாட்ஸ்டன் கடிதங்கள் எழுதி அந்த நாட்டிற்கு க்ஷேமத்தைச் செய்தார். அபர்டீன் கிலாட்ஸ்டனிடத்திலே, பீல் எத்துணை அபிமானம் வைத்திருந்தாரோ அத்துணை, அபிமானம் வைத்தவர். ஆலோசனை சபையிலே கிலாட்ஸ்டனுக்கு ராஜ்ய பொக்கிஷவிசாரணை கருத்தாவாகிய சான்ஸெலர்-அவ்-தி-எக்ஸ்செகர் உத்தியோகத்தைக் கொடுத்தார். அந்தக்காலம் இவரினும் அந்தப் பெரிய உத்தியோகத்தை வகிக்கவல்லவர் வேறு ஒருவரும் லிபெரல்களி லில்லை. வாணிபகுலத்திலே பிறந்தும் துரைத்தனத்தில் வாணிப விசாரணை மந்திரியாக இருந்தும் கீர்த்திபெற்றிருந்த கிலா

டட்ஸ்டனைவிட விஷயந் தெரிந்தவர்கள் வேறு எவரிருக்கக் கூடும்? டிஸ்ரேலி பட்ஜெட்டை யழித்தவர் அந்த டிஸ்ரேலி வகித்திருந்த உத்தியோகத்தையே பெற்றார்.

1853-ம் வருஷத்திலே கிலாடஸ்டன் தன்னால் நிருமாணஞ் செய்யப்பட்ட பட்ஜெட்டைப் பிரதிநிதி சபையாருக்குச் சொன்னார். வெற்று இலக்கங்கள் நிறைந்த பட்ஜெட்டுக்கு அவயவங்களை அமைத்து அழகையும் தந்து கேட்டவர் அனைவரும் "ஸபாஷ்! ஸபாஷ்!!" என்று சொல்லும்படி பட்ஜெட்டின் விஷயங்களை எடுத்து விளக்கவே, பிரதிநிதி சபையிலிருந்தவர் ஒவ்வொரு அம்சத்தையும் அங்கீகரித்தனர். கிலாட்ஸ்டனை ஸாமான்ய மெம்பராக நினைத்தலாகா தென்று அச்சங்கொண்டவர் பலர்; லிபெரல் கக்ஷியிலிருந்தவர்கள் தம்முடைய கக்ஷிக்கு ஒப்புயர்வற்ற ஸகாயஞ் செய்யக் கூடியவர் கிலாட்ஸ்டனே என்று கொண்டாடினார்கள். வேலை சிறியதாயினும் பெரியதாயினும் ஊக்கத்தோடு பிரவேசித்து வேலை பார்ப்பவர்களுக்குக் கைம்மாறு சீக்கிரத்திலேகிடைக்கு மென்பது கிலாட்ஸ்டனுடைய சரித்திரத்தால் விளங்கும்.

---

## கிருமியா யுத்தம்.

பொருள் வருவாயைத்தேடும் உத்தியோகஸ்தர்களுக்கு யுத்தம் என்றால் வெறுப்புத்தான். ஆலோசனை சபையில் மெஜாரிட்டியார் செய்யுந் தீர்மானத்துக்கு மற்றவரும் கட்டுப்பட்டே நடத்தல்வேண்டும். 1854-ம் வருஷத்தில் ருஷியரோடு யுத்தம் செய்யும்படி நேர்ந்தது. அங்கிலேயர், பிரான்சுக்காரர், துருக்கர்—இம்மூவரும் ருஷியரோடு போர்புரிய

லாயினர். ருஷியாதேசத்தின் தென்பாகத்திலே கிருமியா என்று ஒரு தீபகல்பமிருக்கிறது. அந்த இடத்திலேதான் சண்டைகள் நடந்தன. அங்கிலேய தேசத்திலிருந்து அனேகம் ஆயிரம் மைல்தூரத்திலுள்ள கிருமியாவுக்குச் சேனைகளையனுப்புவதும், அச்சேனைகளுக்கு வேண்டிய சாமான்களைச்சேகரித்துக் குறைவுவராமற் பார்த்துக்கொள்வதும் சுலபமானகாரியங்கள் அல்ல. அங்கிலேயர் ஜயமடைந்தது வாஸ்தவமாயினும் படைகள் குளிராலும் நோயாலும் பட்ட கஷ்டங்கள் கணக்கிலகப்படா. யுத்த விசாரணை செய்த மந்திரிமார் தமது காரியங்களைக் கவனமாய்ச் செய்யவில்லையென்று பார்லிமெண்டு மகாசபையில் மெம்பர்கள் குறைகூற ஆரம்பித்தார்கள். பிரதானியாகிய அபர்டின் பிரபு தன் வேலை வேண்டாமென்றார். கிலாட்ஸ்டனும்அவரோடு தன் வேலையை ராஜிநாமா கொடுத்தார். பாமெர்ஸ்டன் பிரதானியாகவந்து கிலாட்ஸ்டனை முன்னிருந்த உத்தியோகத்தை வகிக்கும்படி கோரினார்; கிலாட்ஸ்டனும் சம்மதித்து வேலையிற்புகுந்தார். கிருமியாயுத்தத்தில் ஸம்பந்தப்பட்டவர்களைப் பற்றி விரோதமாக ஒன்றுஞ் செய்கிறதில்லை யென்று முதலில் வாக்குக் கொடுத்திருந்த பாமெர்ஸ்டன்பின்பு வாக்கு விரோதமாக நடந்தபடியால் கிலாட்ஸடன் சொற்பகாலம் அந்த வேலையைப் பார்த்துப் பிறகு ராஜிநாமா கொடுத்துவிட்டார். உத்தியோகபாரமில்லாமலேசுவேச்சையாய் நடக்கும் படியான நிலைமையிலே கிலாட்ஸ்டன் இருக்கும்படி நேரிட்டது.

## விவாக விமோசன சட்டம்.

பாமெர்ஸ்டன் பிரதானி உத்தியோகத்தைவகித்திருந்த காலத்தில் [1855—1858] விவாதத்துக்கு இடமான சட்டம் ஒன்று பார்லிமெண்டு மகாசபையில் நிரூபணத்துக்குக் கொண்டு வரப்பட்டது. தம்பதிகளுக்குள் மாறுபாடுகள் உண்டாகி இல்வாழ்க்கை துன்பமுடையதா யிருக்குமாகுல் விவாகத்தை ரத்துசெய்துகொண்டு பின்பு புருஷன் தனக்கிஷ்டப்பட்டஸ்திரீயையும், ஸ்திரீ தனக்கிஷ்டப்பட்ட புருஷனையும் புனர் விவாகஞ்செய்து கொள்ளலாகும்—எனச் சட்டம் பிறப்பித்தலுக்கு பார்லிமெண்டிலே பிரயத்தனம் நடந்தது. தோஷமுள்ள ஸ்திரீயைக் கணவன் விலக்கலும், தோஷமுள்ள புருஷனை ஸ்திரீவிலக்கலும் தற்காலம் சுலபமாயிருத்தல்போல அக்காலத்திலில்லை. புருஷனையாவது ஸ்திரீயையாவது விலக்கவேண்டுமானுல் அதற்கு அநேக சடங்குகள் முதலில் நடத்தல் வேண்டும். அவையாவன :—ஸ்திரீயினிடத்திலே தோஷத்தைக் கண்ட புருஷன் முதலில் நியாயஸ்தலத்தில் பிரியாதுசெய்து சோரபுருஷனுக்கு அபராதம் போடுதல்வேண்டும். பின்பு வைதிக நியாயஸ்தலத்திலே பிரியாது கொடுத்து விவாக விமோசனஞ் செய்துகொள்ளவேண்டும். கடைசியிலே பார்லிமெண்டு சபையிலே தம்பதிகளுடைய விவாக விமோசனஞ் செய்யப்பட்டதென்று பிரத்தியேகமான சட்டம் ஒன்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வகையான மூன்று சடங்குகளையும் நிறைவேற்ற ரூ. 10,000 பிடிக்கும். பணக்காரர்களைத் தவிர மற்றவர்கள் இந்தவியாபாரத்தில் பிரவேசிக்க முடியாது. ஏழைகளுடைய மனைவி

கள் எத்துணைத்துஷ்டைகளாயினும் அவர்களைத்தொலைத்து வேறுவிவாகம் செய்துகொண்டு புருஷன் சுகமாயிருத்தல் முடியாத காரியமாயிருந்தது. ஸ்திரீகளுக்கும் இதேவித மான கஷ்டங்களிருந்தன. இவற்றை நிவர்த்தி செய்வதற் கென்று புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. "விவாக மென்பது வைதிக ஸம்ஸ்காரம். ஒருவனுக்கு ஈசுரசாட்சி யாக ஒருமுறை வாழ்க்கைப்பட்டபெண் அந்தவிவாகத்தைப் புருஷனுடைய தோஷத்தினாலாவது வேறெந்த முகாந்தரத் தை முன்னிட்டாவது நிராகரித்தல் கூடாது. தோஷத்தை யடைந்த புருஷனாவது ஸ்திரியாவது புனர்விவாகஞ்செய்து கொள்ளவேதம் இடங்கொடுக்கவில்லை." கிலாட்ஸ்டன்வைதி கசிரத்தையுடையவர். நூதனமாய்க்கொணரப்பட்ட சட்டத் தினால் இல்வாழ்க்கை யென்பது முற்றிலுங் கேடாய் விடும் என்ற பயத்தினால் இந்தச்சட்டம் பார்லிமெண்டாரால் அங்கீகரிக்கப் படாதென்று எதிர் வாதம் வெகு பலமாகச் செய்தார். கிலாட்ஸ்டனைப்போல பார்லிமெண்டில் ஒருவ ராவது வேதத்தையாவது வேதபாஷ்யங்களையாவது கற்ற வரில்லை யென்று முன்னமேயே கூறினோம். லௌகிகர்க ளும், லோகாயதர்களும் மிகுதியாகவிருந்த பார்லிமெண்டில் வைதிக சிரத்தை உண்டாவது ஏது? கிலாட்ஸ்டனு டைய வாதங்கள் சாம்பலில் ஆகுதிசெய்யப்பட்ட நெய்யைப் போல வீணாயின. பிரதிநிதி சபையாரும் பிரபுக்கள் சபை யாரும் விவாகவிமோசன சட்டத்திற்கு அனுமதிகொடுத்து இக்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. வைதிக விஷயத்திலே பூர்வாசாரங்களை எள்ளளவேனும் மாற்றுவ தில் கிளாட்ஸ்டன் விருப்பமில்லாதவரென்று இந்தவிஷ யத்தால் விளங்கும்.

# பிரஜைகள் ஞானவிருத்தியடைதலுக்குக் கிலாட்ஸ்டன் செய்தகாரியம்.

1855-முதல் 1859-வரையிலே கிலாட்ஸ்டன் துரைத் தனமந்திராலோசனைச் சபையில் உத்தியோகம் ஒன்று மில்லாமலே இருந்தார். 1859-ம் வருஷத்தில் இவர் ராஜ்ய பொக்கிஷ விசாரணைக் கருத்தரானார். அங்கிலேய நாட்டில் அக்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட சட்டப்படி வர்த்தமான பத்திரிகைகள் ஸகாயமாகக் கிடைத்தல் அரிது. காகிதம் செய்யப்படும் சரக்குகளுக்கு வரிகள் மிகுதி. பத்திரிகை ஒவ்வொன்றிற்கும் ஒரு அணுசெலுத்தின பிறகு சந்தாதாரருக்குப் பத்திரிகைகள் அனுப்பப்படும். விளம்பரம் ஒவ்வொன்றிற்கும் நாலணு ஸர்க்காருக்குச் செலுத்தல்வேண்டும். பெரிய முதலாளிகளைத் தவிர்த்து மற்றவர்கடிதம் செய்தலாவது வர்த்தமான பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்தலாவது சாத்தியமானகாரியமாகவில்லை. தனவான்கள் எத்துணைக்கிராக்கியாயிருந்தாலும் பொருட்செலவைப் பாராமலே பத்திரிகைகளை வாங்கிப்படித்து ஞானவிருத்தியடைந்து வந்தார்கள். ஏழைகளுக்குத்தக்க சகாயமான பத்திரிகைகள் ஒன்றுங்கிடையாது. சரீரத்திற்கு ஆகாரம் நித்திரை அவசியமானவைபோலப் புத்திக்கு நவநவமான விஷயங்களை ஆகாரமாய்க் கொடுத்து வருதல் வேண்டும்; அன்றேல் புத்தி மழுங்கிப் பிரஜைகள் மிருகப்பிராயமா யிருப்பார்கள். சேதனர்கள் மிருகங்கள்போல் அஞ்ஞானத்தாலே கவரப்பட்டிருக்கிற அரசாட்சி முன்னுக்குவருமா ? குடியுயரக் கோனுயரும். அறம், பொருள், இன்பம், வீடெனும் புருஷார்த்தங்கள் ஒருவனுக்குக் கல்வியாலே கிடைக்கின்றன

வென்றால் அக்கல்வியைத் தனவான்கள் மட்டிலடைந்து ஏனையோர் அடையாமலே துன்பமுறுவதைப் பரோபகார சிந்தையுள்ள அதிகாரிகள் சகிப்பார்களா? 1860-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டன் கொண்டு வந்த பட்ஜெட்டில் வர்த்தமான பத்திரிகைகளுக்கு ஏற்பட்டிருந்த வரிகள் எல்லாம் தள்ளப்பட்டன. இதை மெச்சிக் கொண்டவர் அனேகர்; வரியைத் தள்ளினமையால் ராஜ்யம் குட்டிச்சுவராய்ப் போயிற்றென்று குறை கூறினவரும் உண்டு. இவர் வாதங்களாவன:—

"பத்திரிகைகள் சகாயமாய் விட்டாற் கண்டபேர்களெல்லாம் அவற்றைப் பிரசுரஞ் செய்வார்கள். முதலில் நிரீச்சுரவாதம் பலப்படும்; உயர்ந்தோர் தாழ்ந்தோரென்னும் மரியாதை மாய்ந்து விடும்; இறைமாட்சிக்குக் கேடு ஸம்பவிக்கும்; நன்மைபயக்கும் பூர்வாசாரங்கள் பாழாகப் போம்; குலப்பெருமை குன்றும். யஜமான், ஸேவகன் என்னும் பேதங்கள் நிலைக்கமாட்டா. துரைத்தனத்தாருக்கு ஐவேஜி குறைந்து, கடன் வாங்கும்படி கஷ்டம் நேரிடும்" இவையும் இவை போன்றனவும் பார்லிமெண்டிலே சொல்லப்பட்டுக் கிலாட்ஸ்டன் உத்தேசித்த காரியம் நிறைவேறாமற்போக இருந்தது. தனவான்களுக்கு நன்மை பயக்கும் கல்வி ஏழைகளுக்குத் தீமைசெய்யாதென்பது கிலாட்ஸ்டனுடைய உறுதி. கிராக்கியான பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்து பெரிய லாபத்தை யடைந்து வந்த பத்திராதிபர்களும் முறை இடத் தொடங்கினார்கள். பிரபுக்கள் சபையிலுள்ளவர்களும் கிலாட்ஸ்டனுடைய ஏற்பாடுகளை அனுவதிக்கவில்லை. பிரஜைகளுக்கு இதமானதென்று புத்தியிலே பட்ட எந்தக் காரியத்தையும் கைவிடுதல் கிலாட்ஸ்டன்

சுபாவமில்லை. பிடித்த காரியத்தை நிறைவேற்றி ஜனங்களுடைய மங்கல வாழ்த்துக்களைப் பெற்றுக் கிலாட்ஸ்டன் மனமகிழ்ந்தார். வர்த்தமான பத்திரிகைகளுக்கு ஏற்பட்டிருந்த வரிகளைத் தள்ளவேண்டுமென்று முதல் முதலில் தோன்றினது கிலாட்ஸ்டனுக்கு மாத்திரமே யன்றி வேறொருவருக்குமல்ல. நமது நாட்டிலே சுதேசமித்திரன் என்னும் பத்திரிகை சொற்பவிலைக்கு விற்கப்படுவதாலன்றோ அநேகரும் அதை வாங்கிப் படித்து விவேக விருத்தியடைந்து வருகின்றார்கள்.

---

## ஜெனரல் இலெக்ஷன்.

1865-ம் வருஷத்தில் ஜெனரல் இலெக்ஷன் சம்பவித்தது. 1847-ம் வருஷமுதல் 18 வருஷங்களாக ஆக்ஸ்போர்ட் ஸர்வகலாசாலைப் பிரதி நிதியாகக் கிலாட்ஸ்டன் தெரிந்தெடுக்கப்பட்டுக் கொண்டுவந்தார். இவர் பிரஜாதிபத்திய அபிமானியென்று ஆக்ஸ்போர்டி லுள்ளவர்கள் எண்ணி இவரைத் தெரிந்தெடுக்க 1865-ல் சம்மதிக்கவில்லை. இவர் ஜன்மபூமியாகிய லங்காஷைரி லுள்ளவர்கள் 1865-ம் வருஷத்திலே தெரிந்தெடுத்தார்கள். தான்கல்வி பயின்ற ஸ்தானமாகிய ஆகஸ்போர்டுக்குப் பிரதிநிதியாக இல்லாமற் போனது கிலாட்ஸ்டனுக்கு மிகுந்த மனவருத்தத்தை யுண்டாக்கிற்று.

## பிரஜாதி பத்தியம்.

பிரஜாதிபத்தியம் என்றால் குடியரசு என்று சிலர் கூறுவர். அங்கிலேய நாட்டில் அரசருண்டு. அந்நாட்டு அரசர் தமது பிரஜைகளினுடைய அபிப்பிராயத்தை ஒத்து அரசு நடத்துபவர். பிரஜைகளாலே தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் சேர்ந்த பார்லிமெண்டு சபைக்கு ஹவுஸ் அவ் காமன்ஸ் என்று பெயர்; பிரபுக்கள் சபைக்கு ஹவுஸ் அவ் லார்ட்ஸ் என்றுபெயர். பிரபுக்கள் சபை மெம்பர்கள் பிரஜைகளாலே தெரிந்தெடுக்கப் பட்டவர்களல்ல. பிரபுக்கள் தமது குடும்பங்களுக்குப் பிரதிநிதிகளே யல்லாமற் பிரஜைகளுக்குப் பிரதிநிதிக ளாகமாட்டார். மேற்கூறிய இரண்டு சபைகளுஞ் சேர்ந்துதான் பார்லிமெண்டு மகாசபை யாகின்றது. இரண்டு சபையாராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயத்தை அரசரும் அங்கீகரிப்பர். வரிகளாயினும் சட்டங்களாயினும் இரண்டு சபைகளிலும் தருக்கிக்கப்பட்டு மெஜாரிடியாரால் அனுவதிக்கப் பட்டாலொழிய அரசரிடம் சொல்லப்படுவதில்லை. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு அங்கிலேய அரசாட்சிக்கு ஏகதேச ஏகாதி பத்யமென்று பெயர் வழங்குகின்றது.

பார்லிமெண்டு மெம்பர்களுக்கும், அவர்களைத் தெரிந்தெடுக்கிற வர்களுக்கும் சட்டப்படி சில யோக்யதைகளிருத்தல் வேண்டும். நமது நாட்டில் முனிஸிபாலிடிகளில் வோட்டராயிருப் பவருக்கும், கவுன்ஸிலர் உத்தியோகத்தை அபேக்ஷிக்கிற வர்களுக்கும் இருக்கவேண்டிய யோக்யதைகள் சட்டத்திலேயே குறிப்பிடப்பட் டிருக்கின்றன. அவ்வாறே பார்லிமெண்டு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கிறவர்கள்

பூஸ்திதி, வீடுகள், உடையவர்களாயும், வரிகள் செலுத்து பவர்களாயுமிருத்தல் வேண்டும். பிரதிநிதி சபைபெயருக்கு மாத்திரம் ஏற்பட்டிருத்தல் கூடாதென்றும், வாஸ்தவமாகவே பிரஜைகளுக்குப் பிரதிநிதிகள் அந்த சபையில் வரவேண்டுமென்றும் கிலாட்ஸ்டன் ஆவல்கொண்டு வோட்டர்களின் ஸங்கியையை அதிகப் படுத்தினார். ஜனப்பிரதிநிதிகளாலேயே ராஜ்ய காரியங்கள் எல்லாம் நடந்துவருதல்பற்றி ஆங்கிலேய அரசாக்ஷியை ஏகதேசம் பிரஜாதி பத்தியமென்று சொல்வதும் தவறுதலாகாது.

1866-ம் வருஷத்திலே சொற்பகாலம் பொக்கிஷ விசாரணைக் கருத்தராகவிருந்து கிலாட்ஸ்டன் வேலையை விட்டுவிட்டார். 1868-ம் வருஷம் வரையில் மந்திராலோசனைச் சபையில் வேலை யொன்று மில்லாதவ ராயினும் பிரதிநிதி சபையில் மெம்பராக இருந்துவந்தார். 1868-ம் வருஷத்தில் இலெக்ஷன் வந்தது. இதில் கிலாட்ஸ்டன் க்ரீனிச் என்னும் பட்டணத்திற்குப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப் பட்டார். 1880-ம் வருஷம் வரையில் இந்த ஸ்தலத்துக்கே பிரதிநிதியாக இருந்தார்.

1868-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டனுக்கு வயது 59. நமது நாட்டார் 59 - வது வயதில் உடல்வலி, மனோதிடம் இழந்து கழியூன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமல் வாழ்நாட்களைக் கழிப்பவரா யிருப்பார்கள். இதற்குவிலக்கா யிருப்பவரின் சங்கியை மிகவுஞ் சிறிதாயிருக்கும். அங்கிலேயருக்குள் அப்படியல்ல.

---

# கிலாட்ஸ்டன் பிரதானிஸ்தானத்தைப் பெற்றது.

1868-ம் வருஷத்தை அங்கிலேய சரித்திரத்தில் உயர்ந்ததசாநாதனுடைய காலமென்னல் வேண்டும். கிலாட்ஸ்டனைப்போன்ற உத்தம புருஷன் பிரதானி உத்தியோகத்தை வகிக்க ஆரம்பித்தவருஷத்திலும் உயர்ந்தகாலம் வேறெது? 1868-ம் வருஷமுதற்கொண்டு 1874-ம் வருஷம் வரையிலே தொடர்ச்சியாய் கிலாட்ஸ்டன் பிரதானியாயிருந்து அந்த நாட்டிற்குச்செய்த நன்மைகளை இனி எடுத்துக்கூறுவோம்.

பரதுக்கம் சகியாத புண்ணியவானென்று கிலாட்ஸ்டனைப் பற்றிப் பலமுறை சொன்னோம். அயர்லாண்டு தேசத்தை "அங்கிலேயதேசத்தின் விலாவில் தைத்தமுள்" என்றுகூறுவதுண்டு. இந்த ஸங்கடமான நிலைமையில் அயர்லாண்டு இருந்ததற்குச் சிலகாரணங்கள் முன்னமேயே கூறப்பட்டுள்ளன. அயர்லாண்டின் ஜனத்தொகையில் ஐந்தில் நாலுபாகம் காதலிக் கிறிஸ்தவர்கள்; மிகுதிப்பேர்கள் பிராடெஸ்டண்டு கிறிஸ்தவர்கள். இவ்விருதிறத்தினரும் வைஷ்ணவர்களில் வடகலை தென்கலைகளைப்போல ஒருவருக்கொருவர் பெரிய துவேஷத்தைப் பாராட்டினவர். துரைத்தனத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டுத் திரவிய ஸகாயம் பெற்ற மதம் பிராடெஸ்டண்டு மதம். காதலிக்குகளுக்கு மதவிஷமாய் துரைத்தனத்தார் ஒரு பைஸா கூட உதவி செய்வதில்லை. பிராடெஸ்டண்டு கோவில்களுக்கும், பிராடெஸ்டண்டு பாதிரிமார்களுக்கும்—அயர்லாண்டில் காதலிக்குகள் வரி கொடுத்து வந்தார்கள். வரிகொடுக்காவிட்டால் தண்

டேயுண்டு. சைவர்கள் துருக்கருடைய மசூதி கட்டவும் மௌல் விகளுக்குச்சம்பளம் கொடுக்கவும் திரவியஸகாயஞ் செய்ய எவ்வாறுபிரியப்படமாட்டார்களோ அவ்வாறே காத லிக்குகள் பிராடெஸ்டண்டு கோவில்களுக்கும் பாதிரிமார் களுக்கும் தங்கள் பொருளைக் கொடுக்கச்சம்மதிக்க மாட்டார் கள். இதனாலேயே அங்கிலேய துரைத்தனத்தாருக்கும் அயர் லாண்டு தேசத்துக் காதலிக்குப் பிரஜைகளுக்கும் தீராப் பகையுண்டாகித் துரைத்தனம் நடத்துவது மிக்க கஷ்ட மாயிருந்தது. பிரஜாதிபத்தியத்தை ஸ்தாபிக்க என்று கங்கணம்பூண்ட கிலாட்ஸ்டன் பிரஜைகள் குறையைத் தீர்க்க முயல்வாரேயன்றி வேறுவிஷயத்தைக் கவனிக்க மாட்டார். பார்லிமெண்டு பிரதிநிதிசபையில் இவரை அனு வதித்து உபகரிக்கக்கூடிய மெம்பர்களும் அனேகர் இருந் தார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல் மந்திரிக் கழகானமையால் அயர்லாண்டு தேசத்துக் காதலிக்கு களுக்கு உபகாரம் செய்யப் பிரவேசித்தார். அயர்லாண்டி லுள்ள பிராடெஸ்டண்டு கோவில்கள்களுக்கும் பாதிரிமார் களுக்கும் துரைத்தனத்தார் ஸகாயஞ்செய்வதை நிறுத்த வேண்டுமென்றும் காதலிக்குகளிடமிருந்து பிராடெஸ்ட ண்டு மதவிஷயமாய் ஒருவிதமான வரியும் வசூல்செய்யக் கூடாதென்றும் சட்ட நிருபணஞ் செய்தார். இந்தச்சட்டம் இரண்டு சபைகளிலும் அங்கீகாரம் பெற்று மகாராணி அவர்களுடைய ஸம்மதத்தையும் பெறுவதற்குள் உண் டான இடையூறுகள் எண்ணிறந்தவை. "முடிவும் இடை யூறும் முற்றியாங்கு எய்தும், படுபயனும் பார்த்துச்செயல்." அரசு நடத்துபவர் வினை செய்யுங்கால், அவ்வினை முடிதற் குள்ள முயற்சியும், அதற்குவரு மிடையூறும், இடையூறு நீங்கி வினைமுடிந்தால் தானடையும் பெரும்பயனும் சீர்

தூக்கிச் செய்தல் வேண்டு மென்றார். அயர்லாண்டிலே காதலிக்குகளுடைய ஜனத்தொகை நாற்பது லக்ஷம்; பிராடெஸ்டண்டுகள் பத்து லக்ஷம். நாற்பது லக்ஷம் ஜனங்கள் மனமகிழ்ச்சி யடைதல் பெரிதேயன்றிப் பத்துலக்ஷம் ஜனங்களுடைய சௌகரியம் பெரிதல்ல. கிலாட்ஸ்டன் ஒருவரே இந்தப் பெரிய காரியத்தைச் சாதிக்கும் திறமையுடையவராயிருந்தார். இவருக்கு முன் பிரதானிகளா யிருந்த பலரும் அயர்லாண்டின் குறைகளைத் தீர்க்க எள்ளளவேனும் முயன்றாரில்லை.

அயர்லாண்டுக்கு மதஸம்பந்தமான குறையை விடவேறொன்று பெரிதாயிருந்தது. அங்கிலேய அரசர் பல காரணங்களை முன்னிட்டுக் காதலிக்குகளுடைய பூஸ்திதிகளைப் பறி முதல் செய்து பிராடெஸ் டண்டுகளுக்கு அவற்றைக் கொடுத்திருந்தார். காதலிக்குகள் பிராடெஸ்டண்டு மிராசுதார்களிட மிருந்து நிலங்களைக் குத்தகைக்கு வாங்கிப் பயிரிட்டுச் சீவனஞ் செய்து வந்தார்கள். மிராசுதார்கள் ஈரமில்லா நெஞ்சத்தரா யிருந்தாரென்று சரித்திரங்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது. குடியானவன் நிலங்களைப் பண்படுத்திக் குத்தகைக்கு மேலே தனக்கு லாபங்கிடைக்கும்படிப் பிரயத்தனஞ் செய்ததைக் கண்டவுடன் மிராசுதார் குத்தகையை உயர்த்திவிடுவார். அந்த உயர்ந்த குத்தகையைக் கொடுக்கக் குடியானவன் ஸம்மதிக்கா விட்டால் அவனிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி வேறிடத்தில் விட்டுவிடுவார். மிராசுதாருக்கும் குத்தகைக் காரனுக்கும் தீராச் சச்சரவு அயர்லாண்டில் நடந்துகொண்டே யிருந்தது. இதற்கும் தக்கபரிகாரந்தேடக் கிலாட்ஸ்டன் முயன்றார். பிராடெஸ்டண்டு கோவில்—பிராடெஸ்டண்டு பாதிரிமார் விஷயத்திலும் இது அதிககடினமானது. பாரமார்த்திக புத்தியுடன் பிரவேசித்த

எந்தக்காரியம் முயற்சி யுடையோருக்குக் கைகூடாது? கிலாட்ஸ்டனுடைய விடா முயற்சியாலும் சொற்சாதுரியத்தாலும் அயர்லாண்டு குடியான வர்களுக்குச் சிறிது நன்மைகள் உண்டாயின. குடியானவனை நிலத்தை விடும்படி கட்டாயப்படுத்துகிற மிராசுதார் குத்தகை பாக்கிக்கு மாத்திரம் அவ்வாறு செய்தலாகும். குடியானவன் நிலத்தைச் சீர்திருத்துவதற்கு விரயஞ் செய்திருக்கிற பணங்களை அவனுக்குக் கொடுத்துத் தீர்த்த பிறகுதான் நிலத்தை விடச்சொல்லவேண்டும். குடியானவன் ஐவேஜியுடையவனு யிருந்து மிராசுதாருடைய நிலத்தைக் கிரயத்திற்குத் தானே வாங்கவிரும்பினுல் மிராசுதார் அந்த நிலத்தைக் குடியானவனுக்குக் கிரயம்செய்ய வேண்டுமே யன்றி வேறு ஒருவருக்குங் கிரயஞ் செய்தலாகா தென்றுஞ் சட்டம் ஏற்பட்டது. அயர்லாண்டிலுள்ள பிரஜைகள் இந்தச்சட்டத்தினுல் ஒருவாறு திருப்தியடைந்தார்கள்.

## கல்வி அபிவிருத்தி.

கிலாட்ஸ்டன் பிரதானியாக இருந்தகாலத்தில் கல்வி விசாரணைக் கருத்தராக நியமிக்கப்பட் டிருந்த மந்திரிக்குப் பெயர் பார்ஸ்டர். இவர் சாதித்த காரியம் கிலாட்ஸ்டனுல் அயர்லாண்டிலே செய்யப் பட்டவையினும் மேலானது.

கல்வியால் அறிவும், அறிவினுல் ஒழுக்கமும், ஒழுக்கத்தால் உயர்வும் மனிதர்க்கு உண்டாகின்ற தென்பது யாரும் அறிந்தவிஷயம். கல்வியில்லாத கயவராய்ப் பிரஜை

களிருந்தால் அந்த அரசுக்குச் சுகலேசமு மிராது. 1870-ம் வருஷத்திலே பாடசாலையிற் படிக்கவேண்டிய சிறுவர் சிறுமியருடைய தொகை இங்கிலாண்டில் 40 லக்ஷம். இதில் 10 லக்ஷம் பிள்ளைகளுக்கு மட்டில் ஒழுங்காய்க்கல்வி பயிலப் பாடசாலைகள் அமைந்திருந்தன: மற்றொரு 10 லக்ஷம் பிள்ளைகள் ஏகதேசம் பாடசாலைகளுடைய சாதகம் பெற்றிருந்தனர்: 20 லக்ஷம் பிள்ளைகளுக்குப் படிப்புக்கே ஒருவித சௌகரியமு மில்லாம லிருந்தது. படிப்பில்லாதவர் நாகரிகத்தில் உயர்வது அசாத்தியம். பாலியத்திற் படிப்பு வராவிட்டால் பிற்காலத்தில் அதனைப் பெறுவது சிரமம். அங்கிலேய நாட்டின் அக்காலத்திய நிலைமையைக் கண்டு, பாலர்களுக்குத் தக்கபடி கல்வி பயிற்றுவிக்க வித்தியாசாலைகளை ஏற்படுத்தவும், பெற்றோர்களைத் தம்பிள்ளைகளைக் கட்டாயமாய்ப் பாடசாலைகளுக்கு அனுப்பும்படி செய்யவும், ஸ்கூல் போர்டுகளை ஸ்தாபிக்கவும், துரைத்தனத்தார் பாடசாலைகளுக்கு திரவியஸகாயஞ் செய்யவும் உத்தேசித்துப் பார்லிமெண்டு சபையின் ஆலோசனைக்கு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஜர்மனியைச் சார்ந்த பிரஷியாவில் ஒவ்வொரு கிராமத்திலும் துரைத்தனத் தாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையுண்டு. அந்த அந்த ஊரார் அந்த ஊர்ப் பாடசாலைக்குத்தம் மக்களையனுப்ப வேண்டியது கட்டாயம். பாடசாலைக்கு மக்களையனுப்ப இஷ்டப்படாதவர்கள் வீட்டிலேயே தமது பிள்ளைகளுக்குத் தக்க கல்வி பயிற்றுவிக்கப்படுகிறதென்று துரைத்தனத்தாருக்கு மெய்ப்பிக்க வேண்டும். துரைத்தனப் பாடசாலைக்கு மக்களை யனுப்பாமலும் வீட்டிலே கல்விபயிற்றுவிக்காமலும் தவறுதல் செய்கிற பெற்றோர்களுக்கு ஜர்மனியில் அபராதம் விதிக்கப்படும். பிரஷியாவில் உள்ள ஸ்திரீபுருஷர்கள் அனைவரும் எழுதப்

படிக்கத் தெரிந்தவர்கள். "இந்தக்கீறல் பிச்சுவையர் கை நாட்டு" என்று எழுதவேண்டுவது பிரஷியாவிற் கிடையாது. எழுத்தறியாப்பேதை ஜர்மனியில் இல்லை. அதே மாதிரியாக அங்கிலேய நாட்டிலும் செய்ய இச்சித்துப் பார்ஸ்டர் என்னும் மந்திரி மேற்கூறிய சட்டம்கொணர்ந்தார். வெகு தருக்கங்கள் நடந்த இந்தச் சட்டம் அனுஷ்டானத்துக்கு வந்தது. தற்காலம் பாலவகுப்புப் படிப்பு இனாமாக அங்கிலேய நாட்டிலே கிடைக்கின்றது. இந்தியா தேசத்திலும் நிரக்ஷர குக்ஷிகள் இருத்தலாகாதென்று தான் கனம் கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் இந்தியா சட்ட நிரூபணசபையிலே துரைத்தனத்தார் தம் பிரஜைகளுக்கு இனாமாகப் பாலவகுப்புப் படிப்பைத்தரவும், பெற்றோர்களைக் கட்டாயப் படுத்தி மக்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பவும் சட்ட நிரூபணம் செய்தார். அஃது அங்கீகரிக்கப்படாமல் நின்று போய்விட்டது. பிரஜைகளுடைய கல்வி அபிவிருத்தியை உத்தேசித்துத் துரைத்தனத்தார் முன்னிலும் அதிகமாகத் திரவிய ஸகாயஞ்செய்து வருகின்றார்கள். சிறிது காலத்திலே சிறுவர் சிறுமியர் பணச்செலவில்லாமலே கல்விபயிலக் கூடிய பாடசாலைகள் துரைத்தனத்தாரால் இந்தியாவிலும் ஸ்தாபிக்கப் படலாம். அக்காலம் எப்போது வருமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

## இராணுவ உத்தியோகங்கள்.

உத்தியோகங்கள் துரைத்தனத்தாராலே கிரயத்துக்கு விற்கப்படுகிறதென்பது நாகரிகமான நாடுகளில் எங்குமில்லை. 1871-ம் வருஷம்வரையில் இங்கிலாண்டில் இராணுவ உத்தியோகங்கள் விலைக்கு விற்கப்பட்டு வந்தன.

தாழ்ந்தவகுப்பு உத்தியோகத்தை விரும்பினவர் ரூ 4,500 துரைத்தனத்தாருக்குக் கொடுத்தல் வேண்டும்: உயர்ந்த வகுப்பு உத்தியோகத்திற்கு ரூ 72500 கொடுத்தல்வேண்டும். இவ்வாமுன ஸம்பிரதாயம் அனுஷ்டானத்திலிருந்தமையால் சேனுதிபதி உத்தியோகத்தை யடைபவர் முதலாளிகளாயிருந்தால்தான் அந்த ஸ்தானத்தைப்பெறலாகும். ஏனையோர் படைக்கலப்பழக்கம் எத்துணை மேன்மையாக அடைந்திருந்தாராயினும் அந்த ஹோதா அவர்களுக்குக் கிடைக்காது. உத்தியோகத்தைக் கிரயத்துக்கு வாங்கினவர் நேர்மையாக வேலையை நடத்துவாரென்று எண்ணவும் இடமில்லை. கிலாட்ஸ்டன் பிரதானியாயிருக்கையிலே இந்தக்கெட்ட ஸம்பிராயத்தை ஒழிக்கவேண்டுமென்று 1871-ம் வருஷத்தில் சட்ட நிரூபணம் செய்யத் தொடங்கினுர். பணக்காரர் தம் மக்களுக்குச் சுளுவாக உத்தியோகங்கள் செய்துகொடுக்க இருந்த வாடிக்கையை முற்றிலும்மாற்றக் கிலாட்ஸ்டன் பிரயத்தனஞ் செய்தமையாலே புதிய சட்டத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்தல் சொற்ப கஷ்டமாயிருக்கும்போலே தோன்றவே, சுருக்கமானவழியில் அந்த அனுஷ்டானத்தை ஒழித்தார். மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி அவர்கள் அக்காலம் ராஜ்யபாரஞ் செய்துவந்தார்கள். கிலாட்ஸ்டன் அரிசியிடத்திற் சென்று இராணுவத்தில் நடக்கும் அக்கிரமங்களைத் தெரிவித்துப் பார்லிமெண்டு சபையாருடைய உதவியை நாடாமலே மேற்குறித்தபடி உத்தியோகம் விலைக்கு வாங்கப்படுவதை நிறுத்திஞர். அவரவர் திறமையே பெரிய உத்தியோகங்களுக்குச் சிபார்சாக அமைந்தது: பணத்தின் மிகுதியாலே பெரிய அந்தஸ்தை அடைவது நின்றது. இந்தக் காரியமும் நாட்டிற்கு க்ஷேமகரமானதல்லவா ?

1868முதல் 1874 வரையிலே தான் பிரதானி உத்தி யோகத்தை வகித்திருந்த காலத்திலே கிலாட்ஸ்டன் செய்த காரியங்களில் முக்கியமான சிலவற்றைத்தான் இங்கு எடுத்துச்சொன்னோம். சிறிய விஷயங்களில் எத்துணை யோ சீருக்குக்கொண்டுவரப்பட்டன. அவற்றையெல்லாம் சொல்லப்புகின் விரிவாகும். கிலாட்ஸ்டன் பிரதானியாயி ருந்த ஆறுவருஷத்திலும் அங்கிலேயர் தூங்கவில்லை யென்று சொல்லலாகும். சட்டங்கள் நவநவமாக நிரூபணஞ் செய்யப்பட்டுவந்தன. பலதிறத்தாருக்கு முள்ளகுறைகள் தெரிந்து பரிகாரங்கள் தேடப்பட்டன. "நாளைப்பொழுது விடிந்தால் கிலாட்ஸ்டன் எந்தப் புதிய ஸம்பிரதாயத்தை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவாரோ" என்று ஜனங் கள் எண்ணத்தொடங்கினார்கள். வெகுதூரம் மேட்டிலும் பள்ளத்திலும் வேகமாயோடிவந்த குதிரைக்குச் சிரமபரி காரம் அவசியமன்றோ? அவ்வாறே அங்கிலேய நாட்டி லுள்ளவர்கள் சிரமபரிகாரம் பண்ணிக்கொள்வதிலே பிரி யப்பட்டார்கள். 1874-ம் வருஷத்தில் இலெக்ஷன் ஒன்று நடந்தது. லிபெரல் கக்ஷியில் சேர்ந்த மெம்பர்கள் குறைவா கவும் கன்ஸெர்வெடிவ்கக்ஷியிற் சேர்ந்தவர்கள் ஜாஸ்தியாக வும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். கிலாட்ஸ்டன் அந்த க்ஷணமே பிரதானி உத்தியோகத்தை விட்டார். டிஸ்ரேலி என்பவர் பிரதானிஸ்தானத்தை 1874-ம் வருஷமுதல் 1880-ம் வருஷம் வரையில் வகித்தார். கிலாட்ஸ்டனுக்குப் பெரியபாரம் நிவர்த்தியாயிற்று. தமது வீட்டிலுள்ளவர் களைத் திருப்தி பண்ணுதல் கஷ்டமாயிருக்கிற தென்பது குடித்தனம் நடத்துபவர் எல்லோருக்கும் தெரியும். பெரி யராஜ்யத்திலுள்ள பிரஜைகள் அனைவரையும் திருப்திசெய் வது அதனினும் கஷ்டமானது. ஆறுவருஷம் இடைவிடா

மல் விழிப்புடன் வேலைபார்த்துவந்த கிலாட்ஸ்டனும் சிறிது களைப்பாறுதல் நலந்தான். உத்தியோகம் போய்விட்டதே யென்று கிலாட்ஸ்டனுக்கு என்றும் வியாகுலம் இருந்த தில்லை. உத்தியோகம் இல்லாதகாலத்தில் அவருடையபுத்தி வேறு அநேக விஷயங்களிற் செல்லும். ஐரோப்பிய பாஷை கள் பலவற்றில் அவர் நிபுணர். கிறிஸ்தவவேதத்தில் மூலை முடுக்குகளும் இவரால் ஆராயப்பட்டிருந்தன. ஓய்வுநாட்க ளிலே கிரந்தகாலக்ஷேபமும், வேதவிசாரமும் செய்து வந் தார். வைதிகவிஷயமாய்ப் பத்திரிகைகளுக்கு நிருபங்கள் எழுதினர். இவர் கல்வித்திறத்தை யறிந்தவர் அப்போதைக் கப்போது பிரசங்கம் செய்யவேண்டுமென்று இவரைவேண்டு தலுண்டு. கல்விமான்கள் வித்தியார்த்திகளிடத்தில் அபிமா னமுடையராயிருத்தல் அதிசயிக்கத் தக்கதல்ல. எவரெவர் எந்த எந்த விஷயத்தைக் கேட்பினும் அவரவர்க்குத் தன் னாலியன்றமட்டிலே கிலாட்ஸ்டன் உதவிபுரிந்தார். 1868 முதல் 1874 வரையில் கிலாட்ஸ்டன் லிபெரல் கக்ஷிக்குத் தலைவராயிருந்தார். அந்த உத்தியோகமும் தனக்கு வேண் டாமென்று பார்லிமெண்டு மெம்பரென்னும் ஹோதா ஒன் றைமாத்திரம் வைத்துக்கொண்டார். டிஸ்ரேலி சரித்திரம் எழுதினல் அவர்பிரதானி உத்தியோகத்தை எவ்வாறு நடத்தினரென்பதை இங்குச்சொல்லவேண்டும். இதற்கு முன்னமேயே அவருடைய கொள்கைகளைப் பற்றிச்சொன் ஞேம். இவர் ஆறுவருஷம் பிரதானியாயிருந்த காலத்தில் இந்துதேசத்திற்கு லிட்டன் பிரபு ராஜப்பிரதிநிதியாயிருந் தார். இந்துதேசத்திலே பஞ்சம் பிறந்து பலபேர் மாண் டார்கள். சென்னைராஜதானியில் தஞ்சாவூர் ஜில்லா ஒன் றைத்தவிர மற்றஜில்லாக்களில் மழைபெய்யாமல் 1876-77 -ம் வருஷத்தில் உண்ணச்சோறும் குடிக்கத் தண்ணீரும்

அருமையாய்ப்போயின. சென்னையில் அக்காலம் காருணிய பிரபு டியூக் அவ் பகிங்ஹாம் அண்ட் சாண்டாஸ் கவர்னராயிருந்தார். இவருடைய முயற்சியால் பிரஜைகள் அநேகர் பிழைத்தார்கள். ரூபாவுக்கு இரண்டரைப்படி அரிசிவிற்றது. வியாபாரிகள் லாபத்தையடைந்தார்கள். ஏழைகள் படாத பாடுகள் பட்டார்.

டிஸ்ரேலி பிரதானி உத்தியோகமாயிருந்த காலத்தில் ருஷியர் இந்தியாவின்மேற் படையெடுப்பாரென்று பீதியுண்டாயிற்று. ஆப்கானிஸ்தானத்தில் அரசன் ருஷியருக்கு அனுகூலமாயும் அங்கிலேயருக்கு விரோதமாயுமிருந்ததாகவும் தெரியவந்தது. டிஸ்ரேலி ஆப்கானிஸ்தான அரசனோடு யுத்தஞ் செய்யவேண்டுமென்று இந்தியாவுக்கு உத்திரவு அனுப்பினார். அந்த உத்திரவை லிட்டன்பிரபு சிரமேற்கொண்டு யுத்தத்துக்குப்போய் முதலே தோல்விகளுண்டாயின. இந்தியர்களிடத்திலிருந்து வசூல் செய்யப்பட்ட வரிகள் ஆப்கானிஸ்தான யுத்தத்திலே செலவாயின. பஞ்சத்தாலும், யுத்தத்தாலும், பெருவாரிநோய்களாலும் நமது இந்துதேசம் அந்தக்காலம் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தது. 1877-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணியவர்கள் "சக்கிரவர்த்தினி" என்னும் பட்டத்தை வகித்தனர். டில்லிநகரில் லிட்டன்பிரபு மகோற்சவம் கொண்டாடினார். இதுதான் முதல் முதல் டில்லிநகரில் கூடிய தர்பார்.

# இந்துதேச பாஷையிலெழுதப்பட்ட வர்த்தமானப் பத்திரிகைகள்.

லிட்டன் பிரபு கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில் அவருடைய துரைத்தனம் சீராக நடத்தப்படவில்லையென்று சுதேச பத்திரிகைகள் குறைகூற ஆரம்பித்தன. பிறர் பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தலுக்கு வர்த்தமானப் பத்திரிகைகள் ஏற்படவில்லை. ஸகலஞானமும் துரைத்தனத்தை வகித்தவர்க்கே உரித்தான பொருளன்று. உத்தியோகத்திலில்லாதவரும் ஞானபாகம் உடையவர். இதனை யுணராத சில உத்தியோகஸ்தர் "தாம் செய்வது நியாயம்: அதைத் தப்பு என்று சொல்பவர் ராஜத்துரோகிகள்: அத்தகைய துரோகிகளைச் சிறைப்படுத்தி உத்தியோகஸ்தரை அவமதிக்காமலிருக்கும்படி செய்தல் வேண்டும்" என்று நினைப்பார். லிட்டன் பிரபுவும் அவருக்கு மந்திராலோசனை சொல்பவரும் இந்தக் கொள்கையை அனுசரித்தவர். இந்து தேசத்துப் பாஷைகளில் அனேக வர்த்தமானப் பத்திரிகைகள் லிட்டன்காலத்தில் பிரசுரஞ் செய்யப்பட்டு வந்தன. அவற்றில், லிட்டன் பிரபுவின் காரியங்களைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் பலநிரூபங்கள் எழுதப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்க்கவே, லிட்டன் பிரபுவுக்குக் கோபம் பிறந்தது. இந்துதேச பாஷையில் எழுதப்பட்ட எந்தப்பத்திரிகையிலும் துரைத்தனத்தாருடைய செய்கைகளைப்பற்றிக் கண்டனமாய் ஒன்றும் எழுதலாகாதென்று சட்டம் பிறப்பித்தார். இஃது ஒரு புதுமையான வகையிலே செய்யப்பட்ட சட்டம். 1878-ம் வருஷம் மார்ச்சுமாதம் 13உயில் இந்தியன் ஸெக்ரிடெரி அவ்ஸ்டேட் என்னும் மந்திரியின் அனுமதிபெற்று அந்த வருஷம் அதே மாதம் 14உயில்

அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியர்களுக்குக் குறைகூறும் வாயில் ஒன்றிருந்தது; அது லிட்டன் பிரபுவால் அடைபட்டது. இந்தப் பிரபுவின் அபூர்வ நட்படிக்கையால் சுதேசபாஷையில் பிரசுரஞ்செய்யப்பட்ட பத்திரிகைகள் நின்று போயின. அங்கிலேய பாஷையில் எழுதப்பட்டுவந்த பத்திரிகைகளை இந்தச் சட்டம் வாதிக்கவில்லை. இந்த அக்கிரமமான சட்டத்தை ரத்துசெய்ய வேண்டுமென்று 1878-ம் வருஷம் ஜுலை மாதம் 23உயிலே கிலாட்ஸ்டன் பலமாகப் பார்லிமெண்டில் வாதாடினர். அவருடைய உபன்னியாஸத்தின் தாற்பரியத்தை மாத்திரம் இங்குச் சிறிது சொல்லுவோம்:—ஒரு முறை பிரஜைகளுக்குத் தத்தம் செய்த கொடையைத் திரும்பவும் வாங்கிக் கொள்ளுதல் ராஜதருமமல்ல. அங்கிலேய தேசத்திலே துரைத்தனத்தாரால் செய்யப்பட்ட அக்கிரமங்களும் தவறுதல்களும் வர்த்தமான பத்திரிகைகளில் வெளிப்படுவதனால் அங்கிலேயப் பிரஜைகளுக்குத் தம் மரசரிடத்திலே பக்தி விசுவாஸம் எள்ளளவேனுங் குறைவுபட்டதாகத் தெரியவில்லை. இந்து தேசத்தாருக்கு வாஸ்தவமான குறைகள் பல உண்டு. பத்திரிகைகளின் வாயை அடைத்த சட்டம் அக்குறைகளில் ஒன்று. அங்கிலேய பாஷையில் அச்சிடப்படும் பத்திரிகைகள் புத்திசாலிகளாலும் கல்விமான்களாலும் படிக்கப்படுகின்றனவாதலால் அவ்விரு தரத்தினரும் ராஜபக்தியிலே குறைவுவர இடங்கொடாரென்று லிட்டன் பிரபு எண்ணினது சரியல்ல. சுதேசபாஷையி லெழுதப்பட்ட பத்திரிகைகளைப் படிப்பவர் மூடரென்று அபிப்பிராயப்படுதலும் சரியன்று. இந்தச் சட்டத்தைச் சென்னையிலும் அநுஷ்டிக்க வேண்டுமென்று லிட்டன் பிரபு, சென்னைக் கவர்னர் காருணிய டியூக் அவ் பகிங்ஹாம் அண்ட்

சாண்டாஸ் பிரபுவைக் கேட்டதற்கு அந்தப் பிரபு "சுதேச பாஷையி லச்சிடப்பட்டு வருகிற பத்திரிகைகளிலே குற்றம் ஒன்றையுந் தான் காணவில்லையென்றும், அவற்றில் எழுதப் பட்ட விஷயங்களைச் செவ்வையாய் நடத்தலாகு மென்றும் கூறினார்." ஆபத்துக்காலத்திலே பத்திரிகைகளை நிர்ப்பந்தப் படுத்தல் ஏகதேசம் நியாயமாயிருக்கலாம். மற்றைக் காலத் திலே குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதுவோர் அனைவரும் தமக்குக் கீழிருக்கும் உத்தியோகஸ்தருடைய வாக்கையே வேதவாக்காகக் கொள்ளாமல் பிரஜைகள் வாக்கிற்கும் மதிப் புக்கொடுத்துக் குறைகளைத் தீர்த்தல் ராஜ நீதியாகும். சுதேசபாஷைகளிலே பத்திரிகைகள் அச்சிடுகிற சுதந்திரத் தை இந்தியர் 40-வருஷம் அனுபவித்து வந்திருக்கிறார்கள். அதனை நிமிஷ சிருஷ்டியிலேற்பட்ட சட்டத்தினால் ரத்து செய்வது முற்றிலும் ராஜநீதிக்கு விரோதம். இந்து தேசப்பிரஜைகளின் நன்மைக்காக அத்தேசத்து அரசாக்ஷி அங்கிலேயரால் வகிக்கப்பட்டிருக்கிறது. அங்கிலேயர் எந்த எந்த சுதந்தரங்கள் தம்முடைய அருமையான பொரு ள்களென்று பாராட்டுகிறார்களோ அவையெல்லாம் இந்தி யர்களுக்கும் அருமையான பொருள்களல்லவா? துரைத் தனத்தாருக்கு எந்தச்சட்டம் அனுஷ்டானமோ அதேதான் பிரஜைகளுக்கும் இருத்தல் வேண்டும். வேறு வகையாக நடப்பின் பிரஜைகளுடைய விசுவாசங்குறையும். லிட்டன் பிரபு இவற்றையெல்லாங் கவனிக்காமலே சட்டம் செய்தது விசனிக்கத்தக்கது."

கிலாட்ஸ்டன் இந்தியருடைய கக்ஷியை மேற்கூறிய வாறு எடுத்து வெகு நேரம் பிரசங்கித்தார். பார்லிமெண்டு மெம்பர்கள் கேட்டு இந்தியர்களுக்கு உதவிபுரிய வேண்டு மென்று சித்தத்தில் எண்ணங்கொண்டார். லிட்டன் பிரபு

கவர்னர் ஜனரல் வேலையினின்று நீங்கி ரிப்பன் பிரபு வந்தவுடன் சுதேச பாஷைச் சட்டம் ரத்துசெய்யப்பட்டது. டிஸ்ரேலி பிரதானியாகவும் லிட்டன்பிரபு கவர்னர் ஜனரலாயு மிருந்தகாலத்தில் இந்தியர் ஆயுதங்கள் ஒன்றையும் லைசென்ஸில்லாமல் உபயோகித்தலாகாதென்றும் சட்டஞ்செய்தார். கத்தி, துப்பாக்கி, ரிவால்வர் முதலிய ஆயுதப் பழக்கம் இந்தியர்களுக்கிருந்தால் 1857-ம் வருஷத்தில் சிப்பாய்கள் கலகஞ்செய்தது போல மறுபடியும் கலகம் சம்பவிக்குமென்று எண்ணிச்செய்த சட்டம். லிட்டன் பிரபுவுக்குப்பின் அனேகமகாப்பிரபுக்கள் கவர்னர் ஜனரல்களாக வந்தும் இந்தியர்கள் தமது உடல் பொருள் ஆவிகளை ரக்ஷிப்பதற்கு வேண்டிய ஆயுதங்களை உபயோகிக்காமல் மூன்றையும் பறிகொடுத்துவருவதே சரியென்று எண்ணப்பட்டு ஆரம்ஸ் ஆக்ட் என்னும் ஆயுதச்சட்டம் இன்னும் ரத்தாகாமலே இருந்துவருகிறது. காங்கிரஸ்மகா சபையில் வருஷந்தோறும் ஆரம்ஸ் ஆக்ட்டை ரத்துசெய்யவேண்டுமென்று ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டு வருகிறது. நஷ்டமான சுதந்திரங்கள் திரும்பவும் கிடைத்தலில்லைபோலும்.

---

## கிலாட்ஸ்டன் இரண்டாமுறை பிரதானியாக வந்தது.

---

1880-ம் வருஷத்திலே பார்லிமெண்டு இலெக்ஷன் நடந்தது. இந்த இலெக்ஷனில் லிபெரல் கக்ஷி மிகவும் பலமாயிருந்தது. லிபெரல்களில் 357 பேர்களும், கன்ஸெர்வெடிவ்களில் 233 பேர்களும் அயர்லாண்டுக்கு ஸ்வராஜ்யம்

வேண்டு மென்று கோரின 62 பேர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். கன்ஸெர்வெடிவ்களுக்கும் லிபெரல்களுக்கும் வித்தியாசம் 124. கிலாட்ஸ்டன் லிபெரலா யிருந்தமையால் அவர்கக்ஷியே மெஜாரிடியா யிருந்தது. இந்த மெஜாரிடி யைக் கொண்டு லோகோபகாரமான காரியங்கள் அநேகம் செய்யலா மென்று கிலாட்ஸ்டன் நினைத்தார். கிஞ்சிக்ஞ ஞன மனிதன் நினைத்தவாறு காரியங்கள் முடிவுபெறு கின்றனவா ?

அயர்லாண்டு தேசத்தை அங்கிலேய தேசத்தின் "விலாவில் தைத்தமுள்" என்றோம். அந்த முள்ளையெடு த்து அங்கிலேய தேசத்துக்கும் அயர்லாண்டுக்கும் க்ஷேமத் தைச் செய்யவேண்டு மென்று கிலாட்ஸ்டன் முதலிலே தீர் மானஞ்செய்து கொண்டார். மிராசுதாரரும் பயிரிடுங் குடிக ளும் அயர்லாண்டில் ஓயாத சச்சரவு செய்துகொண் டிருந் தார்கள். சச்சரவுகளை நிறுத்தி அயர்லாண்டில் ஸமாதானத் தை ஸ்தாபிக்கக் கருதி, கிலாட்ஸ்டன் தற்கால உபசாந்தி யாக ஒரு சட்டம் பிரதிநிதி சபையில் நிரூபணஞ் செய்தார். இந்த சபையில் அது அங்கீகரிக்கப் பட்டது. பிரபுக்கள் சபையில் மிராசுதார்களே மிகுதியாக இருந்தமையாலும் மேற் சொன்னசட்டம் அநுஷ்டானத்துக்கு வந்தால் பயிரி டுங் குடிகளுக்குச் செல்வாக்கு மிகுதியாகவும் மிராசுதார்க ளுடைய அதிகாரம் குறைவாகவும் ஆய்விடுமென்று பயந்து பிரபுக்கள் கிலாட்ஸ்டனுடைய சட்டத்திற்கு அநுமதி கொ டுக்கவில்லை. சுயலாபத்தைப் பெரிதாயும் குடிகளுடைய க்ஷேமத்தை அற்பமாயும் எண்ணின பிரபுக்களுடைய நட படிக்கையைப் பற்றிப் பேசுவதிற் பிரயோஜனமே யில்லை. கிலாட்ஸ்டனுடைய சட்டத்தைப் பிரபுக்கள் நிராகரித்து விட்டார்களென்ற ஸமாசாரம் அயர்லாண்டிலுள்ள பயிரிடுங்

குடிகள் காதிற் பட்டவுடன் அவர்களுக்குப் பிரபுக்கள்மேற் கோபம் பிறந்தது. ஏழைகள் கோபம் அம்பல மேறவில்லை.

அயர்லாண்டுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்றுகோரின 62 மெம்பர்களுக்குத் தலைவன் சார்ல்ஸ் ஸ்டீவர்ட் பார்னேல் என்பவர். இவர் பிராடெஸ்டண்டு மதத்தைச் சேர்ந்தவரா யினும் அயர்லாண்டிலுள்ள பயிரிடுங்குடிகளிடத்தில் அதிக அனுதாபம்வைத்தவர். கிலாட்ஸ்டன் சட்டம் பிரபுக்களால் அனுவதிக்கப் படாமற்போன காலந்தொட்டு பார்லிமெண் டில் இவர் அயர்லாண்டுக்காகப் பெருமுயற்சி செய்துவந்தார். இவருக்கு மறுநாமம் "மகுடமில்லாத அயர்லாண்டு மன் னன்" என்பது. பார்லிமெண்டில் அயர்லாண்டின் பிரதி நிதிகள் இவர் சொன்னவற்றை அனுவதித்தது போலவே, அயர்லாண்டி லிருந்த ஜனங்களும் இவர் பேச்சில் மதிப்பு வைத்து இவராலே காரியங்கள் கைகூடு மென்று நம்பினார் கள். ஜனங்களின் விசுவாஸத்துக் கேற்பவே, பார்னெலும் நடந்தார். அயர்லாண்டிலே பயிரிடுங் குடிகளுடையகலகங் கள் தினேதினே அதிகரித்துக் கொண்டுவந்தன. துரைத்தன உத்தியோகஸ்தர் இரண்டுபேர்கள் கொல்லப் பட்டார்கள். பொறுமையற்ற அயர்லாண்டு ஜனங்களுடைய கலகங்களை நிறுத்தற் பொருட்டு "கலக அடக்கச் சட்டம்" என்று ஒன்று பார்லிமெண்டாராலே செய்யப்பட்டது. இந்தப்புதிய சட்டத்தினுலே பார்லிமெண்டி லிருந்து அயர்லாண்டு பிரதி நிதிகளும் அயர்லாண்டிலுள்ள ஸாமான்ய ஜனங்களும் அங் கிலேயரிடத்தில் கோபம் கொண்டார்கள். கலகக்காரர்களெ ன்று எவரிடத்தில் ஸம்சயம் பிறந்தாலும் போலீஸார் அவ ரைச் சிறைப்படுத்த அதிகார முடையவரா யிருந்தார். பார் னெலும் சிறையி லடைக்கப்பட்டார். நடந்த கொலை இரண்

டிற்கும் பார்னெல் எவ்வகையிலும் ஜவாப்தாரி யல்லவென்பது இக்காலத்தில் ஸ்பஷ்டமான ஸாக்ஷியத்தால் ஏற்பட்டிருக்கிறது. உபகாரியான கிலாட்ஸ்டனிடத்திலேயே கோபங்கொண்ட அயர்லாண்டார் மற்ற அங்கிலேயரை வெறுத்தார்க ளென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கலகங்களை யடக்கச் சட்டங்களை யுண்டுபண்ணிக் குறைகள் தீரும் உபாயந்தேடாமல் விடுவது மந்திரிக் கழகாகாதல்லவா? கிலாட்ஸ்டன் புதியசட்டம் ஒன்று நிருமாணஞ் செய்தார். மிராசுதார் தங்கள் மனம்போனபடி குத்தகையை அதிகப்படுத்தாம லிருத்தலுக்கு ஒரு நியாயஸ்தலத்தை ஏற்படுத்தி அதிற் பயிரிடுங் குடிகள் சொல்வதையும் மிராசுதார்கள் சொல்வதையுங் கேட்டு நியாயாதிபதிகள் எந்தத் தொகை குத்தகையென்று நிர்ணயஞ் செய்கிறார்களோ அந்தத் தொகை 15 வருஷம் வரையில் மாற்றக்கூடாதென்றும், மிராசுதாருடைய நிலத்தைக் கிரயமாக வாங்கக் கால் வாசிப்பணம் கையிலே வைத்துக்கொண் டிருக்கிற குடிகளுக்குப் பாக்கிப்பணம் ஸர்க்காரில் கடனாகக் கொடுபடவேண்டுமென்றும் சட்டம் செய்யப்பட்டது. வெகு பிரயாஸப்பட்டு இந்தச் சட்டம் பிரதிநிதி சபையிலும் பிரபுக்கள் சபையிலும் அங்கீகரிக்கப் பட்டது. ஏகதேசம் அயலாண்டுக்குத் திருப்தியுண்டாயிற்று.

இவர்காலத்திலே தென்னாபிரிக்காவி லுள்ள டிரான்ஸ்வால் நாட்டில் யுத்தங்கள் நடந்து வந்தன. கிலாட்ஸ்டன் ஏகதேசமாய் டிரான்ஸ்வாலுக்கு ஸ்வராஜ்யங் கொடுத்தல் தகுதியென்று எண்ணினவாறே செய்துமுடித்தார். [1899-ம் வருஷத்திலே டிரான்ஸ்வாலில் மறுபடியும் யுத்தம் ஸம்பவித்ததும் அதுமுடிந்ததும் அனேகருக்குத் தெரிந்த விஷய

மாதலால் இங்கு அதனை விரித்துச் சொல்லுதல் அனுவசியம். தற்காலம் தென்னாபிரிக்கா, நமது சக்ரவர்த்தியின் பிதாவினால் ஸ்வராஜ்யம் பெற்றுச் சுகமடைந் திருக்கிறது.]

---

## எகிப்துதேச சமாசாரங்கள்.

---

ஆபிரிகா கண்டத்தின் வடகிழக்கில் எகிப்து என்று ஒரு பெரியராஜ்ய மிருக்கின்றது. அது முகம்மதியருடைய ஆளுகைக் குட்பட்டது. அதின் அரசருக்குப்பாச்சா என்று பட்டப்பெயர். 1875-ம் வருஷத்தில் இந்நாட் டதிபதியாயிருந்தவர் இஸ்மேல்பாஷா என்பவர். இவர்தலைகாலே தெரியாமல் கடன்வாங்கி அந்தக்கடனை இறுக்கச் சக்தியற்றவராயிருந்த நிலைமையில் அங்கிலேய துரைத்தனத்தாரும் பிராஞ்சு துரைத்தனத்தாரும் சேர்ந்து கடன்களைத் தீர்த்து அந்தநாட்டின் விசாரணையைச் சேர்ந்து நடத்திவந்தார்கள். ஐரோப்பியருடைய வரத்துப்போக்கும் நடைஉடைபாவனைகளும் எகிப்தில் அதிகரித்துக் கொண்டுவந்தன. ஒரு கக்ஷிக்காரர் ஐரோப்பியரைத் தொலைக்கவேண்டு மென்றெண்ணினார். இந்தக்கக்ஷிக்குத் தலைவன் அரபிபாச்சா என்பவன். கலகம் முற்றுவதற்கு முன்னமேயே அங்கிலேய துரைத்தனத்தாரும் பிராஞ்சு துரைத்தனத்தாரும் தம்முடைய கப்பற் படைகளை எகிப்துக்கு அனுப்பினார்கள். சண்டை ஆரம்பிக்குமுன் பிராஞ்சுக்காரர் யாதோ காரணத்தால் விலக, அங்கிலேயர் மாத்திரம் அரபிபாச்சாவுடன் சண்டை செய்து அவனைத் தோற்றுவித்து எகிப்தில் தமது செல்வாக்கையே ஸ்தாபித்து இன்றும் அதிகாரஞ் செலுத்தி

வருகின்றார்கள். எகிப்து அங்கிலேயருடைய ஆட்சிக்குட் பட்டிருப்பதனால் இந்தியாவின்மேல் ஐரோப்பிய சத்துருக்கள் படையெடுக்க முடியவில்லை. ராஜ்யத்தின் க்ஷேமத்தை எண்ணி இந்தச் சண்டை செய்யப்பட்டதாயினும், லிபெரல்களில் அனேகர் கிலாட்ஸ்டனுக்கு இந்த விஷயத்தில் உதவிபுரியவில்லை.

---

## ஏழைகளுக்கு வீடுகள்.

1884-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டன் ஏழைகளுக்கு உபகாரார்த்தமாக ஏற்பாடு ஒன்றுசெய்தார். இந்தியாவில் ஏழைகள் வசிக்கும் குடிசைகளின் நிலைமை நமக்குத் தெரியும். காலுக்குச் செருப்பில்லாமலும் குளிரைப் போக்கக் கணப்பில்லாமலும் அங்கிலேயர் நாட்டிலிருப்பது சாத்தியமல்ல. பெருவாரி நோய்கள் வந்தால் ஏழைகள்பாடு திண்டாட்டம். ஏழைகளுக்கு ஆரோக்கியமான வீடுகள் கட்டிக்கொடுத்தலுக்கு ஒரு சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தச்சங்கத்தினால் ஏழைகள் சுகமடைந் திருக்கின்றார்கள்.

1884-ம் வருஷத்திலே பிரதிநிதி சபைக்கு எந்த எந்த ஊர்கள் மெம்பர்களைத் தெரிந்தெடுக்கலாமென்பதைப் பற்றியும், அவ்வவ்வூரின் ஜனத்தொகைக்கு ஏற்றபடி எத்தனை பிரதிநிதிகள் ஏற்படவேண்டுமென்பதைப் பற்றியும் கிலாட்ஸ்டன் கொணர்ந்த புதியசட்டம் பார்லிமெண்டில் அங்கீகரிக்கப் பட்டதனாலே தற்காலம் பார்லிமெண்டு பிரதிநிதி சபைக்கு 670 மெம்பர்கள் ஏற்பட்டுள்ளார்.

---

1880-முதற்கொண்டு 1885 ஜுன் மாதம் வரையில் கிலாட்ஸ்டன் பிரதானியாயிருந்து பலகாரியங்களைச் சாதித் தார். 1885-ம் வருஷத்தில் லிபெரல்களால் ஏற்படுத்தப் பட்டபட்ஜெட்[வரவுசெலவுகணக்கு]பார்லிமெண்டில்அங்கீ கரிக்கப்பட வில்லை. கிலாட்ஸ்டன் தன் கக்ஷிக்காரருக்கே தன்னிடத்திலிருந்த விசுவாஸம் குறைந்து போனதைக் கண்டு பிரதானி உத்தியோகத்தைவிட்டு விட்டார். ஸால்ஸ் பெரி பிரபு பிரதானியானார். இவர் கன்ஸெர்வெடிவ் கக்ஷிக்குத்தலைவர். 1885-ம் வருஷம் ஜுன்மாத முதற் கொண்டு 1886-ம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் ஸால்ஸ் பெரி பிரபு பிரதானி வேலைபார்த்தார். 1886-ம் வருஷத் தில் நடந்த இலெக்ஷனில், 231-லிபெரல்களும், 247 கன் ஸெர்வெடிவ்களும், அயர்லாண்டு ஸ்வராஜ்யாபிமானிகள் 82 பேர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

1880-வருஷமுதல் கிலாட்ஸ்டன் ஸ்காட்லாண்டி லுள்ள மிட்லோதியன் என்னும் மாகாணத்துக்குப் பிரதி நிதியாய்த் தெரிந்தெடுக்கப்பட்டுக்கொண்டுவந்தார். 1886-ம் வருஷத்தில் இவருக்கு மிட்லோதியனில் 7879 வோட்டும், இவருக்குப்போட்டியாக வந்தவருக்கு 3245 வோட்டும் கிடைத்தது. பிரஜாதிபத்தியத்திற்குப் பிரயாசைப்பட்டு வந்த கிலாட்ஸ்டனுக்கு வோட்டுகள் ஜாஸ்தியாகக் கிடைப் பது ஸகஜந்தானே.

இந்தப்புதிய பார்லிமெண்டில் ஒரு கஷ்டமுண்டா யிற்று. லிபெரல்கள் மெஜாரிடியாயிருந்தபடியால் அவர்க ளுக்குத்தலைவனான கிலாட்ஸ்டன் பிரதானியாக வரவேண்டி யவராயிருந்தார். அயர்லாண்டு ஸ்வராஜ்யாபிமானிகள் 82 பேர்களும் கன்ஸெர்வெடிவ்களுடன் சேர்ந்தால் 329 பேர்

ஒருகக்ஷியாகவும் லிபெரல்கள் 331 பேர் மற்றொருகக்ஷியாக வும் பிரிவார்கள். இரண்டுபேர்கள் மெஜாரிடியாக வைத் துக் கொண்டு பிரதானி உத்தியோகத்தை வகிப்பதுமிகுந்த ஸங்கடத்தை யுண்டுபண்ணக் கூடிய நிலைமையாயிருந்தது. ஆயினும் கிலாட்ஸ்டன் 1886-ம் வருஷத்தில் மூன்றும் முறை பிரதானியாக வந்தார்.

அயர்லாண்டில் ஸ்வராஜ்யாபிமானிகளா யிருந்தவர்க ளுக்கு ஏதாவது ஸகாயஞ்செய்து அவர்களை சமாதானப் படுத்தக் கிலாட்ஸ்டன் சித்தங்கொண்டார். சங்கற்பித்த காரியத்தை நிறைவேற்றத் தம்மாலியன்ற அளவு முயற்சி யையும் கிலாட்ஸ்டன் செய்தார். 1886-ம் வருஷத்தில் அயர்லாண்டில் ஸ்வராஜ்யஸ்தாபனமாவதற்கு ஒரு புதிய சட்டம் பார்லிமெண்டு பிரதிநிதி சபையில் கொண்டுவரப் பட்டது. அயர்லாண்டிலிருந்து அங்கிலேய தேசத்துக்கு அனுப்பப்பட்ட 105 பிரதிநிதிகளும் அங்கிலேய் பார்லிமெ ண்டுக்கு வராமலே அவர்கள் தேசத்துக்காரியங்களை அவர் களே பார்க்கும்படியான அதிகாரங்களமைந்தது. இந்தப் புதிய சட்டத்தைப் பற்றிய தருக்கங்கள் பல: அங்கிலேயர் பலருக்கும் அயர்லாண்டு ஜனங்களிடத்தில் அபிமான மில் லாமையால் அவர்களுக்கு ஸ்வராஜ்யம் கொடுத்தல் ஸம்மத மாயில்லை. கடைசியில் 313 பார்லிமெண்டு மெம்பர்கள் ஸ்வராஜ்யங்கொடுக்கலா மென்றும் 343 மெம்பர்கள் கூடா தென்றுஞ் சொன்னார்கள். அயர்லாண்டு ஸ்வராஜ்ய சட்டம் ஆலோசனைக்கு வந்தகாலத்தில் கிலாட்ஸ்டன்செய்த உபன் யாஸத்தின் மேன்மையைப்பற்றிப் புகழாதவரில்லை. அயர் லாண்டுக்குக் கஷ்டகாலம் நிவர்த்தியானாலல்லவோ அவ்வூ ராருக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கும்? கிலாட்ஸ்டனாலேயே

முடியாதகாரியம் வேறு எவரால் முடியுமென்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

தான் செய்த பிரேரேபனைக்குச் சம்மதிக்காத பார்லிமெண்டிலே பிரதானி உத்தியோகத்தை வகிக்க இஷ்டப்படாமலே கிலாட்ஸ்டன் அதே வருஷத்தில் புதிய இலெக்ஷன் ஒன்று ஏற்பாடு செய்தார். 1886-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இலெக்ஷன் நடந்தது. இலெக்ஷன் முடிவில் 188 லிபெரல்களும், 314 கன்ஸெர்வெடிவ்களும் அயர்லாண்டு ஸ்வராஜ்யாபிமானிகள் 84-பேர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். அயர்லாண்டு ஸ்வராஜ்யம் அப்போதே பிராணவியோகமடைந்த தென்னலாம். கிலாட்ஸ்டனும் பிரதானி வேலையை விட்டு விட்டார். ஸால்ஸ்பெரி பிரபு பிரதானியானார். கன்ஸெர்வெடிவ் கக்ஷி ஓங்கிநின்றது. இவர்களிடத்தில் ஸ்வராஜ்யப்பேச்சைப் பேசவுமாகாது. 1886 முதற்கொண்டு 1892-ம் வரையில் கன்ஸெர்வெடிவ்களே ஸகல அதிகாரத்தையுஞ் செலுத்தி வந்தனர். அயர்லாண்டுக்கு ஸகாயஞ்செய்யக் கிலாட்ஸ்டன் செய்த முயற்சிகளெல்லாம் நிஷ்பிரயோஜனமாயின. அயர்லாண்டாருக்கு அதிருப்தி அதிகரித்துக்கொண்டே வந்தது. ஸ்வராஜ்யாபிமானிகளைக் கொடுமையாகத்தண்டித்து வாய்திறக்கவொட்டாமல் கன்ஸெர்வெடிவ்கள் செய்தார்கள். யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒருகாலம் வருமென்ற நம்பிக்கையோடு அயர்லாண்டு ஜனங்கள் அடங்கியிருந்தார்கள்.

1892-ம் வருத்தில் புதிய இலெக்ஷன் செய்யப்பட்டது. அதில் 273 லிபெரல்களும், 268 கன்ஸெர்வெடிவ்களும், ஐரிஷ் ஸ்வராஜ்யாபிமானிகள் 81 பேர்களும் இலெக்ஷன் செய்யப்பட்டார்கள். லிபெரல்களில் 47 பேர்கள் ஸ்வராஜ்

யத்துக்கு விரோதிகள். கக்ஷி நாலாகப் பிரிந்திருந்தது. ஸ்வராஜ்யம் அயர்லாண்டிற்குத் தரல்வேண்டுமென்பதற்கு 354 மெம்பர்களும், அதுகூடாதென்பதற்கு 315 மெம்பர்களும் ஏற்பட்டார்கள். கிலாட்ஸ்டன் நான்காமுறை பிரதானியாகவந்தார்.

1892-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டனுக்கு வயது 82. அங்கிலேய அரசாக்ஷிக்குப் பிரதானியாக இத்துணைவயது முதிர்ந்தவர் வருவது அதிசயிக்கத்தக்கது. சுயலாபத்தைச் சிறிதேனும் நினையாமலே பிரஜைகளின் குறைகளைத் தீர்த்ததலுக்கே உயர்ந்தபதவிகள் மனிதருக்குக் கிடைக்கிறதென்கிற உறுதிப்பாடுள்ள கிலாட்ஸ்டன் தன்னுயுளுள் அயர்லாண்டிற்கு நன்மைசெய்யவேண்டும் என்ற, ஒரேசிந்தை யுடைவரா யிருந்தமையாலே தளர்ந்த வயதிலும் ராஜ்யபாரத்தைத் தாங்கவந்தார். உபகார சிந்தையுடையவர், உடலின் தளர்ச்சியைச் சிந்திப்பதே யில்லை யென்பது கிலாட்ஸ்டன் சரித்திரத்தாற் செவ்வையாக விளங்கும்.

1892-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டன் அமைத்துக்கொண்ட மந்திராலோசனைச் சபையிலே, தற்காலம்(1914) பிரதானியா யிருக்கும் கனம் ஆஸ்க்வித் துரையவர்களும், அயல் ராஜ்யவிசாரணைக் கருத்தராயிருக்கிற ஸர் எட்வர்ட் க்ரே என்பவரும் சேர்ந்திருந்தார்கள். இவ்விருவரும் அயர்லாண்டில் ஸ்வராஜ்யம் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்று எண்ணினவர்கள். [1914-ம் வருஷத்திலும் அதே அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.]

1893-ம் வருஷத்திற் கிலாட்ஸ்டன் அயர்லாண்டு ஸ்வராஜ்ய சட்டத்தை (Home Rule Bill) மறுபடியும் பார்லி

மெண்டில் கொணர்ந்தார். பிரதிநிதி சபையில் இந்தச் சட்டத்திலுள்ள ஒவ்வொரு விஷயமும் 82 நாள் வாதிக்கப்பட்டது. முடிவில் பிரதிநிதி சபையில் மெஜாரடியாரால் அயர்லாண்டு ஸ்வராஜ்ய சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. முதிர்ந்த வயதையும், சரீரத்திடக் குறைவையும், மனக்கவலையையும் பொருள் செய்யாமலே கிலாட்ஸ்டன் தான் பிடித்த காரியத்தைப் பிரதிநிதி சபையில் நிறைவேற்றினார். இவர் மனத்திடத்தை எவர்தாம் வியக்காம லிருத்தல் கூடும்!

பிரபுக்கள் சபையிலும் இதே சட்டம் அங்கீகரிக்கப் பட்டா லொழிய அமுலுக்குவராது. பிரபுக்கள் ஸ்வராஜ்ய விரோதிகள் தங்கள் வம்சத்திற்குப் பிரதிநிதிகளாக இருப்பவர்களேயன்றி பிரஜைகளாலே தெரிந்தெடுக்கப்பட்டவர்களல்ல. அந்தச் சபையில் ஸ்வராஜ்ய சட்டம் அங்கீகரிக்கப் படவில்லை. அயர்லாண்டின் கஷ்டம் நிவர்த்தி யாகாமலே போயிற்று. கிலாட்ஸ்டன் செய்யக் கூடியதெல்லாம் செய்தும் பயன்படாமற் போயிற்று.

1894-ம் வருஷத்திற் கிலாட்ஸ்டன் சரீரம் மிகுந்த தளர்ச்சியடைந்து காதும் சிறிது மந்தப்படவே, இனி ராஜ்யபாரத்தைச் சுமப்பது தகுதியன் றெண்ணிப் பிரதானி ஸ்தானத்தை விட்டுப் பார்லிமெண்டு மெம்பர்ஸ்தானத்தை மட்டில் வைத்துக் கொண்டார். இவருக்குப்பின் மந்திரியாக வந்தவரும் லிபெரல் கக்ஷியைச் சேர்ந்தவராயினும் யானையிருந்த இடத்தில் பூனை உட்கார்ந்தது என்பது போலாயிற்று. பிரதானியாக வந்த ரோஸ்பெரி பிரபு குலத்திலும், கல்வியிலும், செல்வத்திலும் மேம்பட்டவரே. பிரதிநிதி சபையோரை ஒருவழிப்படுத்தும் சா

மர்த்தியம் கிலாட்ஸ்டனுக்கு இருந்ததுபோல மற்றவருக்கு இல்லையென்னலாம். 1894-ம் வருஷத்திற் பிரதானிஸ்தானத்தை விட்டதோடு லிபெரல் கக்ஷியின் நாட்டாண்மையையும் விட்டுவிட்டார்.

பிரதிநிதிசபையில் 1833-ம் வருஷம் முதல் 1894-ம் வரையில் ஆரவாரத்தோடு வேலைபார்த்துவந்தவர் ஓய்வுகால்த்தை எப்படிப்போக்குவார் என்று ஒருகேள்வி பிறக்கலாகும். ஓரறிவுப் பிராணிகளுக்கு ஓய்வு காலத்தைப் போக்க உபாயம் செய்வது கஷ்டந்தான். கிலாட்ஸ்டனைப் போல இலகுவாய் ஒருவிஷயத்திலிருந்து மற்றொருவிஷயத்திற் புத்தியைச்செலுத்தக் கூடியவர்களுக்கு ஓய்வுகாலமென்பது கிடையாது. கணக்கிலகப்படாத விஷயங்களைக் கற்றிருந்த கிலாட்ஸ்டன் சும்மா ஒரு நிமிஷமிருத்தலும் முடியாது. "மனத்தையடக்கியே சும்மா இருக்கின்ற திறம் மிகவும் அருமையானது." லோகாயதர் களாயிருப்பவர்கள் பொருள், இன்பம், இரண்டையும் நாடி இரவு பகலாய் உழைத்துப் பொய்ச்சுகத்தை யடைகிறார்கள். ஆஸ்திகபுத்தியுடைய மகான்கள் பொருளையும் இன்பத்தையும் துறந்திலராயினும் அறத்தினிடத்தும் வீட்டினிடத்தும் சித்தத்தைச் செலுத்தியே நிற்பார்கள். பின்சொன்ன ஜாதியிற் சேர்ந்தவர் கிலாட்ஸ்டன். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்னும் நீதிவாக்கியத்தை மறக்காமல் உற்றார் உறவினர்க்குத் தாராளமாக உதவிபுரிந்து வந்தனர். இன்மையால் வருந்துவோர்க்கும் பொருளுதவி செய்தார். வித்தியாவிஷயமாய் எத்துணையோ பேர்களுக்குச் சகாயஞ் செய்தனர். தன்னிடத்திற் பயிரிடுங்குடிகள் வருந்தாமற் பாதுகாத்துவந்தார். "தானடங்கத்தன் குலமடங்கும்" என்

னும் பழமொழிக் கொவ்வ, கிலாட்ஸ்டன் அமரருள் உய்க்கும் அடக்கத்தைக் கைக்கொண்டவராயிருந்தார். அவருடைய மக்களும் பிதாவைப்போலவே அடங்கி நடந்து வருகிறார்கள். அவருக்கு இல்வாழ்க்கைத் துணையாக அமைந்த காதரைன் க்லின் என்னுஞ் சீமாட்டியை, ஸ்திரீகள் குடும்பத்தில் நடக்கவேண்டிய முறையைக்காட்ட அவதரித்த நிதர்சனம் என்னல் வேண்டும். தன் பர்த்தாவிலும் உயர்ந்த பொருள் உலகிலில்லை யென்கிற நிச்சயபுத்தியோடு நடந்தவள். உத்தியோக முறையில் வேலைசெய்யுஞ் சமயந் தவிர்த்து மற்றக்காலங்களில் அவர் பக்கலிலிருந்து விலகி நின்றவளல்லள். தன் பர்த்தாவுக்குப் பற்றுக்கோடாக இருந்தாள். அவர் தீர்மானத்தையே அங்கீகரித்துக் குடும்பக்காரியங்களைக் கவனித்து வந்தாள். ராஜ்யபாரத்தை வகித்த புருஷருக்குக் குடும்பபாரமும் கூடச்சேருமானல் சிரமம் அதிகமாகுமென்றெண்ணிக் குடும்பக்காரியங்களைக் காரியஸ்தர்களைக்கொண்டு செவ்வையாய்ப் பார்த்துவந்தாள். கிலாட்ஸ்டனுடைய உன்னத பதவிக்கேற்ற மனைவி காதரைன் க்லின் என்றே யாவருஞ் சொன்னார்கள்.

---

## கல்வியின் மேன்மை.

---

ஆக்ஸ்போர்டு ஸர்வகலாசாலையிலே வித்தியாகுருக்கள் செய்யும் உபன்யாஸங்களைக் கேட்டவர்களே பெரிய வித்வான்களானார்கள். அங்கு நாலுவருஷங் குடியாயிருந்து ஐயந்திரிபறக்கல்வி பயின்ற கிலாட்ஸ்டனுடைய வித்தையின் மேன்மை எம்மாலளவிடக் கூடியதன்று. ஐரோப்பி

யர் தேவபாஷைகள் என்றுகொண்டாடும் க்ரீக், லாடின் இரண்டிலும் கிலாட்ஸ்டன் மகா நிபுணத்வத்தை யடைந்தவர். க்ரீக்பாஷையில் "இலியத்" என்று ஒரு இதிகாசமுண்டு. இந்தத் தமிழ்நாட்டில், வால்மீகிராமாயணத்தைப் பருத்தியூர் பிரஹ்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியார் எத்துணைத் திருத்தமாய்ப் பரிசீலனை செய்திருந்தனரோ அவ்வாறே கிலாட்ஸ்டன் "இலியத்" என்னும் இதிகாசத்தைப் பூரணமாயறிந்திருந்தார், பிராஞ்சு, இடாலியன், என்னும் இரண்டு பாஷைகளும் அவருக்கு ஜலப்பிராயம். பிராஞ்சு பாஷையில் அவர் பேசக்கேட்டவர் அவரைப் பிராஞ்சுக்காரரென்றே சொல்லுவார். இடாலிய பாஷையிலும் அவ்வாறே. மேற்கூறிய பாஷைகளிலுள்ள ஸாமான்ய காவியங்களில் மாத்திரம் நிபுணத்வத்தை யடைந்து திருப்தியடைந்தவரன்று. அந்தப்பாஷைகளில் எழுதப்பட்டிருந்த கிறிஸ்தவ வேதக்கிரந்தங்களையும் பூரணமாய்க் கற்றிருந்தார். கிறிஸ்தவவேதத்தையும், வேதபாஷ்யங்களையும் படிக்கப்படிக்க மதாபிமானமும் ஆஸ்திகபுத்தியும் பலப்பட்டு வந்தது. சாஸ்திரவிசாரணை மிகுதியாகச்செய்கிற சிலர் நிரீச்சுரவாதத்துக்கு ஆரம்பித்துவிடுவார். கிலாட்ஸ்டன் அந்தக்கூட்டத்திற் சேர்ந்தவரன்று. லாடின் பாஷையிலுள்ள சிலகிரந்தங்களை அங்கிலேயபாஷையில் மொழிபெயர்த்திருக்கின்றூர். இவர்செய்த தர்ஜமாக்கள் முதல் நூல்களின் சொல்நயம் பொருள்நயங்களைச் செவ்வையாய் விளக்கக்கூடியனவாம். "கல்விகரையில" என்பது உண்மை. "கற்பவர் நாள்சில" என்பது கிலாட்ஸ்டன் விஷயத்தில் ஒவ்வாது. 89-வயதில் 84-வயதைப்படிப்பிற் செலவிட்டவர்.

## வாக்குச்சாதுரியம்.

"இனிய உளவாக இன்னாதகூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"—இனிய சொற்கள் ஏராளமாயிருக்கக் கடுஞ் சொற்கூறல் எதிரில் நிறைந்திருக்கும் கனியை வேண்டாமென்று விலக்கிக் காயைக்கவர்தல் போலாம்—என்றார் பெரியோர். சிலருடைய வாக்கு இயற்கையிலேயே மதுரமாக அமைந்துள்ளது. கிலாட்ஸ்டன் என்றுங்கடுஞ்சொற் சொன்னதில்லை. பாஷையிலே பூரணப் பிரக்ஞையுடையராயிருந்தமையால் எந்த எந்த ஸமயத்துக்கு எந்த எந்த பதத்தைப் பிரயோகிப்பது உசிதமோ அதையே உபயோகித்ததனால் இவரை எதிர்த்து வந்தபெரியவர்களும் இவரிடத்தில் கோபித்தவரன்று. இவர் குரல் கம்பீரமானது. கம்மற்குரலுடையவராயிருப்பின் அனேகமாயிரம் ஜனங்கள் கேட்கும்படிப் பேசுந்திறமை இராது. அந்தக்குரலையும் அந்த அந்த ரஸத்துக்கேற்ப மாற்றிக்கொள்வார். உயர்ந்தஸ்தாயியிலே கூறவேண்டியவற்றை அந்தக்கிரமமாகவும் ஸமயத்திற் கேற்றபடி ஸ்தாயியைக் குறைக்கவுங் கற்றிருந்தனர். இவர் உபன்யாஸஞ் செய்யுங்காலுண்டான தொனி ஸமுத்திரத்தில் அலைகள் ஒன்றின்பின் ஒன்றாய்ச் சத்தித்துக் கொண்டு வருதல்போலிருக்குமாம். பார்லிமெண்டு சபையிலே பேசவேண்டிய விதம் ஒன்று. பிரஜைகளுடைய மகாநாடு கூடியிருக்கிற காலத்தில் பேசவேண்டிய முறைவேறு. புராதன கிரந்தங்களை ஐயந்திரிபறக்கற்றவரான்மையால் அவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துச்சொல்லிச் சபையோரைத் திருப்திசெய்யுந்திறமை கிலாட்ஸ்டனிடத்திலிருந்த அளவு மற்றப்பார்லிமெண்டு மெம்பர்களுக்குக் கிடை

யாதென்னலாம். சிலர் இவர் உபனியாஸங்களிலே சொற் பொழிவு உண்டென்பர். சரக்கு மட்டாயிருப்பவர்கள் வாக்கிலும் மட்டாய்த் தானிருப்பார்கள். பிரயத்தனபூர் வமாய்ச் சொற்பொழிவு கிலாட்ஸ்டனுக்கு வந்ததல்ல. இது கல்வியின் விசாலத்தால் வந்தது. இவர் உபன்யாஸத்தைக் கேட்டு ஆனந்தித்தவர்கள் உயர்ந்த ஸங்கீதத்தைக் கேட் டாற்போ லானந்தித்தார்கள். 1886-ம் வருஷத்தில் அயர் லாண்டுக்கு ஸ்வராஜ்யம் தரல்வேண்டு மென்று கிலாட்ஸ் டன் கொண்டுவந்த சட்டத்தைப் பற்றிப் பார்லிமெண்டு சபையில் எடுத்துப் பேசுங்கால் இவருடைய வாக்குச்சா துரியத்தின் மேன்மை எதிர்க்கக்ஷியி லிருந்தவர்களாலும் புகழப்பட்டது. "தோன்றிற் புகழொடு தோன்றுக" பிர சங்கஞ்செய்பவர் கேட்போர் மனத்தைக் கவருமாறு பேசு தல் உசிதம்; அன்றேல் மௌனமா யிருத்தல் நலம். ஸ்வ ராஜ்யச் சட்டத்தைப்பற்றி கிலாட்ஸ்டன் சொல்வதைக் கேட்கவென்றே பார்லிமெண்டு கட்டிடத்தில் கூடினஜனங் களுக்கு உட்காரவும் இடமில்லையாம். கிலாட்ஸ்டன் பிரசங் கம் ஸாமான்யமாகவே உயர்தரத்தது; ஸ்வராஜ்ய விஷய மாய் அவர் பேச்சைக் கேட்டவர் அவரை முன்னிலும் அதிகமாக மதிக்கலானார். உள்ளும் புறமும் ஒத்துநடந்தவ ரானபடியால் வேஷதாரிகள் போலப் பேசவில்லை.

---

## கிருஹஸ்த தருமம்.

---

பிரமசரியாச்சிரமத்திலேயே கல்வியைப் பூரணமாய டைந்தார். முப்பதாவது வயதிலே தனக்கேற்ற பதிவிரதை யாகிய காதரைன் க்லின் என்னும் பெண்மணியை மணம்

புரிந்தார். ஹவார்டென் என்னும் மாளிகையிலே ஸம்ஸாரத் தோடிருந்துவந்தார். மக்கட்பேற்றை விரும்பாதவர் மணம் புரிதல் எதற்கு? இதர அம்சங்களிற் கிலாட்ஸ்டன் அதிர் ஷ்டசாலியாயிருந்ததுபோலவே ஸந்தான விஷயத்திலும் பாக்கியஞ்செய்தவராயிருந்தார். இவர் சரித்திரத்தை அங் கிலேய பாஷையில் எழுதின ஒருவர் அதில் ஒரு புகைப் படத்தைச் சேர்த்திருக்கின்றார். கிலாட்ஸ்டன் நாற்காலியி லுட்கார்ந்து தன் பௌத்திரன் ஒருவனை முழந்தாளில் வைத்துக்குலாவிக்கொண்டிருக்கிற அவசரம். இவர் மக்க ளில் ஒருவர் சிறிதுகாலமாய்த் தென்னாப்ரிக்கா கவர்னர் ஜனரல் உத்தியோகமாயிருந்து வருகிறார். மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி அவர்கள் இவருக்கு "எர்ல் அவ் ஹவார்டென்" என்னும் பிரபுப்பட்டத்தைக் கொடுப்பதாகச் சொன்னகாலத்திலே தனக்கு அந்தப்பெரு மைவேண்டாமென்று மறுத்துவிட்டார். பார்லிமெண்டு பிரதிநிதி சபையிலே பிரஜாதிபத்தியத்தை நிலைநிறுத்துவ தற்குக் கங்கணம் பூண்டகருணை நிறைந்த கிலாட்ஸ்டன் பிரபுக்கள் சபையில் உறங்க இஷ்டப்பட்டாரில்லை. "எழு பிறப்புந் தீயவைதீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்"—பிறராற் பழிக்கப்படாத மக்களை ஒருவன் பெறு வானுயின் அவனை ஏழுபிறப்பிலும் தீவினை அணுகாது என்று தேவர் குறளில் கூறியுள்ளது. கிலாட்ஸ்டன் வயிற் றிற்பிறந்தவர்கள் உத்தமமான பிள்ளைகள். பிதாவின் வாக்கி னுக்கு எதிர்வாக்குச் சொன்னவரேயன்று. பிதா பார்லி மெண்டு மெம்பராயிருக்கையிலேயே அவர்மக்கள் இருவர் பார்லிமெண்டு மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். மகன் தந்தைக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி "உலகத் தார் அவனைப்பார்த்தபோதெல்லாம், இவன் தந்தை என்ன

தவந்தான் செய்தானோ" என்னும் சொல் என்று குறளிற் கூறியபடியே கிலாட்ஸ்டன் மக்களையும் எல்லோரும் புகழ்ந்தனர். ஐரோப்பிய கனவான்கள் இந்தியரைப்போலத் தருமத்திலே செல்வத்தைச்செலவிடுதல் இல்லையென்று சிலர் சொல்வார். பாத்திரமறிந்து பிச்சையிடுதல் ஐரோப்பியர்களுக்குள் எத்துணை ஸம்பிரதாயமாக வந்திருக்கிறதோ அத்துணை இந்தியர்களுக்குள் இல்லையெனலாம். பரோபகாரமே உருவெடுத்துவந்த கிலாட்ஸ்டன் அறஞ்செய்தாரில்லையெனல் பொய்யாகும். விவாக விமோசனச் சட்டம் விமரிசை செய்யுங்காலத்தில் கிலாட்ஸ்டன் தன்னுடைய கொள்கைகளை வெளிப்படுத்தினது முன்னரே கூறப்பட்டது. ஏகபத்னி விரதம் இவரைப்போல அனுசரித்தவர் நிரம்பச் சொற்பம். வைதிக சிரத்தை இவரிடத்தமைந்திருந்த அளவு பிரசித்தவைதிகர்களிடத்திலுமில்லை. மடாதிபதிகளும் வேதத்தினுடைய உட்கருத்தைக் கிலாட்ஸ்டன் சொன்னபடி அங்கீகரிப்பர். இராஜ்யாதிகாரத்தைச் சுமந்திருந்தவருக்கு, வேதத்தின் உட்பொருளை உணர அவகாசம் எப்போது கிடைத்ததோ அறியோம். "பிறவிப்பெருங் கடல் நீந்துவர்; நீந்தார் இறைவனடிசேராதார்" என்னும் வேதவாக்கியத்தை எக்காலத்தும் தன்மனத்திலே பதித்து இறைவனுடைய அனுமதியின்றி எந்தக் காரியத்திலும் கிலாட்ஸ்டன் பிரவேசித்ததில்லை. "உலையாமுயற்சிகளைகணுஊழின்வலி சிந்தும் வன்மை" யுண்டாகுமென்னும் உறுதிப்பாடும் கிலாட்ஸ்டனிடத்திலுண்டு.

## முயற்சிகள்.

பூரண ஆயுள், பூரண பிரக்ஞை, பூரணச்செல்வம், பூரணப்புகழ்—இந்நான்கும் படைத்தவர் முயற்சிகள் இல்லாமற் காலத்தைக் கழித்தல் இயலாதகாரியம். மேற்சொன்ன நான்கு செல்வத்தோடு அன்பையும் சேர்த்துக்கொளளல் வேண்டும். "இல்லாதவனுக்கு அன்பு இங்கு இடம்பொருள் ஏவல் மற்றெல்லாமிருந்தும் என் செய்யும்" என்றபடி அன்பில்லாவிடின் மற்றைப் பொருள்களால் நாமடையக் கூடிய நன்மை மிகச்சிறியது. சுயஜாதி, அன்னிய ஜாதியென்றபேதத்தை பாராட்டாமல் எவருக்குத்துன்பம் நேரிட்டாலும் அத்துன்பம் தன்னதே யென்றெண்ணினமையால் கிலாட்ஸ்டன் சற்றுகிலும் சும்மா இருத்தல் சாத்தியமில்லே. அக்கிரமங்கள் எங்கு நடந்தாலும் அவற்றை அந்த நிமிஷமே பத்திரிகைகள் மூலமாய்ப் பகிரங்கப்படுத்தி ஒழுங்கை நிலைநிறுத்தினர்.

பத்திரிகைகளைப் படிக்காதவர்களுக்கு விஷயங்கள் செவ்வையாகப் புலப்படுமாறு எத்துணை இடங்களிற் பிரசங்கஞ் செய்யவேண்டுமென்று பிரஜைகள் கோரினும் அவ்வவ்விடங்களுக்குப்போய்ப் பிரசங்கஞ்செய்வார். தனக்கு உதவியாக ஏற்பட்ட உத்தியோகஸ்தர் சொல்வதையே வேதவாக்காக எண்ணி உத்தரவுகளுக்குக் கையெழுத்துப் போடமாட்டார். எல்லாவற்றையுந் தீரவிசாரித்து முடிவான உத்தரவு பிறப்பிப்பார். குரூர புத்தியே இவரிடத்தில் சிறிதுமில்லே. பிரதானி உத்தியோகத்தை வகித்திருந்த காலத்தில் ராஜநிர்வாகத்திற்கு நியமனஞ்செய்வதிலே

தீர்க்காலோசனை செய்யாமல் ஒன்றையுஞ் செய்யார். இடையிடையே மதவிஷயமான வாதங்கள் வந்தால் அவற்றிலும் ஒருகை பார்த்து விடுவார். பிரதிநிதி சபையிலே கேள்விகள் கேட்கும் மெம்பர்களுக்கு ஜவாப்சொல்வது மிக்வுங் கஷ்டமானவேலை. கேள்விகள் முன்னமேயே தெரிந்திருந்தமையால் அவற்றிற்கு ஜவாப்பையும் முன்னமேயே ஆலோசித்து வைக்கவேண்டியவரா யிருந்தார். இராஜ்யபொக்கிஷ விசாரணை செய்தகாலத்தில் அனேக விஷயங்களைத் தெரிந்திருத்தல் அவசியமாயிருந்தது. அயல் தேசங்களினொழுங்குகளைக்கற்று அவற்றிற்கொத்தவாறு நடந்துவந்தார். சுயமாகவே சில மதகிரந்தங்களை எழுதினர். பிரஜைகள் ஞானத்திலும், செல்வத்திலும், சுகத்திலும் மேம்பட்டிருத்தலுக்கு எப்போதும் உபாயந் தேடிக்கொண்டிருந்தவருக்குச் சோம்பியிருக்கும் சமயம் எங்கே? சேதனனுயிருப்பவன் சோம்பியிருத்தல் கூடாதகாரியம். இவருடைய புஸ்தகசாலைக்கு "சாந்தாச்சிரமம்" என்று பெயரிட்டார். இருபதினுயிரம் கோசங்களுக்கு மேற்பட்டு புஸ்தகசாலையிலே சேகரஞ்செய்திருந்தார். அவ்விருபதினுயிரங் கிரந்தங்களையும் பூரணமாய் அறிந்திருந்தார்.

நூதனமாகக் கிரந்தங்களை எழுதினவர் கிலாட்ஸ்டனுல் நற்சாக்ஷிப்பத்திரம் பெறவேண்டுமென்று தமது கிரந்தங்களை யனுப்புவார். அவற்றின் ஸாராம்சங்களைத் தெரிந்து அவரவருக்கு ஏற்றபடி நற்சாக்ஷிப்பத்திரம் அளிப்பார்.

எந்த விஷயத்திலே தமக்குச் சந்தேகங்கள் பிறக்கின்றனவோ அவற்றைக் கிலாட்ஸ்டனைக் கேட்டுச் சந்தேகந் தெளிந்து கொண்டவர் அனேகர்.

ஒரு பெரிய ஆபீஸுக்குத் தினந்தோறும் எவ்வளவு தபால்கள் வருமோ அவ்வளவு தபால்கள் கிலாட்ஸ்டனுக்கு வரும். அவற்றிற்கு ஜவாப் எழுதுவது மிகவும் கஷ்டமான வேலை. ஆயினும் அவரவருக்குத்தக்க ஜவாப் கூடிய சீக்கிரத்திலேயே எழுதப்பட்டு வந்தது. எந்த விஷயத்தையும் இவர் புத்தி கிரகிக்கக் கூடிய நிலைமையிலிருந்ததனால் இவ்வளவு வேலையையும் பார்த்து வந்தார். இருபத்துநாலு மணி நேரத்திற்கும் வேலை இவருக்குண்டு. எப்போது தூங்கினார், எப்போது இளைப்பாறினார், எப்போது குடும்ப காரியங்களைக் கவனித்தார்—எனப் பலகேள்விகள் பிறக்கலாம். ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிட்டகாலத்தில் அந்த அந்த வேலையைச் செய்து வீண் போது போக்காவிடின் எதுதான் ஒழுங்காக நடக்காது? ஹவார்டெனிலே தங்கியிருக்கும் சமயத்தில் அந்த மாளிகையைச் சுற்றிலும் இருந்த மரங்களில் எதாவது நோய்கொண்டிருந்தால் அதைக் கோடரி கொண்டு தானே வெட்டிவிடுவார். சிற்றாட்களைக் கொண்டு வெட்டலாகாதோ? தனக்கு மனமுயற்சிமட்டில் அதிகமாயும் சரீரமுயற்சி குறைவாயு மிருந்தமையாலே இந்தமரம் வெட்டும் வேலையைத்தானேகிலாட்ஸ்டன் செய்து வந்தார். அவருடைய ஆயுதசாலையில் அனேக கோடரிகள் இன்னும் வைக்கப்பட்டிருக்கின்றன.

## குணாதிசயங்கள்.

இந்தச் சரித்திரத்தை முற்றிலும் படிப்பவர் தாமே கிலாட்ஸ்டனுடைய குணாதிசயங்களை அறிந்திருக்கலாம். அவற்றை இங்கு எடுத்துச்சொல்வது புனருத்தமாம். ஆயி

னும் உத்தம புருஷருடைய குணங்களைக் கேட்டலும் படித்த லும் எவருக்கும் நன்மையைப் பயக்குமென்னு முறுதியாற் சிலவற்றை மாத்திரம் இங்கு எடுத்துக் கூறுவோம்.

கிலாட்ஸ்டன் தன் பிதாவினுடைய வாக்கை மறுத்து என்றும் பேசினதில்லை. மாதாவினிடத்திலே பூரணமான அன்பும் பக்தியுமுடையவர். தனக்குக் கல்வி பயிற்றுவித்த உபாத்திமார்களிடத்திலே கடைசிவரையில் மரியாதையாக நடந்தார். படித்த பாடசாலைகளிடத்திலும் பிரியம் குன்ற வில்லை. ஸகபாடிகளிடத்தில் மிகுந்த விசுவாஸத்தைப் பாராட்டி வந்தார். பிரதானி உத்தியோகத்தைச் செவ்வை யாக நடத்தும் யோக்கியதையைத் தனக்கு முதலிற் போதி த்த ஸர் ராபர்ட் பீல் என்னும் கனவானை ஒருபோதும் மறந்த வரில்லை. நண்பராய் ஒரு முறை ஏற்றுக்கொண்டவரிடத் தில் மாறாத பிரியம் வைத்தார். பரதுக்கஞ் சகியாதவர்; அந்தத் துக்கத்தைத் தீர்த்தலுக்கு இயன்றமட்டும் முயற்சி செய்தார். உறவினரிடத்தில் விசுவாசம் வைத்து அவருக்கு உதவிகள் புரிந்தார். கக்ஷிக்கு எதிர்க்கக்ஷி பேசுதல் என்ற பிடிவாதம் இவரிடத்திலில்லை. எதிர்த்த கக்ஷிக்காரர் சொல் வது நியாயமாக இருந்தால் அவர்கள் சொல்லுவதை அங்கீ கரித்து அப்படியே செய்தார். இரும்பைக் காந்த மிழுக் கின்றவாறு இவரிடத்திலே கிரஹண சக்தியிருந்தது. ஒவ் வொரு இலெக்ஷனிலும் இவர் பக்கத்தில் இருந்தவர்களின் ஸங்கியை அதிகரித்துக்கொண்டே வந்தது. புத்தி விசா லத்தையடையவே புராதனக் கொள்கைகள் சிலவற்றைக் கைவிட்டார். வைதிக விஷயத்தில் நூதனஸம்பிரதாயம் ஒன்றுக்கும் இடங்கொடுத்தாரில்லை. கன்ஸெர்வெடிவ் கக்ஷி யை விட்டு லிபெரலாக மாறினது குற்றமென்று கூறுவாறு

முண்டு. சுயலாபத்தைக் கருதி அவ்வாறு செய்தவரன்று; லோகோபகாரமாகச் செய்தார். எதிர்க்கக்ஷியிலிருப்பவர்கள் விதண்டா வாதமாய்ப் பேசினால் அவருக்குப் பதிலே சொல்லமாட்டார். நேர்வழியினின்று மயிர்க்கிடையும் விலகினாரில்லை. பொருளாசை கொண்டு மானக்குறைவான காரியம் ஒன்றிலும் பிரவேசித்தவரன்று. இவரிடத்து ராஜவிசுவாஸம் குடிகொண்டிருந்ததுபோல மற்றவர்களிடத்தில் இல்லையெனலாம். ராஜவம்சத்தைச் சார்ந்தவர்களிடத்தில் மிகுந்த மரியாதையுடன் நடந்து வந்தார். துரைத்தனமென்பது, குடிகளின் நன்மையின் பொருட்டுக் குடிகளே நடத்துவது என்ற கொள்கையை அனுசரித்துப் பிரஜைகளுக்குத் துரைத்தனத்திலே செல்வாக்கு அதிகரித்தலுக்கே முயன்று வந்தார்.

## கடைசிக்காலம்.

1898-ம் வருஷத்திலே கிலாட்ஸ்டனுக்கு 89 வயது. சரீரம் மெலிந்து போனாலும் புத்திமெலியவில்லை. தீராப் பிணி ஒன்று வந்தது. அப்பிணியால் வருந்தும்போது பற்பல இடங்களிற் போய் வஸித்துப்பார்த்தார். வைத்தியர்கள் தீராநோயென்று சொன்னபின் இவர்மனம் ஆறுதலடைந்தது. அன்று முதல் வேதபடனத்தையும் கீதங்களையுங் கேட்டுக்கொண்டு நோயின் கொடுமையைச் சாந்தப்படுத்தினார். 1898ஆ மேமீ 18உ கிலாட்ஸ்டன் இறைவனடி சேர்ந்தார். அங்கிலேய ராஜ்யம் முற்றிலும் இவருக்குத் துக்கங்கொண்டாடிற்று. உற்றோரும் மற்றோரும் ஒருங்கு சேர்ந்து கிலாட்ஸ்டனுடைய பெருமைகளைப் புகழ்ந்

தனர். பத்திரிகைகளில் இவருடைய பிரதாபங்கள் வரையப் பட்டன. இவரை இகழ்ந்து பேசினவர் ஒருவராவது இல்லை. இதுவன்றோ புகழொடு தோன்றல் ?

கிலாட்ஸ்டனுடைய நிரியாண ஸமாசாரம் பார்லி மெண்டு மகாசபைக்குத் தெரிந்தவுடன் பிரபுக்கள் சபையில் ஸால்ஸ் பெரிபிரபுவும்,பிரதிநிதி சபையில் கனம் பால்பர் அவர்களும்சரம்உபனியாஸங்கள் செய்தார்கள். அந்த உபனி யாஸங்கள் கிலாட்ஸ்டனுடைய குணங்களைப் பிரஸித்தஞ் செய்தனபோல நண்பர்களும் செய்திருத்தல் முடியாது. கிலாட்ஸ்டனுடைய உத்தரக்கிரியைகளைத் துரைத்தனத்தா ரே பணம்போட்டுச் செய்யவேண்டுமென்று சக்கிரவர்த்தினி யாருக்குத் தெரிவிக்க அவ்வாறே அனுமதிபெற்று கிலாட்ஸ் டனுடைய சரீரம் ஹவார்டனிலிருந்து லண்டன் நகரத் துக்கு மணக்கோலம்போலக் கொண்டுவரப்பட்டுப் பிரசித்த புருஷர்களுக்கேற்பட்ட ஸ்தானமாகிய வெஸ்ட்மின்ஸ்டர் அபேபிரகாரத்திலே கனனஞ்செய்யப்பெற்றது. மகாராணி யவர்கள் கிலாட்ஸ்டன் மனைவியைத் துக்கப் பிரச்னஞ் செய்து ஸ்வஹஸ்த லிகிதம் அனுப்பினர். கிலாட்ஸ்டனு டைய ஞாபகச்சின்னமாக லண்டன் நகரத்திலே ஸ்டிராண்டு என்னும் பாகத்திலே அவரைப்போன்ற சிலை ஒன்று செய் யப்பட்டு வைத்திருக்கிறது. அதைப்பார்ப்பவர் எல்லோ ரும் பரோபகாரிகளின் பெருமையை அறிந்து கிலாட்ஸ் டனைப்போலத் தாமும் கீர்த்திபெறவேண்டும் என்ற ஆவ லையடைகின்றார்கள்.

சுபமஸ்து.



கிலாட்ஸ்டனுடைய ஞாபகார்த்தமாகச்
செய்துவைக்கப்பட்ட சிலை.

## விசேஷக்குறிப்பு.

அங்கிலேய அரசாட்சியின் நிர்வாக மந்திராலோசனைச் சபைக்கு "காபினெட்" என்றுபெயர். அந்தச்சபையின் அவயவிகளே ராஜ்யபாரத்தை வகிப்பவர். அந்தச் சபையிலுள்ளவர் வகிக்கும் உத்தியோகங்கள் கீழே சொல்லப்பட்டவை.

I

ப்ரீமியர் அல்லது பிரதானி.

II.

சான்செலர் அவ்தி எக்ஸ்செகர் அல்லது ராஜ்ய பொக்கிஷ விசாரணைக்கருத்தர்.

III

ஹோம் ஸெக்ரிடெரி என்னும் இங்கிலாண்டு தேச விசாரணைக்கருத்தர்.

IV

பாரென் ஸெக்ரிடெரி என்னும் அயல் ராஜ்யங்களின் விசாரணைக்கருத்தர்.

V

வார் ஸெக்ரிடெரி என்னும் தரைப்படை விசாரணைக் கருத்தர்.

VI

கலோனியல் ஸெக்ரிடெரி என்னும் குடியேறப்பட்ட நாடுகளின் விசாரணைக்கருத்தர்.

VII

லார்ட் சான்ஸெலர் என்னும் பிரபுக்கள் ஸபை அக்ராஸனாதிபதி.

## VIII

லார்ட் பிரஸிடெண்டு என்னும் காபினெட் அக்ராஸனாதிபதி.

## IX

வியாபார விசாரணைக்கருத்தர்.

## X

கப்பற்படை விசாரணைக்கருத்தர்.

## XI

இந்தியா விசாரணைக் கருத்தர்.

## XII

அயர்லாண்டுதேசத்து ராஜப் பிரதிநிதி.

## XIII

அயர்லாண்டு பிரதான காரியதரிசி.

மேற்குறித்த பதின்மூன்று பேர்களுடன் இன்னுஞ் சில உத்தியோகஸ்தர்களையும் சேர்த்துக்கொள்வதுண்டு. இவர்களனைவரும் பிரபுக்கள் ஸபையிலாவது, பிரதிநிதிகள் சபையிலாவது மெம்பர்களாயிருத்தல் அவசியம். பிரதானி, பிரபுக்களிலொருவராகவாவது பிரதிநிதிகளிலொருவராகவாவது இருத்தலாகும். பதின்மூன்று பேர்களிற் பெரும்பான்மையரும் பிரதிநிதி சபை மெம்பர்களாகவேயிருப்பார்கள். பிரதான ஸெக்ரிடெரி பிரபுக்கள் ஸபை மெம்பராயிருப்பின் உதவி ஸெக்ரிடெரி பிரதிநிதி சபையிலிருப்பார். இரண்டிடத்திலும் பிறக்குங் கேள்விகளுக்கு உத்தரஞ் சொல்லத்தக்க மெம்பர்களிருத்தல் வேண்டும்.

1858- வருஷத்தில் கம்பெனி அரசாட்சி ஒழிந்து மகாராணி அவர்களே இந்தியாவை நேரில் ஆளச்சட்டம் ஏற்

பட்டகாலத்திலே கிலாட்ஸ்டன் முக்கியமான ஒரு விஷயத்தை ஸ்தாபித்தார். அதாவது:—இந்துதேசப் படைகளை வெளிநாட்டிற் சண்டைக்கு அனுப்பினால் பார்லிமெண்டாருடைய அனுமதி பெற்றனுப்புதல் வேண்டும்.

1878–80-ம் வருஷங்களில் ஆப்கானிஸ்தானத்தில் நடந்த யுத்தச் செலவுகளுக்காக கிலாட்ஸ்டன் அங்கிலேய பொக்கிஷத்திலிருந்து இந்தியாவுக்கு 50 லக்ஷம் பவுன் கொடுக்கும்படி செய்தார். லிட்டன் பிரபு கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில் ஆப்கன் யுத்தம் ஸம்பவித்ததென்று முன்னரே கூறப்பட்டுள்ளது. காங்கிரெஸ் மகாஸபையின் கோரிக்கைகளை உதாசீனித்தல் கூடாதென்று அங்கிலேயருக்கு உபதேசஞ் செய்தார்.

கிலாட்ஸ்டன் பிரஜாதிபத்தியத்தில் அபிமானமுள்ளவரானமையால் 1892-ம் வருஷத்தில் சட்ட நிருமாண சபைகளில் மெம்பர்களை ஜாஸ்தி செய்தகாலத்தில் "பேருக்குப் பிரதிநிதிகளாயில்லாமல் வாஸ்தவமான பிரதிநிதிகள் இந்தியா சட்டநிருமாண சபைகளில் நியமனம்பெறல் வேண்டும்" என்று சொன்னார். இந்தியாவின் க்ஷேமலாபங்களிற் கவலை வைத்தவரென்று மேற்கூறியவற்றால் செவ்வையாக விளங்கும்.

6136

---

S. MURTHY AND CO., MADRAS.

கும்பகோணம்
# இந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியாரால்
*பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள்.*

:o:

## ENGLISH BOOKS.

| No. | Title | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| 1. | *A Manual of Translation ... ... | 0 | 8 | 0 |
| 2. | *The History of England (*From the earliest times to* 1485) ... ... | 0 | 6 | 0 |
| 3. | *A New Poetical Reader (*For Upper Secondary Classes*... ... ... | 0 | 12 | 0 |
| 4. | The Story of Sellathammal ... ... | 0 | 2 | 0 |

## தமிழ் புத்தகங்கள்.

| No. | Title | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| 5. | *ஸுசீலா ஸ்வயம்வரம் ... ... ... | 0 | 2 | 0 |
| 6. | *ஸமனஸன் நாடகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | *மார்த்தவி பிரியவதன பரிணயம் ... ... | 0 | 1 | 6 |
| 8. | *அரவிந்தன் கமலாக்ஷி ... ... ... | 0 | 2 | 0 |
| 9. | *உல்லாஸன் சரிதம் ... ... ... | 0 | 5 | 0 |
| 10. | *ஈனக் ஆர்டன் முதலியன ... ... | 0 | 3 | 0 |
| 11. | *இஸபெல்லா சரித்திரம்... ... ... | 0 | 2 | 0 |
| 12. | *செல்லத்தம்மாள் சரித்திரம் ... ... | 0 | 2 | 0 |
| 13. | *சுந்தரகாண்டம்- நாடகம்-சிறுவர்களுக்கு ... | 0 | 4 | 0 |
| 14. | ஜேம்ஸ். ஏ. கார்பீல்டு சரிதம் ... ... | 0 | 10 | 0 |
| 15. | இராமாயண அகவல் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | *வானசாஸ்திரம் [படங்களுடன்] ... ... | 1 | 0 | 0 |
| 17. | ஹேமவர்மன் கதை<br>வெனிஸ்வர்த்தகன் கதை<br>லோஹிதன் கதை ... ... | 0 | 4 | 0 |
| 18. | ஆமணக்கு நெய்பிதிலியும்<br>கெரோஸினெயல் டின்னும் ... ... | 0 | 0 | 6 |
| 19. | *செய்யுட் கலம்பகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 20. | ஹாம்லெட் ... ... ... ... | 0 | 8 | 0 |
| 21. | சுந்தராம்பாள்-ஓர் புதிய துப்<br>பறியும் இனிய தமிழ் நாவல் ... ... | 1 | 0 | 0 |
| 22. | *மச்சரான் என்னும் மாரிகாலக்காதை. ... | 0 | 8 | 0 |

*நக்ஷத்திரப்புள்ளிபோட்டவை ஸர்க்காரால் பாடசாலைகளில் உபயோகிக்கலாமென்று அங்கீகரிக்கப்பட்டவை.

Printed at the Sri Krishna Vilasa Press, Kumbakonam.